★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 டிசம்பர் 22 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 91 இல. 303 | Friday 22, December, 2023 | 20 பக்கங்கள் | 50/-

## சிவனொளிபாதமலை யாத்திரை விசேட வர்த்தமானி வெளியீடு

சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பமாகவுள்ளதால், கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களை உள்ளடக்கி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 26 முதல் 2024.05.24 வரை சிவனொளிபாதமலை யாத்திரை காலம் நடைபெறவுள்ளது. இதில்,கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் இரத்தினபுரி மாவட்ட அரசாங்க அதிபரினால் 06

விரிவுபடுத்தப்பட்ட வரவு செலவுக்காக

## மூன்று வருடங்களின் பின்னர் மாகாணங்களுக்கு ரூ.11,250 மில்.

**மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் கூட்டத்தில் ஜனாதிபதி**

மூன்று வருடங்களுக்கு பின்னர் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் (11,250 மில்லியன்) 1,125 கோடி ரூபா, மாவட்டங்களுக்காக விரிவுபடுத்தப்பட்ட வரவு செலவாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால், எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் அந்த நிதியை மாகாண செயலாளர்களுக்கு வழங்க எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவர்களுடன் (21) நடைபெற்ற கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியினால் 03 வருடங்களாக மாவட்டங்களுக்காக விரிவுபடுத்தப்பட்ட வரவு செலவுகள் வழங்கப்படவில்லை. அதனால் கிராமிய பொருளாதாரம், 06

## அஸ்வெசும:,1410,064 குடும்பங்களுக்கு 1,087 கோடி 30 இலட்சம் ரூபா விடுவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சமுர்த்தி, வருமானம் குறைந்த குடும்பங்கள் மற்றும் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களுக்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவின் டிசம்பர் மாதத்திற்கான பணம் வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக 8,793 மில்லியன் ரூபா நிதி திறைசேரியிலிருந்து நேற்று வங்கிகளுக்கு 06

எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும்

## போதைப்பொருள் வர்த்தகம், பாதாள உலக செயற்பாடுகள் ஒடுக்கப்படும்

**எதிர்கால சந்ததி அச்சமின்றி வாழும் சூழல் உருவாக்கப்படும்**



நாட்டில் போதைப்பொருள் வர்த்தகத்தையும் பாதாள உலக செயற்பாடுகளையும் ஒடுக்கும் நடவடிக்கைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பூரண ஆதரவு வழங்கியுள்ளதால், எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் போதைப் பொருள் வர்த்தகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் எனவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

நாட்டுக்கு பெரும் கேடாக விளங்கும் போதைப்பொருள் பாவனையையும் பாதாள உலக செயற்பாடுகளையும் ஒடுக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். 06

காணி விடுவிப்பு, மீள் குடியமர்த்தல், நல்லிணக்கம்

# வடக்கு, கிழக்கு தமிழ் எம்.பிக்கள் ஜனாதிபதியுடன் சந்தித்துப் பேச்சு

**தமிழக அகதி முகாம்களில் உள்ள இலங்கை தமிழ் மக்களது பிரச்சினைகள், தேவைகள் குறித்தும் எடுத்துரைப்பு**

**வடக்கு, கிழக்கு அபிவிருத்தி குறித்தும் விரிவாக கலந்துரையாடினர்**





காணி விடுவிப்பு, மீள் குடியமர்த்தல், நல்லிணக்கத்துக்கு அமைவாக சட்டத்தை நடைமுறைப்படுத்தல், தமிழக அகதி முகாம்களிலிருக்கும் இலங்கையரின் பிரச்சினைகள், வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதியுடன் வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கலந்துரையாடினர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (21) நடைபெற்றது.

இதன்போது நல்லிணக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது. குறிப்பாக காணி விடுவிப்பு உள்ளிட்ட, வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் சாத்தியமான கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஆர்.சம்பந்தன், எஸ்.இராசமாணிக்கம், ஜீ.கருணாகரன், 06



## DRONE தொழில்நுட்பத்தில் டெங்கு ஒழிப்பு ஏற்பாடுகள்

**அமைச்சர் ரமேஷ் பத்திரன களஆய்வு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

டெங்கு நுளம்பு உற்பத்தி இடங்களை அழிக்கும் நடவடிக்கைகளின் போது, சம்பந்தப்பட்ட ஊழியர்கள் செல்லமுடியாத இடங்களில், ட்ரோனர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். டெங்கு நுளம்பு முட்டையிட்டுள்ள பகுதிகளை Drone தொழில்நுட்பம் மூலம் அழிப்பதற்கு திரவங்களை தெளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

டெங்கு ஒழிப்பு தொடர்பான மீளாய்வுக் கூட்டம் சுகாதார அமைச்சரின் தலைமையில் நடைபெற்றது. இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மத்தியில் 06

## பண்டிகைக்காலம்: நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு, ரயில், பஸ் சேவைகள்



பண்டிகை காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

இதற்காக பதில் பொலிஸ் மாஅதிபர் ஏற்கனவே இரண்டு விசேட சுற்று நிருபங்களை வெளியிட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

எதிர்வரும் நத்தார் பண்டிகை தினமன்று கத்தோலிக்க தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு 06

## பாதாளகோஷ்டி, போதைப் பொருள் ஆறு மாதத்துக்குள் முடிவுக்கு வரும்


**தேசபந்து தென்னக்கோன்**



பாதாள உலகச்செயற்பாடுகள், போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கைகள் இன்னும் ஆறுமாதங்களுக்குள் முடிவுக்குக் கொண்டு வரப்படுமென பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஒட்டுமொத்த நாட்டையும் ஆக்கிரமித்துள்ள போதைப் பொருள் மற்றும் பாதாள உலகக் குழு செயற்பாடுகள் விரைவில் முடிவுக்கு 06

## பாடசாலைகளுக்கு இன்று முதல் பெப். 01 வரை விடுமுறை



அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் அனைத்திற்கும் இன்று (22) விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 01ஆம் திகதி (01.02.2024) பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. 2023ஆம் ஆண்டுக்கான அரச மற்றும் அரச அனுசரணையுடன் 06

## புதிய இந்திய உயர்ஸ்தானிகர் இலங்கையை வந்தடைந்தார்

**ஓரிரு தினங்களில் கடமை பொறுப்பேற்பு**



இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் ஸ்ரீ சந்தோஷ் ஜா கொழும்பை வந்தடைந்தார். ஓரிரு நாட்களுக்குள் இவர், தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக 06

## வடக்கு - கிழக்கில் பலத்த மழைக்கான சாத்தியம்:


வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் பலத்த மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில். 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 06

## தினகரன் வாரமஞ்சரி
### 24ஆம் திகதி பத்திரிகையுடன் வர்த்தமானி வெளிவராது

பிரதி ஞாயிறு தோறும் தினகரன் வாரமஞ்சரியுடன் இலவசமாக வெளிவரும் அரசவர்த்தமானி, எதிர்வரும் 24 ஞாயிற்றுக்கிழமை தினகரன் வாரமஞ்சரியுடன் வெளிவராது என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். எதிர்வரும் 31ஆம் திகதி முதல் வழமைப் போன்று வர்த்தமானி வெளிவரும் என்பதை அறியத்தருகிறோம்.

## தொழில்நுட்ப கோளாறு விமானம் திடீர் தரையிறக்கம்



மாலைதீவு நோக்கி பயணித்த ஸ்ரீலங்கன் விமானம், புறப்பட்ட 10 நிமிடங்களில் மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது.

விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக மீண்டும் தரையிறக்கப்பட்டதாக கட்டுநாயக்க விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்போது அந்த ஏர்பஸ் ஏ330 ரக விமானத்தில் 201 பயணிகள் இருந்தனர். அந்த விமானத்தில் 06

சூறாவளி, சுனாமி அடித்தாலே தவிர

## தமிழரசுக் கட்சியின் மாநாடு திட்டமிட்டபடி நடத்தப்படும்



சீரற்ற காலநிலையால் சூறாவளி அல்லது சுனாமி அடித்தாலே தவிர இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடும், புதிய தலைவர் தெரிவும் திட்டமிட்டபடி நடைபெறுமென்று கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு தொடர்பில் ஊடகங்களுக்குக் 06



03 **இறக்குமதியான முட்டைகள் ச.தொ.சவில் ரூ. 35க்கு விற்பனை**


## ஜப்பானில் தொழில் தருவதாக பல இலட்சம் ரூபா பண மோசடி

**அநுராதபுரத்தில் ஒருவர் கைது**

ஜப்பானில் வேலைவாய்ப்பு தருவதாக கூறி பண மோசடி செய்த குற்றச்சாட்டில், சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் அநுராதபுரம் பிரதேசத்தை சேர்ந்த 58 06

# நகர்வலம்



## ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் கிறிஸ்மஸ் கரோல் கீத நிகழ்வு

### ஜனாதிபதி ரணில் ஆரம்பித்து வைப்பு





ஜனாதிபதி அலுவலகம், சுற்றுலா அபிவிருத்திச் சபை, முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து ஜனாதிபதி அலுவலக வளாகத்திலும் அதனை அண்டிய பகுதியிலும் வருடாந்தம் ஏற்பாடு செய்யும் விஷேட கிறிஸ்மஸ் கரோல் கீதம் இசைக்கும் நிகழ்வு மற்றும் கிறிஸ்மஸ் வலயம் ஆகியவற்றை (20) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து வைத்தார்.

ஜனாதிபதி செயலக வளாகத்தில் மின்விளக்குகளை ஏற்றி இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி, கிறிஸ்மஸ் கரோல் கீதம் இசைக்கும் நிகழ்விலும் கலந்துகொண்டார்.

கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்வு இலங்கை கடற்படையின் பாடல் மற்றும் வாத்தியக் குழுவினரால் நிகழ்த்தப்பட்டதுடன், இந்த கிறிஸ்மஸ் கரோல் கீதம் இசைக்கும் நிகழ்வு நாளை 23 ஆம் திகதி வரை ஜனாதிபதி செயலக வளாகத்தில் இரவு 7.00 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறவுள்ளது.

நேற்று (21) இலங்கை விமானப்படையினரும், இன்று (22) இலங்கை இராணுவத்தினரும், நாளை மறுதினம் (23) இலங்கை பொலிஸ் பாடல் மற்றும் வாத்தியக் குழுவினரும், இணைந்து கிறிஸ்மஸ் கரோல் கீதம் இசைக்கும் நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளனர்.

ஜனாதிபதியுடன் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் ஜனாதிபதி அலுவலக சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் முப்படை தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவு சிரேஷ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

## லேக்ஹவுஸ் நிறுவனத்தில் நத்தார் நிகழ்வு







லேக்ஹவுஸ் கத்தோலிக்க சங்கத்தின் ஏற்பாட்டில் நத்தார் கரோல் கீதங்கள் இசைக்கும் நிகழ்ச்சி நிறுவனத்தில் நேற்றைய தினம் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் பேரருட் திரு. மேக்ஸ்வெல் சில்வா கலந்துகொண்டதுடன் விசேட அதிதிகளாக லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், ஆசிரிய பீட பணிப்பாளர் சிசிர பரணதந்திரி, சட்டம் மற்றும் நிர்வாக பணிப்பாளர் ஜனக ரணதுங்க, நிதிப் பணிப்பாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன உள்ளிட்ட நிர்வாக தலைவர்கள், ஊழியர்கள் எனபலரும் கலந்துசிறப்பித்தனர்.


(படம் : சுதத் நிசாந்த)

2023 ஜனவரி முதல் நவம்பர் வரை...

## யானை – மனித மோதலில் சுமார் 40 பேர் உயிரிழப்பு

### அநுராதபுரம் மாவட்ட தகவலில் தெரிவிப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**



2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் யானை மனித மோதலினால் அநுராதபுரம் மாவட்டத்தில் 40 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் இந்த ஆண்டு அதற்குரிய இழப்பீடாக 5,48,77720.00 ரூபாய் பணம் வழங்கப்பட்டுள்ளது. இது இம்மாவட்டத்தின் 22 பிராந்திய செயலகப் பிரிவுகளில் ஏற்பட்ட சொத்து சேதம், உயிர் சேதம் மற்றும் உடல் ரீதியான சேதங்களுக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டு தொகையாகும். இதில் 710 சொத்து சேதம், 33 உயிர்ச் சேதம் மற்றும் 47 உடல் சேதம் ஆகியவற்றுக்கானதாகும். இந்த தரவு விபரம் ஜனவரி முதல் அக்டோபர் மாதம் வரையிலாகும்.

யானை மனித மோதலில் மனிதர்கள் மட்டுமின்றி யானைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் மட்டும் 83 யானைகள் உயிரிழந்துள்ளன. அங்கீகரிக்கப்படாத மின்சார வேலிகள், வேலிகள் மற்றும் துப்பாக்கிச் சூடு போன்ற சட்டவிரோத மனித நடவடிக்கைகளால் 49 யானைகள் உயிரிழந்துள்ளன. 34 யானைகள் இயற்கை மற்றும் பிற காரணங்களால் இறந்துள்ளன. இதனால் இந்த மோதல் சூழ்நிலைகள் யானைகள் மற்றும் மனிதர்களின் வாழ்க்கையை கடுமையாகப் பாதித்துள்ளன. சுற்றுச் சூழலைச் சீராக்க வேண்டுமானால், மனிதர்களும் விலங்குகளும் இருக்க வேண்டும்.

மேலும், இந்த யானைகளால் நாட்டின் பொருளாதாரமும் ஏதோ ஒரு வகையில் வலுப் பெறுகிறது. இவ்வாறான நிலையில் நாட்டுக்கு தேவையான டொலர்களை ஈட்டித் தரும் முதல் இணைப்பாக யானைகள் காணப்படுகின்றன.

அநுராதபுரம் பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை, அதாவது வில்பத்து தேசிய பூங்கா மற்றும் எழுவன்குளம் ஆகிய இடங்களுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளால் நவம்பர் மாத வருமானமாக 20780206.80 ரூபா கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது.

## கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் 31 கதைப்புத்தகங்கள் வெளியீடு




**ருஸைக் பாரூக்**

கொழும்பு சாஹிரா கல்லூரி எழுத்தாளர் மன்றத்தின் ஏற்பாட்டில் கல்லூரி மாணவர்களின் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் 31 கதைப் புத்தகங்கள் கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் சாஹிரா கல்லூரி அப்துல் கபூர் மண்டபத்தில் அண்மையில் வெளியிடப்பட்டது.

எழுத்தாளர் மன்றத்தின் பொறுப்பாசிரியர் ஷஸ்னா அஸ்லம் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவின் பிரதம அதிதி ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவரும், சவூதி அரேபியா அரபு நியூஸ் கொழும்பு நிருபர் மற்றும் கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியருமான மொஹமட் ரசூல்தீன் மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார். மேலும் மன்றத்தின் புதிய நிர்வாக உறுப்பினர்களுக்கு இதன்போது பதக்கங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் அல் ஹிக்மா கல்லூரி அதிபர் முஸ்தபா மஹ்ஸூர், அம்ரா நுஸ்ரத் மற்றும் ஜெயனிகா துலாஞ்சலி ஆகியோர் தமிழ், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி புத்தகங்களை மதிப்பாய்வு செய்தனர். அத்துடன் எழுத்தாளர் தினப் போட்டிகளில் பங்குபற்றிய ஏனைய பாடசாலைகளுக்கிடையிலான மாணவர்களுக்கு அதிதிகளினால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது அதிபர் ரிஸ்வி மரிக்கார் முஹம்மது ரசூல்தீனுக்கு கல்லூரியின் சார்பில் பாராட்டுச் சின்னம் வழங்கி வைத்தார்.

## கெச்சிமலை தர்காவில் புகாரி பாராயணம் தமாம்




வரலாற்று பிரசித்தி பெற்ற கெச்சிமலை தர்காவில் வருடாந்த புனித ஸஹீஹுல் புகாரி மற்றும் முஸ்லிம் ஹதீஸ் கிரந்தங்களின் பாராயண நிகழ்வின் தமாம் வைபவம் அண்மையில் சங்கைக்குரிய அஷ்ஷெய்க் மௌலவி ஸகி அஹமட் (அஷ்ரபி) பின் அஷ்ஷெய்க் காலிப் அலவி அலவியதுல் காதிரி தலைமையில் நடைபெற்றது. இதன்போது உலமாக்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்துகொண்டுள்ளதை படங்களில் காணலாம்.

## பாகிஸ்தான் உயர் ஸ்தானிகருக்கு பிரியாவிடை



இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் ஓய்வு. உமர் பாருக் அல் புர்கி தனது பதவிக்காலத்தை பூர்த்தி செய்துவிட்டு நாடு திரும்பவுள்ளார். இதனை முன்னிட்டு அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியினால் உயர்ஸ்தானிகருக்கு கொழும்பில் பிரியாவிடை வைபவமொன்று ஒழுங்கு செய்திருந்தது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உட்பட முஸ்லிம் லீக் வாலிப முன்னணியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

(படம் அஷ்ரப் ஏ சமத் )

## உடபிட்டிய அல் ஹுஸ்னாவில் பழைய மாணவர் ஒன்றுகூடல்

கண்டி, தெல்தோட்டை, பள்ளேகம உடபிட்டிய அல் ஹுஸ்னா மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. குறித்த ஒன்றுகூடலின் போது 2024ம் ஆண்டுக்கான பழைய மாணவர் சங்கத்திற்கான புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யும் நிகழ்வும், 2022 – 2023 விளையாட்டுத்துறை மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இதன்போது இடம்பெறவுள்ளன.

எனவே, குறித்த ஒன்றுகூடலில் சகல பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் பாடசாலையின் அதிபர் ஏ.எல். ஹைதர் அலி அழைப்பு விடுத்துள்ளார்.

## சீனன்கோட்டை அல்ஹுமைஸராவில் இன்று அரபு மொழித்தின விழா

பேருவளை கோட்டக்கல்விப் பிரிவிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்களை உள்ளடக்கி ஒழுங்கு செய்துள்ள அரபு மொழித் தின விழா நிகழ்வுகள் இன்று (22) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் 11.30 மணிவரை சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் எஸ்.எம். ஜாபிர் ஹாஜியார் மாநாட்டு மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எம். இப்றாஹீம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கல்வியமைச்சின் முஸ்லிம் பாடசாலைகளுக்கு பொறுப்பான கல்வியதிகாரிகள் உட்பட மாவட்ட கல்வித்திணைக்கள பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## தந்தை செல்வா நற்பணி மன்ற ஏற்பாட்டில் நடைபஜனை

தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் தந்தை செல்வா அறநெறி பாடசாலையால் வருடாந்தம் நடாத்தப்படும் மார்கழி திருவாதிரை நடைபஜனை எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 6.00 மணிக்கு கொழும்பு மத்திய இந்து வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு கொச்சிக்கடை பொன்னம்பலவானேஸ்வர ஆலயத்தை சென்றடையும். இந்த நிகழ்வை சிறப்பிப்பதற்காக இந்து மாமன்றத்தின் உபதலைவர் தனபால, விவேகானந்த சபையின் ஊடக பொறுப்பாளர் தயாநிதியும் கலந்து சிறப்பிப்பார். இதற்கான ஒழுங்குகளை மன்றத் தலைவர் லயன் ரவிந்திரன், பொதுச்செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம், நிர்வாகச் செயலாளர் திருமதி புவனேஸ்வரி ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

# மலையக தமிழர் தொடர்பில் பிரிட்டனுக்கு பாரிய கடப்பாடு

## பிரிட்டன் தூதுவரிடம் மனோ MP தெரிவிப்பு

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழர் நல வாழ்வு தொடர்பில், பிரிட்டனுக்கு பாரிய கடப்பாடு உண்டென தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், பிரிட்டன் உயர் ஸ்தானிகர் அன்ரூ பெட்ரிக்கிடம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து 1823 இல்,இலங்கைக்கு எங்களை அழைத்து வந்ததும் பிரிட்டன்தான். அதேபோன்று 1948 இல், எங்களை அம்போவென கைவிட்டதும் பிரிட்டன்தான்.

இவற்றைக் கூறி குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்க வரவில்லை. இந்த வரலாற்றை நினைவூட்டவே இங்கு வந்ததாகவும் மனோகணேசன் எம்பி,தெரிவித்தார்.

பிரிட்டன் உயர் ஸ்தானிகர் அன்ரூ பெட்ரிக்கை சந்தித்த போதே தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் தலைவர் மனோ கணேசன் எம்பி மற்றும் பிரதி தலைவர் வி. இராதாகிருஷ்ணன் எம்பி மற்றும் பிரிட்டன் உயர் ஸ்தானிகர் அன்ரூ பெட்ரிக் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. பிரிட்டன் உயர் ஸ்தானிகரிடம் கோரிக்கைகளடங்கிய ஆவணத்தை கையளித்த மனோ கணேசன் எம்பி இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றம் வரும்போதெல்லாம், 1948இல் இலங்கையின் வெளிநாட்டு வைப்பு, ஜப்பானுக்கு அடுத்தப்படியாக ஆசியாவில் அதிகமாக இருந்தது என்று சொல்லுவார். அது உண்மை. அன்று இலங்கையில் இருந்த ஒரே ஏற்றுமதி தொழில் தேயிலை, இறப்பர் ஆகிய பெருந்தோட்ட தொழில்துறைதான். எமது மக்களின் உழைப்பு, வியர்வை, இரத்தம் ஆகியவைதான் அந்நியச் செலாவணியை அதிகரித்திருந்தது. இதை, பிரிட்டன் உணர வேண்டும்.

ஆனால், 1948இல் சுதந்திரத்தின் பின்னர் எமக்கு கிடைத்த பரிசு எமது குடியுரிமை பறிப்பு, வாக்குரிமை பறிப்பு ஆகியவைதான். ஆனால், இங்கேதான் பிரித்தானியாவின் பொறுப்பு தவற விடப்பட்டது. 1948ல் இலங்கை குடியரசு ஆகவில்லை. 1972 வரை எமது நாடு டொமினியன் அந்தஸ்த்தில் இருந்தது. பிரிட்டன் மகாராணிதான் எங்கள் நாட்டு தலைவராக இருந்தார். 1972 வரை,இங்கே அவரது பிரதிநிதி மகா தேசாதிபதி இருந்தார்.

ஆகவே பிரிட்டன் மகாராணியின் அரசாங்கத்தின் கண்களுக்கு முன்தான் இந்த உலக மகா அநீதி நிகழ்ந்து. எமது குடியுரிமையும், வாக்குரிமையையும் பறித்து எம்மை நாடு கடத்திய போது பிரிட்டன் பார்த்துக்கொண்டு இருந்தது. கால்நடைகளை பகிர்ந்து கொண்டதைப் போன்று இந்தியாவும் எமது மக்களை சிறிமாசாஸ்திரி ஒப்பந்தம் மூலம் உள்வாங்கிகொண்டது.

இதனால் எங்கள் அரசியல் அதிகாரம் இலங்கையில் பலவீனமடைந்தது. அந்த சிறிமாசாஸ்திரி ஒப்பந்தம் இல்லாவிட்டால் இன்று இலங்கை பாராளுமன்றத்தில் 25 மலையக தமிழ் எம்பிக்கள் இருந்திருப்போம். வடக்கு, கிழக்கு தமிழ் சகோதர எம்பிகளுடன் சேர்த்து இலங்கையில் 50 தமிழ் எம்பிக்களுக்கு குறையாமல் பலமாக இருந்திருப்போம். இலங்கையின் இனப்பிரச்சினை இந்தளவு மோசமடைந்திருக்காது. இவை அனைத்துக்கும் ஆரம்பம், 1948இல் சுதந்திரத்தின் பின் மலையக தமிழ் மக்களின் குடியுரிமை பறிப்பு, வாக்குரிமை பறிப்பு ஆகியவைதான்.

# ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசில் GCE A/L மாணவர்களுக்கு 6,000 ரூபா

## விண்ணப்பங்கள் ஏற்பு இன்றுடன் நிறைவு




உயர்தர மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியம் வழங்கும் புலமைப்பரிசில்கள் தொடர்பான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது இன்று (22) நிறைவடைகிறது.

இம்முறை க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பணிப்புரைக்கு அமைய,கடந்த வருடம் கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் இதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் டிசம்பர் மாதம் 01ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

நாட்டின் நூறு கல்வி வலயங்களையும் உள்ளடக்கும் வகையில், ஒவ்வொரு வலயத்திலிருந்தும் 50 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, 5,000 மாணவர்களுக்கு மாதாந்தம் 6,000 ரூபா புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

2022 (2023) ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு முதல் முறையாகத்தோன்றி, பரீட்சையில் சித்தி பெற்று, உயர்தரம் கற்கத் தகுதிபெற்று, அரச பாடசாலையிலோ அல்லது கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலையிலோ கல்வி பயிலும், விண்ணப்பதாரரின் குடும்பத்தின், மாத வருமானம் ரூ. 1,00,000 வுக்கு குறைவாக இருந்தால், இந்த புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்த புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் அது தொடர்பான விபரங்களை ஜனாதிபதி செயலகத்தின் இணையத்தளங்கள்: presidentsoffice.gov.lk, ஜனாதிபதி நிதியம்: presidentsfund.gov.lk மற்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு: pmd.gov.lk ஆகியவற்றிற்குச் சென்று பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பங்களை முறையாகப் பூர்த்தி செய்த பின், குறித்த மாணவர்கள், 2023 டிசம்பர் 22ஆம் திகதிக்கு முன், தாங்கள் பரீட்சை எழுதிய பாடசலையின் அதிபரிடம் விண்ணப்பங்களை ஒப்படைக்க வேண்டும். செல்லுபடியாகும் காலம் மீண்டும் நீட்டிக்கப்படாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரசின் இரண்டு உரக்கம்பனிகளை ஒரே கம்பனியாக இணைக்க முடிவு

## வீண் விரயம் தடுப்பு, இலாபமீட்டுவதே நோக்கம்

அரசாங்கத்துக்கு சொந்தமான இலங்கை உரக் கம்பனி (Ceylon Fertilizer Company) மற்றும் கொழும்பு கொமர்ஷியல் உரக் கம்பனி (Colombo Commercial Fertilizers) ஆகிய இரண்டையும் ஒன்றிணைக்க விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, அரசுக்குச் சொந்தமான இந்த இரண்டு உர நிறுவனங்களும் ஒரு தலைவர் மற்றும் ஒரு பணிப்பாளர் சபையின் கீழ் ஒரு நிறுவனமாக செயற்படும்.

இதற்காகான முயற்சிகளை விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர எடுத்துள்ளார்.

இதன் மூலம் ஒரே விடயத்தின் கீழ் பிரிக்கப்பட்ட நிறுவனங்களை இணைப்பதன் மூலம், பொதுமக்களின் நிதி விரயமாவதைக் தடுத்து, அந்தந்த நிறுவனங்களின் இலாபத்தைப் பெருக்குவதே நோக்கமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ், இதே விடயத்தின் கீழ் மேலும் பல நிறுவனங்களை இணைப்பதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அரசுக்கு சொந்தமான சிலோன் உர நிறுவனம் மற்றும் வர்த்தக உர நிறுவனம் என்பன State Fertilizer Corporation என, பெயர் மாற்றம் செய்யப்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளதாக தற்போது இரண்டு நிறுவனங்களின் தலைவராக கடமையாற்றும் கலாநிதி ஜகத் பெரேரா தெரிவித்தார்.

# இறக்குமதியான முட்டைகள் ச.தொ.சவில் ரூ. 35க்கு விற்பனை



(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாடளாவிய ரீதியில் உள்ள சதொச கிளை நிறுவனங்களில் நேற்று முதல் 35 ரூபாவுக்கு முட்டை விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் ஒருவருக்கு முப்பது முட்டை வீதம் வழங்கப்படும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்நிறுவ னத்தின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று தெரிவிக்கையில்:

ஏற்கனவே 10 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டு சந்தைக்கு வந்துள்ளன. இந்நிலையில், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 15 மில்லியன் முட்டைகள், தர நிர்ணயத்திற்காக அனுப்பப்பட்டு தற்போது சந்தைக்கு விடப்படவுள்ளன.

# '200 இல் மலையகம்' நிகழ்வு ஞாயிறன்று நுவரெலியாவில்

(நுவரெலியா தினகரன் நிருபர்)

'200 இல், மலையகம் மாற்றத்தை நோக்கி' எனும் தொனிப் பொருளில் மலையக மக்களின் சாதனைகளையும், மலையக தியாகிகளையும் நினைவு கூரும் நிகழ்வு ஞாயிறன்று நுவரெலியாவில் நடைபெறுகிறது.

இதனை முன்னிட்டு காலை 9.00 மணிக்கு நுவரெலியா நகரில் ரீகல் திரையரங்குக்கு முன்னால் ஆரம்பமாகும் ஊர்வலம், சினிசிட்டா நகர மண்டபத்தை நோக்கி பயணிக்கும்.

ஊர்வலத்தில் ஐந்து ஊர்திகள் பயணிக்கும் அதில் மலையக மக்களை இலங்கைக்கு அழைத்து வந்த முதலாவது கப்பலான ஆதிலக்ஸ்மி கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

முழுமையான செய்தி 11 ஆம் பக்கம்.

# மரண அச்சுறுத்தல் விடுத்து கப்பம் கோரியவர் கைது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மரண அச்சுறுத்தல் விடுத்து 5 கோடி ரூபா கப்பம் பெற்றுக்கொள்ள முயற்சித்த சம்பவம் தொடர்பில், தேடப்பட்டு வந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மிரிஹான பொலிஸ் நிலையத்தில் இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டிருந்த முறைப்பாட்டுக்கிணங்க முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளையடுத்து அங்கொட பிரதேசத்தில் வைத்து சம்பந்தப்பட்ட நபரை கைது செய்துள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 47 வயதான நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

சந்தேக நபர் மற்றும் முறைப்பாட்டாளருக்கு இடையே காணி தொடர்பான சச்சரவு நிலவுகிறது. இதனால், வெளிநாட்டில் வசிக்கும் சர்ச்சைக்குரிய அவரது உறவினருக்கு இவர், இவ்வாறு மரண அச்சுறுத்தல் விடுத்ததாக விசாரணைகளில் தெரிய வருகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## நாடு முழுவதும் 83,000 ஆக பதிவு



இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் பதிவான டெங்கு நோயாளரின் எண்ணிக்கை 83,000 கடந்துள்ளதாக தேசிய தொற்றுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இக்காலப்பகுதியில் 83,036 டெங்கு நோயாளர் பதிவாகியுள்ளனர்.

அவர்களில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 17,310 டெங்கு நோயாளர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் மாத்திரம், மொத்தம் 37,804 டெங்கு நோயாளர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய தொற்றுநோய் தடுப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில், டெங்கு காய்ச்சலை தடுக்கும் வகையில் மக்கள் தங்கள் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# புதையல் தோண்டிய முன்னாள் இராணுவ சிப்பாய் உட்பட அறுவர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

கெக்கிராவ மல்தெனிபுர பகுதியில் புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடய முன்னாள் இராணுவ சிப்பாய் உள்ளிட்ட ஆறு பேரை, கெக்கிராவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய கெக்கிராவ பொலிஸ் பிரிவின் மல்தெனிபுர பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பில், இவர்கள் கைதாகினர். இச்சுற்றிவளைப்பு நேற்று (21) நடந்தது. புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் சிலவற்றையும் கெக்கிராவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 35,42,47,53,55,58 வயதுடைய கெக்கிராவ மல்தெனிபுர, ஆண்டியாகல, தம்பேவட்டவன, கலேவல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெக்கிராவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்கள் தற்காலிகமாக அனுமதி மறுப்பு

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

வெளிநாடுகளிலுள்ள ஆய்வுக் கப்பல்கள் இலங்கை கடற்பரப்பில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குவழங்கப்படும்அனுமதி மறுஅறிவித்தல்வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதென வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதுதொடர்பில் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அறிவித்தல் விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் இவ்வாறான ஆய்வு கப்பல்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக இலங்கை துறைமுகங்களில் அவற்றை நங்கூரமிட முடியுமென்றும் அதனை எவ்விதத்திலும் நிறுத்தமுடியாதெனவும் வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது..

அதற்கிணங்க சீனா எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி முதல் மே மாத இறுதிவரை தென்னிந்திய கடற்பரப்பில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ள நிலையில் இலங்கை கடற்பரப்பில் அது நங்கூரமிடுவதற்கு விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

சீயான் 6 சீன ஆய்வுக் கப்பல் இலங்கை கடற்பரப்புக்கு அப்பால் தமது ஆய்வு நடவடிக்கைகளை முடித்துக்கொண்டு கடந்த 2 ஆம் திகதி சிங்கப்பூரை நோக்கி பயணித்துள்ளது. அதனையடுத்து மேலுமொரு ஆய்வுக்கப்பலான சியென் யாங் ஹொங் 3 கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டு ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சீனா இலங்கை அரசாங்கத்திடம் அனுமதிபெற்றிருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் மேற்படி கப்பலுக்கு அனுமதி வழங்கவேண்டாமென இந்தியா இலங்கையிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 07ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஆகிறா பிறை 07

### குறள் தரும் சிந்தனை



இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்

*பிச்சையெடுத்துதான் சிலர் உயிர்வாழ வேண்டும் என்ற நிலையிருந்தால் இந்த உலகத்தைப் படைத்தவனாகச் சொல்லப்படுபவனும் கெட்டொழிந்து திரியட்டும்.*

# நாட்டில் சாதகமான பொருளாதார மேம்பாடு

இலங்கை கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்தது. அதன் ஊடாக நாடே வங்குரோத்து நிலையை அடைந்தது. அதனால் உலகில் தனிமைப்படும் நிலைக்கு நாடு உள்ளானது. அதன் விளைவாக மக்கள் பல்வேறு விதமான பாதிப்புக்களுக்கும் தாக்கங்களுக்கும் முகம்கொடுத்தனர்.

இந்நிலையில் பொருளாதார நெருக்கடியுடன் சேர்த்து அரசியலும் கொதி நிலை அடைந்தது. அது ஆட்சி மாற்றத்திற்கும் வித்திட்டது. அத்தோடு நாட்டின் அன்றைய தலைவரும் நாட்டை விட்டு வெளியேறிய நிலையில் பதவி விலகும் நிலைமை உருவானது.

இவ்வாறான சூழலில் நாட்டின் தலைமையை ஏற்க எவரும் முன்வராத நிலைமை ஏற்பட்டது. இந்நிலையில் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையைப் பொறுப்பேற்றார். அவர் இப்பதவியை ஏற்றதும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். அவை கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பாலான வேலைத்திட்டங்களாகும். கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டைக் கட்டியெழுப்புவதே இத்திட்டங்களின் இலக்காக உள்ளது.

அந்தவகையில் ஜனாதிபதி தலைமையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் குறுகிய காலம் முதல் பயனளிக்கத் தொடங்கின. அதனால் பொருளாதார நெருக்கடி காலப்பகுதியில் நாட்டில் மக்கள் முகம்கொடுத்த அசௌகரியங்களும் பாதிப்புக்களும் கட்டம் கட்டமாக நீங்கத் தொடங்கின.

இப்பொருளாதார வேலைத்திட்டங்கள் உதவி வழங்கும் நிறுவனங்களுக்கும் நாடுகளுக்கும் நம்பிக்கை அளிக்கும் வகையில் அமைந்துள்ளன.

இந்நிலையில் உலகின் பல நாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு உதவ முன்வரலாயின. இது ஜனாதிபதி தலைமையில் முன்னெடுக்கப்படும் பொருளாதார மீட்சிக்கான திட்டங்களுக்கான அங்கீகாரமாக அமைந்துள்ளது. அத்தோடு இத்திட்டங்கள் பெற்றுக்கொண்டுள்ள வெற்றியும் ஆகும்.

அவ்வாறு நிதியுதவி புரிய முன்வந்துள்ள சர்வதேச நிதி நிறுவனங்களில் சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் குறிப்பிடத்தக்கவையாகும்.

அந்த வகையில் உலக வங்கி இலங்கையின் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவளிக்கக் கூடிய மீழெழுச்சி, ஸ்தீரத்தன்மை, மற்றும் பொருளதாதார மீட்சிக்கான அபிவிருத்திக் கொள்கை செயற்றிட்டத்திற்கு உதவியளிக்க உலக வங்கி முன்வந்துள்ளது. இதற்கான அங்கீகாரத்தை கடந்த ஜுன் மாதம் 18 ஆம் திகதி அளித்தது.

வறிய மற்றும் நலிவுற்ற சமூகங்கள் மத்தியில் ஏற்படக்கூடிய தாக்கங்களைக் குறைத்தல், அனைவரையும் உள்ளடக்கிய தனியார்த்துறை மீட்சிக்கு ஒத்துழைத்தல், பொருளாதார ஸ்தீரத்தன்மையை மீளுறுதிப்படுத்தல் ஆகியவற்றுக்கு உதவக்கூடிய வகையிலான தொடர் உதவித்திட்டங்களில் முதலாவது திட்டமே இதுவாகும். இத்திட்டத்திற்கு வழங்கவென இணக்கப்பாடு எட்டப்பட்ட நிதி விடுவிக்கப்படுவதற்கு முன்னர் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளும் அடையப் பெற வேண்டிய இலக்குகளும் உள்ளன.

அதற்கு ஏற்ப இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 250 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஏற்கனவே விடுவிக்கப்பட்ட நிலையில் அரசாங்கம் முன்னெடுக்கும் முன்னேற்றகரமான பரந்தடிப்படையிலான மறுசீரமைப்புக்கள் குறித்த மதிப்பீட்டை அடுத்து இரண்டாம் கட்டமாக 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை விடுவிக்க உலக வங்கி தீர்மானித்துள்ளது. இது பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்பவென முன்னெடுக்கப்படும் பொருளாதார திட்டங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ள வெற்றியாகும்.

நாட்டின் பொருளாதாரத்தை நிலைபேறான வகையில் கட்டியெழுப்புவதற்கு பொருளாதார மற்றும் கட்டமைப்பு ரீதியிலான மறுசீரமைப்புக்கள் இன்றியமையாதவையாகும்.

அந்த வகையில் உலக வங்கியின் இவ் உதவித்திட்டம் பொருளாதாரத்தின் முழுமையான மீட்சியை உறுதிப்படுத்தல், பொருளதாதார வளர்ச்சியின் இயலுமையை மேம்படுத்தல், தனியார்த்துறை முதலீடுகளை ஊக்குவித்தல் போன்றவற்றுக்கு அவசியமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள அரசுக்கு உதவக்கூடியதாகுமென உலக வங்கியின் இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்பவென முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் நம்பிக்கை அளிக்கும் வகையில் முன்னேற்றப் பாதையில் பயணிப்பதன் பின்புலத்தில் தான் உலக வங்கி இரண்டாம் கட்ட நிதி விடுவிப்புக்கும் அங்கீகாரம் அளித்துள்ளது. அதேபோன்று சர்வதேச நாணய நிதியமும் இரண்டாம் கட்ட நிதி விடுவிப்புக்கு ஏற்கனவே அனுமதி அளித்துள்ளது.

ஆகவே நாட்டைக் கட்டியெழுப்பவதற்கான பொருளாதார வேலைத்திட்டங்களுக்கு சகலரும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அது வளமான பொருளாதார தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு அளிக்கப்படும் பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# ஜனசபா வேலைத் திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பம்



தேசிய ஜனசபா செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்டு வரும் ஜனசபா வேலைத்திட்டம் சாய்ந்தமருதில் உத்தியோகபூர்வமாக நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இரண்டாம் கட்ட முன்னோடி ஜனசபா தேசிய வேலைத்திட்டத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலகமும் உள்வாங்கப்பட்டுள்ளது.


இதன்படி இவ்வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட முன்னோடி வேலைத்திட்டத்தில்(Pilot Project) சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் 9 ஆம் கிராம உத்தியோகத்தர் பிரிவு (பொலிவேரியன் கிராமம்) தெரிவு செய்யபட்டுள்ளது. இதற்கான செயற்குழுவில் 25 பேர் அங்கம் வகிக்கவுள்ளனர். இக்குழுவில் இப்பிரிவிலுள்ள இளைஞர் குழுக்கள், கிராம அபிவிருத்தி மற்றும் மகளிர் அபிவிருத்திச் சங்கங்கள், சமுர்த்தி சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் இந்நிகழ்வு நேற்று வியாழக்கிழமை பொலிவேரியன் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஜனசபா திட்டத்தின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான கண்காணிப்பு அதிகாரி ரவீந்திர டீ.சில்வா, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனீஸ், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், நிருவாக உத்தியோகத்தர் எம்.என்.எம். றம்ஸான், நிருவாக கிராம உத்தியோகத்தர் எம். எஸ்.நளீர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.சி.முஹம்மட், திட்டமிடல் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.எம்.அஸ்ஹர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வைத் தொடர்ந்து புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள செயற்குழு உறுப்பினர்களுக்கான அறிவூட்டல் நிகழ்வொன்றும் இங்கு இடம்பெற்றது.

**அஸ்ஹர் ஆதம்...**
(கல்முனை குறூப் நிருபர்)

# சவூதியில் உலக இ-விளையாட்டுகள் சம்பியன்ஷிப் வெற்றிகரமாக நிறைவு

உலக இவிளையாட்டுக்கள் சம்பியன்ஷிப் (GEG) என்பது உலக இவிளையாட்டுக்கள் பெடரேஷனால் நடத்தப்படும் குறிப்பிடத்தக்க ஒரு போட்டி நிகழ்வாகும். இந்த நிகழ்வு இவ்வருடம் சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் டிசம்பர் 12 முதல் 16 வரை நடைபெற்றது. இந்நிகழ்வின் போது பலவிதமான இவிளையாட்டுக்கள் அரங்கேற்றப்பட்டதோடு, இந்தப் போட்டிகளில் காணப்பட்ட வினைத்திறன் மற்றும் குதூகலம் மிக்க கொண்டாட்டங்கள் மூலம் இவிளையாட்டுக்களுக்கு உலக மக்கள் மத்தியிலுள்ள வரவேற்பானது எடுத்துக்காட்டப்பட்டது.




**உலகின் முதல் இ–விளையாட்டுத்தலம் அறிமுகம்**

சவூதி eLeague தலைமையகத்தில் நடைபெற்ற இப்போட்டியில் 50 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 250 இற்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டனர்.

GEG சம்பியன்ஷிப் 2023 நிகழ்வில், சமகால நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கமைய, பாரம்பரிய விளையாட்டுகளை இவிளையாட்டுடன் ஒன்றிணைக்கும் வகையில் அமைந்த விளையாட்டுக்களே அரங்கேற்றப்பட்டன. மேலும் இது #worldconnected என்ற ஹேஷ்டேக்கின் கீழ் நடைபெற்றதோடு சிறந்த சமூக கேமிங், பொழுதுபோக்கு மற்றும் கலாசார அனுபவங்களை வழங்கியதாக பலராலும் போற்றப்பட்டது. Dota 2, eFootballTM 2024, PUBG MOBILE மற்றும் Street Fighter 6 போன்ற பிரபலமான இவிளையாட்டுக்கள் இந்நிகழ்வில் அரங்கேற்றப்பட்டன.

உலக இவிளையாட்டுக்கள் சம்பியன்ஷிப்பில் சுவாரஷ்யமான போட்டிகளை கண்டு களிப்பதிலும் விளையாடுவதிலும் ஆர்வம் காட்டும் இவிளையாட்டுப் பிரியர்கள் மற்றும் ஏனைய ரசிகர்களை ஈர்ப்பதில் சவூதி இவிளையாட்டுக்கள் சம்பியன்ஷிப் நிகழ்வானது கச்சிதமாக செயற்பட்டது என சவூதி இவிளையாட்டுக்கள் பெடரேஷன் தலைமை நிர்வாக அதிகாரி துர்கி அல்ஃபவ்ஸான் நம்பிக்கை தெரிவித்தார்.

அத்தோடு இந்த இவிளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ளவர்களது புத்தாக்க சிந்தனையை இந்நிகழ்வானது மேம்படுத்தும் என்பதோடு அந்நாட்டு பொருளாதார, பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டுத் துறைக்கும் பாரிய நன்மை பயக்கும் என்ற எதிர்பார்ப்புடனே நடாத்தப்பட்டதோடு இந்த எதிர்பார்ப்பு பூர்த்தியாகியும் உள்ளது.

இந்தப் போட்டிகளின் நிறைவாக உலகில் முதல் இவிளையாட்டுக்களுக்கான தனியான தளத்தை சவூதி அரேபியாவின் கித்தியா நிறுவியுள்ளது. இது இவிளையாட்டுக்கள் மற்றும் உலக கேமிங் துறையில் சவூதி அரேபியாவின் உயர்ஸ்தானத்தை பறைசாற்றுவதோடு, அத்துறையை வளர்ப்பதற்கான சவூதியின் அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகிறது. அத்தோடு இவ்விளையாட்டுத் தலமானது அதிநவீன இவிளையாட்டுக்களுக்கான சாதனங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளதோடு விளையாட்டு அரங்கங்கள், சொகுசுத் தங்குமிட வசதிகள் அத்தோடு ஆடம்பர ஹோட்டல்களையும் அடக்கியே அமைக்கப்பட்டுள்ளது. இது 2030 ஆகும் போது வருடாந்தம் 10 மில்லியன் பார்வையாளர்களை ஈரக்கும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

**காலித் ரிஸ்வான்...**

# கிரான் கிராமத்தில் முதன் முதலாக உருவான சட்டத்தரணி புருஷோத்தமனுக்கு பாராட்டுவிழா

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிரான் கிராமத்தின் வரலாற்றில் முதன் முதலாக சட்டத்தரணி ஒருவர் உருவாகியுள்ளார். இக்கிராமத்தில் குமாரவேல் புருஷோத்தமன் என்பவரே சட்டத்தரணியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

சட்டத்தரணி குமாரவேல் புருஷோத்தமனை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு சில தினங்களுக்கு முன்னர் கிரான் ரெஜி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கிரான் மத்திய கல்லூரியின் 1999_2000 ஆம் ஆண்டு பிரிவு மாணவர்களினால் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் போது அந்நிகழ்வுக்கு வந்திருந்த அதிதிகள் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். அதன் பின்னர் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் சர்வமத வழிபாடு நடத்தப்பட்டது. சர்வமத குருமார்களினால் இறைஆசி வழங்கப்பட்டது. இதன் போது மாணவர்களின் நடன நிகழ்வு நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் கலந்து கொண்ட கௌரவ அதிதிகள் உரையாற்றுகையில், சட்டத்தரணி குமாரவேல் புருஷோத்மன் அவர்களின் கடந்த கால சமூக செயற்பாடு தொடர்பாக பாராட்டிப் பேசினர்.

எதிர்காலத்தில் அவர் மக்களுக்கான பணியை அர்ப்பணிப்புடன் முன்னெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

அவரை பாராட்டி பல்வேறு சமூக நல அமைப்புக்கள், நண்பர்கள், அரச உயரதிகாரிகளினால் பொன்னாடை போர்த்தப்பட்டது. அத்துடன் வாழ்த்து மடல் வாசிக்கப்பட்டது. நினைவுச் சின்னங்கள் வழங்கியும் அவர் கௌரவிக்கப்பட்டார்.

சட்டத்தரணி குமாரவேல் புருஷோத்மன் கிரான் மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார். அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் புகழ்பெற்ற ஓவியரும், பல்துறைக் கலைஞருமான குமாரவேல் அவர்களின் மகனுமாவார்.





இந்நிகழ்வின் போது அண்மையில் நடைபெற்ற தரம்_ 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் எஸ். ராஜ்பாபு,

ஆலயகுரு சிவஸ்ரீ மு.சண்முகம் குருக்கள், கிரான் முன்னாள் மற்றும் தற்போதைய அதிபர்கள், ஆசிரியர்கள், சட்டத்தரணியின் குடும்ப உறவினர்கள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

**முருகுப்பிள்ளை கோகிலதாசன்...**

# அதிபர் சேவைக்குத் தெரிவானோருக்கு மத்துகம கலைமகள் த.ம.வியில் பயிற்சி

இலங்கை அதிபர் சேவைக்கு (SLPS Grade111) புதிதாகத் தெரிவான களுத்துறை மாவட்ட அதிபர்களுக்கான ஒரு வாரகால களப்பணிப் பயிற்சி தொடர்பிலான களநிலை வேலைத் திட்டம் மத்துகம கலைமகள் தமிழ் வித்தியாலயத்தில் அதிபர் வீ.சசிகுமார் தலைமையில் நடைபெற்றது.

களுத்துறை மாவட்ட அதிபர்களுக்கான களப்பணி பயிற்சிக்கான நிலையமாக மத்துகம கலைமகள் மகாவித்தியாலயம் தெரிவானது மகிழ்ச்சிக்குரியதாக இருப்பதுடன், இப்பாடசாலையில் களப்பணிக்கு அவசியமான சகல ஆவணங்களும் இற்றைப்படுத்தப்பட்டு தேவையான ஆவணங்களை விரைவாகப் பெறக்கூடியதாக முறைமை (system) அமைக்கப்பட்டிருந்தமை சிறப்பம்சமாக இருந்தது என களப்பணி குழுவின் தலைவரான அதிபர் ஏ.ஸீ. எம். ரிப்கான் தெரிவித்தார்.

"கலைமகள் மகாவித்தியாலய அதிபர் சசிகுமார், மாற்றங்களை உள்வாங்கும் போதனா தலைவராகவும் பாடசாலையின் நிலைமாற்று வழிகாட்டியாகவும் உள்ளார். இவர், 'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பார். நல்விருந்து வானத்தவர்க்கு' என்ற வள்ளுவர் பெருந்தகை வாக்குக்கு ஏற்ப செயல்படும் ஒருவராகவும் விளங்குகிறார்" என ஏ.ஸீ.எம். ரிப்கான் களப்பணி நிகழ்வில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்தில் புதிதாக அதிபர் சேவைக்கு தெரிவான அதிபர்கள் குழுவில் அன்னாசிகல தமிழ் வித்தியாலய அதிபர் ஏ ஸீ,எம்.ரிப்கான், மத்துகம சீ.டபிள்யு.கன்னங்கர மத்திய கல்லூரி தமிழ்ப் பிரிவின் அதிபர் எஸ்.புஸ்பகாந்தி, களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி ஆசிரியர் ரீ.கிர்ஷாந்தன், பேருவளை நளீம் ஹாஜியார் மகாவித்தியாலய ஆசிரியர் எம்.என்.எம். இர்பான் மற்றும் பாரதி தமிழ் மகா வித்தியாலய ஆசிரியர் எம்.நலானி ஆகியோர் களப்பணியை மேற்கொண்டனர்.





கலைமகள் தமிழ் மகாவித்தியாலய அதிபர் வீ.சசிகுமாரின் சிறப்பான வழிகாட்டலில் பாடசாலை நிர்வாகம், திட்டமிடல், நிதிமுகாமை, பௌதீகவள முகாமை, கலைத்திட்ட முகாமை மற்றும் அதிபர் வாண்மைத்துவம் ஆகிய ஆறு தலைப்புகளில் களப்பணி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதி முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பட்டறை கணித ஆசிரியர் எஸ்.கமாலினால் நடத்தப்பட்டதுடன், இடம்பெற்ற கலந்துரையாடல் நிதி நடவடிக்கைகளுக்கு கால்கோளாக அமைவதாக களப்பணியினர் தெரிவித்தனர். இந்தக் களப்பணி பயிற்சியின்இறுதி நாளன்று சமய நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்தப் பயிற்சிக்காக தமது பாடசாலையை தெரிவு செய்தமை தொடர்பில் மகிழ்ச்சியடைவதாகவும் நன்றி தெரிவிப்பதாகவும் அதிபர் சசிகுமார் தெரிவித்தார். மத்துகம தமிழ்மொழி பாடசாலைகளுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணாப்பாளர் ஹேரத் மானிக், பிரதி அதிபர் எஸ்.ஸ்டீபன், கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான எஸ்.கிருஷ்ணகுமாரி உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இஸ்லாம் வலியுறுத்தும் மனித நேயம்



ஒரு மனிதன் மற்ற மனிதனோடும், ஏனைய ஜீவராசிகளோடும் உறவாடும் போது கடைப்பிடிக்க வேண்டிய மிகப்பிரதானமான அடிப்படையாக மனித நேயத்தை இஸ்லாம் அடையாளப்படுத்தியுள்ளது. மனித நேயத்தின் கருவூலமாக பார்க்கப்படும் கருணையை இஸ்லாத்தின் மிகப் பிரதானமான அடிப்படையாக அல்லாஹ் ஆக்கி வைத்துள்ளான்.

கருணையை அல்லாஹ் அவனுக்குரிய உயர்ந்த பண்பாகவும் அவனுடைய திருநாமமாகவும் ஆக்கியுள்ளான். 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' (அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல இறைவனின் திருப்பெயரால் துவங்குகிறேன்') என்ற மந்திரத்தை கொண்டே ஒரு முஸ்லிம் தனது அனைத்து விதமான நற்கருமங்களையும் மேற்கொள்ள வேண்டும். இது இஸ்லாத்தின் கட்டளை. அவனுடைய அனைத்து கருமங்களிலும் கருணை கடைபிடிக்கப்பட வேண்டும் என்ற யதார்த்தத்தையே எடுத்தியம்புகின்றது இஸ்லாம். 'ரஹ்மான்' கருணையாளன் ஆகிய ரப்புடைய எண்ணமும், காருண்ய மனப்பாங்கும் மனித செயற்பாடுகளில் இன்றியமையாதது என்பதுதான் இஸ்லாத்தின் கோட்பாடாகும். 'ரஹ்மான்' என்ற கருணையை அல்லாஹ் தனக்குரிய பண்பாக மட்டும் அமைத்துக் கொள்ளவில்லை.

அல்லாஹ்வை நோக்கிப் பயணிக்கின்ற மனிதனை கருணையோடு அணுகுவதை அல்லாஹ் அவன் மீது கடமையாக்கியுள்ளான். **'நிச்சயமாக ரஹ்மான் ஆகிய அல்லாஹ்வின் கருணை மட்டிடமுடியாதது. அது அனைத்தையும் சூழ்ந்தது. 'என்னுடைய அருளோ எல்லா வஸ்துக்களிலும் சூழ்ந்து விசாலமாகியுள்ளது'.**

**(அல் குர்ஆன் அல்அஃராப்156) .**

இந்த பிரம்மாண்டமான பிரபஞ்ச அமைப்பும், அதன் நியதிகளும், அதில் அவன் படைத்திருக்கும் படைப்பினங்களின் படைகோலங்களும், தொழிற்பாடுகளும் அந்த ரஹ்மானின் எல்லையற்ற கருணையையே பறைசாற்றுகிறது. அடி மனதிலிருந்து ஆர்ப்பரித்தெழுகின்ற மனித நேயத்தின் வெளிப்பாடு தனக்கு என்ன நேர்ந்தாலும் மற்றவர்களது மகிழ்ச்சியிலும் வெற்றியிலும் இன்பம் காண்கின்ற மனப்பக்குவத்தை தான் ஒரு மனிதனுக்கு கற்றுக்கொடுக்கும்.

**ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், உயிருள்ள ஈரலிப்பான ஒவ்வொரு பொருளிலும் கருணையோடு நடந்து கொள்வதற்கு கூலி இருக்கிறது' என்றுள்ளார்கள்.'**

(ஆதாரம்: ஸஹீஹ் அல் புஹாரி).

இவ்வாறு மனிதன் அல்லாத ஏனைய படைப்பினங்கள் மீதும் கருணையோடும் அன்போடும் உறவாடும் படி வலியுறுத்தக்கூடிய பல நபிமொழிகளை காணலாம். இஸ்லாமிய ஷரீஆவில் கருணை, அன்பு, இரக்கம் பற்றி குறிப்பிடப்படுகின்ற அறிவுரைகளையும், வழிகாட்டல்களையும் உற்றுநோக்கும் போது ஒரு மனிதனுடைய ஈடேற்றத்துக்குரிய ஆணிவேராக அவை விளங்குகின்றன. அன்பும், கருணையும் இல்லையென்றால் அவன் இஸ்லாமியனாக இருக்க முடியாது.

இதனை, 'உங்களில் ஒருவர் அவருடைய குழந்தை, பெற்றோர், உலக மனிதர்கள் அனைவரை விடவும் நான் நேசத்திற்குரியவனாக இல்லையென்றால் அவர் ஈமான் கொண்டவராக மாறமுடியாது' என்ற நபிமொழி எடுத்தியம்புகிறது. ஒரு மனிதனது ஈமான் நபி (ஸல்) அவர்கள் மீது அவர் வைத்திருக்கின்ற அன்பை வைத்து அளவிடப்படுகின்றது என்பது தெளிவாகிறது.

இவ்வுலக வாழ்வு அருள் நிறைந்ததாகவும் மகிழ்ச்சியானதாகவும் மாற வேண்டுமெனில் பூமியிலுள்ள மனிதர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பையும், இரக்கத்தையும் பரிமாறி கருணை உள்ளம் கொண்டவர்களாக வாழ வேண்டும் என்று இஸ்லாம் வலியுறுத்துகிறது. ஒருவருக்கொருவர் இரக்கத்தோடும் கருணையோடும் வாழ்கின்ற போது அவர்கள் மீது அல்லாஹ் அவனது கருணை மழையைப் பொழிகின்றான். அதனால் **நபி (ஸல்) அவர்கள், 'இரக்கம் காட்டக் கூடியவர்கள் மீது கருணையாளனாகிய அல்லாஹ் இரக்கம் காட்டுகின்றான். பூமியில் உள்ளவர்கள் மீது இரக்கம் காட்டுங்கள். வானில் உள்ளவர்கள் உங்கள் மீது இரக்கம் காட்டுவார்கள்.'** என்றுள்ளார்கள்.

(ஆதாரம்: சுனன் அத் திர்மிதி)

இந்நபிமொழியின் ஊடாக இரக்கம் காட்டுவதற்கும், கருணை கொள்வதற்கும் இனம், மதம், மொழி என்ற எந்த அடையாளமும் தேவையில்லை என நபி (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். 'பூமியில் உள்ளவர்கள் மீது' என்று பொதுப்படையாகவே கூறியுள்ளார்கள். இங்கு குறிப்பிட்ட ஒரு சாராரை நபி (ஸல்) அவர்கள் முற்படுத்தவில்லை. உயிரினங்களுக்கிடையில் அன்பு காட்டுவதில் எவ்வித பாகுபாடோ, பக்கச்சார்போ இல்லாத சமநிலையைப் பேணி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் இஸ்லாம் வலியுறுத்துகிறது. எதிலும் எல்லை மீறிச் செயல் படுவதையோ அல்லது பொடுபோக்காக செயல்படுவதையோ இஸ்லாம் வன்மையாக கண்டிக்கிறது.

ஒரு சமூகம் மனிதப் பண்பாடும் நாகரிகமும் கொண்ட சமூகமாக மாற வேண்டுமெனில் அச்சமூகத்தில் மனித நேயம் கொண்ட மனிதர்கள் உருவாக்கப்படவேண்டும். மனிதர்கள் தொடர்புபடுகின்ற ஒவ்வொரு விடயத்திலும் கனிவும், கசிவும், இனிமையும், இங்கிதமும் இருக்கவேண்டும். இது ஒரு பிராணியை அறுப்பதாக இருந்தாலும் சரியே என்ற இஸ்லாத்தின் உயரிய வழிகாட்டலை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு இயம்புகிறார்கள். **'நிச்சயமாக அல்லாஹுதஆலா ஒவ்வொரு வஸ்துக்களும் கருணையுடன் நோக்கப்பட வேண்டும் என்பதை கடமையாக்கியுள்ளான். எனவே நீங்கள் (பிராணிகளை) அறுக்கும் போது கருணையை கடைபிடியுங்கள், (பிராணிகளை அறுக்க முற்படுபவர்) கத்தியை நன்றாகக் கூர்மையாக்கி, அறுக்கப்படும் பிராணியை ஆற்றுப்படுத்தவும்.'** (ஆதாரம்: ஸஹீஹுல் முஸ்லிம்)

கருணையின் மறுவுருவான காருண்ய நபி (ஸல்) அவர்கள் ஏற்படுத்திய வெற்றிகரமான சமூகப்புரட்சிக்கு ஆணிவேராக அமைந்தது அன்பும், கருணையுமே ஆகும். எனவே நாம் காணும் இன்றைய இரக்கமற்ற, கொடுமையும், வன்மமும் நிறைந்த உலகிலிருந்து மீண்டெழ வேண்டுமெனில் மனித மனங்கள் அன்பும், கருணையும் நிறைந்ததாக மாற வேண்டும். மனித வாழ்வோடு தொடர்புபடுகின்ற ஒவ்வொரு செயற்பாடுகளிலும் மனித நேயம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இதில் இனம், மதம், மொழி என்ற அனைத்து வேறுபாடுகளுக்கும் அப்பால் 'அனைத்து படைப்பினங்களும் அல்லாஹ்வின் குடும்பத்தினர்' என்ற நபிமொழியை அளவுகோலாகக் கொண்டு செயல்பட வேண்டும். அப்போதுதான் நாம் விரும்பும், யுத்தமற்ற, மோதல்கள் அற்ற அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த ஒரு உலகை காணலாம். இறைத்தூதரின் இலக்கு மனித குலத்திற்கு அருளும் கருணையுமாகும். ஒரு தடவை நபிகளார் **'அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் இணைவைப்பவர்களுக்கு எதிராக பிராத்தியுங்கள் என்று கூறப்பட்டது அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'நான் சாபமிடுபவனாக அனுப்பப்படவில்லை, நான் அருளாகவே அனுப்பப்பட்டுள்ளேன்' என்று கூறினார்கள்'.** (ஆதாரம்: முஸ்லிம்)

இன்றைய வேகமான உலகின் போக்கு மனித நேயமற்ற, கல்நெஞ்சங்கொண்ட ஜடப்பிண்டங்களாக மனிதர்களை மாற்றிவிடுவதில் முனைப்பாக உள்ளது. தன்னோடு ஒன்றாக வாழ்கின்ற தனக்காக உழைக்கின்ற, தனக்காகவே வாழ்கின்ற மனிதர்களுடன் கூட கருணை கொள்வதற்கோ, அன்பை பரிமாறிக் கொள்வதற்கோ எந்த அவகாசத்தையும் இன்றைய உலக ஒழுங்கு பெரும்பாலான மனிதர்களுக்கு வழங்குவதில்லை, கண்முன்னே ஒரு மனிதன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தாலும் அவன் உயிர் காக்க தன்னாலான உதவிகளை செய்வோம் என்ற அடிப்படை மனித உணர்வு கூட இல்லாதவர்களாகவே எம்மில் பலர் வாழ்கின்றனர். இது முற்றிலும் மாற்றிக்கொள்ளப்பட வேண்டிய பண்பாகும்.

அன்பு, கருணை, இரக்கம், பரிவு முதலான உயரிய பண்புகள் மூலமாகத்தான் இஸ்லாத்தின் தூதை எடுத்தியம்ப முடியும். லெபனானிய அறிஞர் பய்ஸல் மௌலவி அவர்கள் குறிப்பிடுவது போன்று 'முஸ்லிம் அல்லாதவர்கள் மீது, எனக்கு அன்பும், இரக்கமும் இல்லையென்றால் நான் எப்படி இஸ்லாத்தின் தூதை எத்தி வைக்க முடியும்? என்னைச் சூழ உள்ளவர்கள் என்னை எதிர்த்தாலும் நான் அவர்கள் மீது அன்பைப் பொழிந்தே ஆகவேண்டும்.

கலாநிதி, அல்ஹாபிழ்
எம்.ஐ.எம். சித்தீக்...
(அல்ஈன்ஆமி)
B.A.Hons,(Al Azhar university, Egypt) M.A.& PhD (International Islamic university, Malaysia)

# பிறரை இழிவாக எண்ணாதீர்கள்!

பிறரை இழிவாக எண்ணுவது நரகத்திற்கு இழுத்துச் செல்லும் பாவங்களில் அடங்குகிறது. ஏன் என்றால், ஒருவரை நாம் இழிவாக நினைப்பது இது ஜாஹிலியத்துக் கால பழக்கமாகும். அப்படி நினைப்பதால் நம்மை அறியாமல் நமது உள்ளத்தில் நான் என்ற பெருமை வந்து விடுகிறது. பிறரை இழிவாக நினைப்பதின் மூலம் அல்லது பேசுவதன் மூலம் புறம், கோள், பொய் போன்ற பாவங்கள் தன்னை அறியாமல் வந்து விடுகிறது.

இதைப் பற்றி அல் குர்ஆனும் ஹதீஸ்களும் பின்வருமாறு குறிப்பிடுகின்றன. 'விசுவாசிகளே! ஒரு சமூகத்தால் மற்றொரு சமூகத்தாரை பரிகாசம் செய்ய வேண்டாம். அவர்களை விட இவர்கள் மிகச் சிறந்தவர்களாக இருக்கலாம். மேலும் எந்தப் பெண்களும் மற்ற எந்தப் பெண்களையும் பரிகாசம் செய்ய வேண்டாம். அவர்கள் இவர்களை விட மிகச் சிறந்தவர்களாக இருக்கலாம். உங்களில் சிலர் சிலரை குறை கூறவும் வேண்டாம். உங்கள் சிலர் சிலரை பட்டப் பெயரால் அழைக்கவும் வேண்டாம். விசுவாசங் கொண்ட பிறகு தீய பெயரால் அழைப்பது கெட்டதாகி விட்டது. எவர்கள் தவ்பா செய்து மீளவில்லையோ அவர்கள் அநியாயக்காரர்கள். (49:11)

இவ்வசனத்தில் ஒரு முஃமின் எப்படி பிறரோடு நடந்துகொள்ள வேண்டும் என்பதை அல்லாஹ் சொல்லித்தருகிறான். அதனால் நான் அவர்களை விட சிறப்புக்குரியவன் என்று எவரும் நினைக்கக் கூடாது. பிறரை குறை கூறிக் கொண்டே திரியவும் கூடாது.

மேலும் அந்த சூராவில், 'விசுவாசிகளே! எண்ணத்தில் (தவறான) பெரும்பாலானவற்றை தவிர்த்துக் கொள்ளுங்கள். (ஏனெனில்) நிச்சயமாக சில எண்ணங்கள் பாவமாகும். மேலும் நீங்கள் துருவித் துருவி விசாரிக்கவும் வேண்டாம். உங்களில் சிலர் சிலரை புறம் பேசவும் வேண்டாம். (49:12)

இவ்வசனத்தின் ஊடாக யாரையும் தவறான முறையில் நினைக்கக் கூடாது என்று அல்லாஹ் கூறுகிறான்.

ஒரு மனிதரிடம் ஒரு குறையைக் கண்டால் அவரை நேரடியாக சந்தித்து, அந்த விடயத்தை எடுத்துக் கூற வேண்டும். அதை விட்டு விட்டு, நாளுபேருக்கு மத்தியில் சுவாரஷ்யமாக குறைகளை பேசுவதானது அல்லாஹ் இது போன்று எம்மைப் பற்றி பேச வைத்து விடலாம்? அதனால் அல்லாஹ்வைப் பயந்துகொள்ள வேண்டும்.

# புகைப்பிடித்தலை தவிர்ப்போம்!

புகைப்பிடித்தல் பொருட்களில் மனித உயிரைப் பறிக்கக்கூடிய ஆரோக்கியத்தை கெடுக்கும் பல நச்சுப் பொருட்கள் அடங்கியுள்ளன. அதனால் புகைபிடிப்பவர்களுக்கு ஏற்படும் நோய்களில் மாரடைப்பு, காசநோய், ஆஸ்துமா, புற்றுநோய், நெஞ்சில் சளி, இதய நோய், வயிற்றுப்புண், விரல்களில் நிறம் மாறுதல், தோல் நோய் என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கவை.

இந்நோய்கள் புகைப்பிடிப்பவருக்கு மாத்திரமல்லாமல் அவர் வெளியிடும் புகையை சுவாசிப்பவர்களுக்கும் கூட ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆனால் உடலுக்குக் கேடு விளைவிக்காத, ஆரோக்கியமான உணவுகளையே உண்ணுமாறு இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.

இருந்தும் புகையிலையினால் மனிதன் தன்னையே அழித்துக்கொள்ளும் நிலையே காணப்படுகிறது. இதற்கு இஸ்லாம் இடமளிக்கவில்லை.

'உங்கள் கைகளாலேயே உங்களை அழிவின் பக்கம் கொண்டு செல்லாதீர்கள்' (அல் குர்ஆன் 2:135) என்றும் 'நம்பிக்கை கொண்டவர்களே! உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்' (5:105) என்றும் 'அல்லாஹ் வீண் விரயத்தை விரும்பவில்லை. வீண்விரயம் செய்பவரை நேசிக்கவுமில்லை. 'உண்ணுங்கள், பருகுங்கள் எனினும் வீண்விரயம் செய்யாதீர்கள். வீண்விரயம் செய்பவர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை' (7:31) என்றும் இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள், 'போதை தரும் அனைத்தும் தடை செய்யப்பட்டிருக்கிறது'. (ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி) என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆகவே அல்லாஹ் வழங்கியுள்ள விலைமதிக்க முடியாத அருட்கொடையான உடல் உள ஆரோக்கியத்தைப் பேணிக் கொள்வோம். அந்த அமானிதத்தை அதற்கேயுரிய ஒழுங்கில் பயன்படுத்திடுவோம். புகைப்பிடித்தலைத் தவிர்த்திடுவோம்.

தொகுப்பு: அபூமுஜாஹித்...

# உண்ண அனுமதிக்கப்பட்டவை

**'நம்பிக்கை கொண்டோர்களே..! நாம் உங்களுக்கு அளித்தவற்றில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள்' (அல் குர்ஆன் 2:172)** என்று இறைவன் குறிப்பிட்டுள்ளான்.

அந்த வகையில் மன அமைதியைப் பெறவும், உடல் நலத்தைப் பேணவும் இஸ்லாம் மனிதனுக்கு உன்னத நெறிகளை வகுத்து கொடுத்துள்ளது. உடலும், உள்ளமும் தூய்மையாக இருக்க வேண்டும் என்று போதித்துள்ள இஸ்லாம், உண்பதிலும் தூய்மையானவற்றையே உண்ண வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

மனித வாழ்வுக்கு உணவு, உடை, உறைவிடம் முக்கிய தேவைகளாகும். இவற்றை நிறைவேற்ற வழிவகைகள் இருந்தாலும் அதைப் பெற வரைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. கண்டவற்றை உண்டு வாழவும், கிடைத்தவற்றை அடைந்து மகிழவும் இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

குறிப்பாக உணவு உண்பதில் சில வரையறைகளை இஸ்லாம் வகுத்துள்ளது. அனுமதிக்கப்பட்டது ஹலால் என்றும், தடை செய்யப்பட்டவை ஹராம் என்றுள்ளது இஸ்லாம். இதுவே விதிக்கப்பட்டது (ஹலால்) என்றும் விலக்கப்பட்டது (ஹராம்) என்றும் அடையாளப்படுத்தப்படுகிறது.



**'செத்த பிராணியும், இரத்தமும், பன்றி இறைச்சியும் அல்லாஹ்வைத் தவிர மற்றவரின் பெயர் கூறி அறுக்கப்பட்டவையுமே உங்களுக்குத் தடுக்கப்பட்டவை ஆகும்' (அல் குர்ஆன்2:173).**

பன்றி இறைச்சியும், பன்றியில் இருந்து பெறப்படும் பொருட்களும் (பன்றியின் கொழுப்பு போன்றவை), இரையைக் கொல்வதற்காக நகம், பல் முதலியவற்றைப் பயன்படுத்துகின்ற விலங்குகள், பிற பிராணிகளைக் கூரிய நகத்தின் மூலம் கொன்று தின்னும் பறவைகள், ஊர்வன, புழு, செத்த பிராணிகள், முறைப்படி அறுக்கப்படாத பிராணிகள் மற்றும் பறவைகள் இன்னும் இவற்றில் இருந்து தயாரிக்கப்படும் பொருட்கள், எல்லாவிதமான குருதி இவை யாவும் மனிதனுக்குத் தடை செய்யப்பட்டுள்ளன.

**'விலங்குகளில் கோரைப்பற்கள் உள்ள ஒவ்வொன்றையும், பறவைகளில் கோரை நகங்கள் கொண்ட ஒவ்வொன்றையும் (உண்ணக் கூடாது என்று) நபிகளார் தடை செய்தார்கள்'.** (நபிமொழி).

இதன்படி கோரைப் பற்களால் கீறிக் கிழித்து பிராணிகளைத் தின்று வாழும் சிங்கம், புலி, சிறுத்தை, கரடி, ஓநாய், குள்ள நரி போன்ற விலங்குகளின் மாமிசத்தை உண்பது மனிதர்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே கோரை நகங்களைப் பயன்படுத்தி, பிற பிராணிகளைக் கொன்று தின்னும் கழுகு, பருந்து, வல்லூறு போன்ற பறவைகளின் மாமிசமும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த விலங்குகளும், பறவைகளும் இயற்கையாகவே மனித இயல்புக்கு ஒவ்வாதவை ஆகும். அறிவியல் ரீதியில் இவற்றின் மாமிசம் நோய்களுக்குக் கூட காரணமாகலாம். இவற்றின் மாமிசத்தை இஸ்லாம் தடை செய்துள்ளது.

மனிதர்கள் இயல்பாகவே செத்த பிராணியின் உணவை உண்பதை இழிவாகவே கருதுவர். மேலும், ஆடு, மாடு போன்றவை உயிரோடு இருக்கையில் அறுக்கும் போது தான் குருதி வெளிப்படும். செத்த பிறகு அறுத்தால் குருதி வெளிப்படாது. அதனால் செத்த பிறகு அறுக்கப்படுமாயின் அம்மாமிசத்துடன் உறைந்துபோன இரத்தத்தையும் சேர்த்தே சாப்பிட வேண்டிய நிலை ஏற்படும். இரத்தத்தில் மனிதன் உட்கொள்ளக்கூடாத கிருமிகள் காணப்படுவது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால்தான் இரத்தத்தைச் சாப்பிட இஸ்லாம் தடை விதித்துள்ளது.

பன்றியின் மாமிசம் தடை செய்யப்பட்டிருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. எல்லா விலங்குகளுக்கும் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன. அக்கால்நடைகளின் உடல் அதிகமாகச் சூடாகும்போது வியர்வை சுரந்து, உடல் சூட்டைத் தணிக்கிறது. மேலும் உடலில் உள்ள கெட்ட நீரும் இதன் மூலம் வெளியேறுகிறது. ஆனால் பன்றிக்கு வியர்வைச் சுரப்பிகள் கிடையாது. மனிதர்கள் சாதாரணமாக 110 டிகிரி வெப்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியும். ஆனால் 29 டிகிரி வெப்பத்திற்கு மேல் பன்றிகளால் தாங்கிக் கொள்ள முடியாது. அதனால்தான் அவை எப்போதும் சாக்கடையில் புரண்டு வெப்பத்தைத் தணித்துக் கொள்கின்றன. எனவே பன்றியின் உடலில் உள்ள நச்சுகள் வெளியேறுவதில்லை.

அதனால் பன்றியின் இறைச்சியை உண்பதால் மனிதனுக்குப் பலவிதமான நோய்கள் ஏற்படுகின்றன. அந்த இறைச்சியில் மனிதனுக்குக் கேடு விளைவிக்கின்ற நாடாப்புழுக்கள் என்ற நுண்கிருமிகள் உள்ளன. உச்ச வெப்பத்திலும் இப்புழுக்கள் அழிவதில்லை. பன்றி இறைச்சியை உண்பதால் 60 க்கும் மேற்பட்ட நோய்கள் ஏற்படுவதாக மருத்துவ உலகம் கண்டறிந்துள்ளது. அதிலும் குறிப்பாக பன்றியின் சுவாசப் பையில் இருக்கும் 'எச் 1 என் 1' என்ற வைரஸ் கிருமிகள் 'ஆர்.என்.ஏ.' மூலக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு உருமாறி மனிதர்களைத் தொற்றக்கூடியவை. இதுவே பன்றிக்காய்ச்சல் எனப்படுகிறது. நோய் எதிர்ப்புச்சக்தி குறைவாக இருக்கும் குழந்தைகள் முதியோர்களை எளிதில் தாக்கும். **பலவித நோய்களின் உறைவிடமாகத் திகழ்கின்ற பன்றி இறைச்சியை உண்பதற்கு இஸ்லாம் தடை விதித்துள்ளது.**

**மேலும் ஹராம் ஆக்கப்பட்டவைகளில் அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர்கூறி அறுக்கப்பட்டவற்றினதும் அல்லாஹ் அல்லாதவருக்காக அறுக்கப்பட்டவற்றினதும் மாமிசங்களை உண்பதற்கும் இஸ்லாம் தடை செய்துள்ளது. மற்ற உயிரினங்களை அறுத்தே உண்ண வேண்டும். ஆனால் மீன்களை அறுக்கத் தேவை இல்லை. செத்த மீன்களையும் உண்ணலாம் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அது (கடல் நீர்) தூய்மையானது. அதன் இறந்தவை ஆகுமானவை.** (ஆதாரம்: நபிமொழி)

மீன் அல்லாத உயிரினங்களை அவசியம் அறுத்தே உண்ண வேண்டும். ஆனால் மீனை அறுக்காமல் உண்ணலாம். இதற்குக் காரணம் நீர் வாழ் உயிரினங்களுக்கு ஓடுகின்ற இரத்தம் கிடையாது. அதை உயிருடன் பிடித்து அறுத்தாலும் அதில் இருந்து சிறிதளவு இரத்தம் கசியுமே தவிர இரத்தம் வடியாது. இரத்தம் பீறிட்டு ஓடாது. இதனால்தான் மீனை உயிரோடு அறுக்காமலும் உண்ணலாம் என்று இஸ்லாம் அனுமதித்துள்ளது.

மின்ஸார் இப்றாஹீம்...

# தென்னிந்திய திருச்சபை ஆலய நத்தார் கரோல் நிகழ்வு

*தென்னிந்திய திருச்சபை ஆலயத்தின் கிறிஸ்து பிறப்பு இன்னிசை வழிபாடும் பிள்ளைகளின் நத்தார் மர நிகழ்வும் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு 08, பொரள்ளை, கிங்ஸி வீதி, 28ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கேரி கல்லூரியின் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.*

*அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பதாக தெரிவித்துள்ளனர்.*

# வேலாபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த பொது கூட்டம்

***களுத்துறை சுழற்சி நிருபர்***

*களுத்துறை, வேலாபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த பொது கூட்டம் எதிர் வரும் 24ஆம் திகதி காலை 10 மணியளவில் ஆலய கலாச்சார மண்டபத்தில் நிர்வாக சபை தலைவர் டி. அஜித் குமார் தலைமையில் நடைபெறும்.*


*மேற்படி பொது கூட்டத்தில் பல்வேறு புதிய தீர்மானங்கள் ஆலய யாப்பில் உள்வாங்கப்பட உள்ளதால் பிரதேச இந்து பொது பக்த மக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய நிர்வாக சபை பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றது.*


## இன்றைய பலன்கள்


**( 22. 12. 2023 )**

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



***மேஷம்:***

*எதிர்பாராத விடையங்கள் உண்டு .தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும் தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும்.*

***ரிஷபம்:***

*திடீர் திருப்பங்கள் பலவும் சந்திப்பீர்கள். விபரீத ராஜயோக அடிப்படையில் இடம் ,பூமி வாங்கும் முயற்சி கைகூடும்.*


***மிதுனம்:***

*உங்களை விரும்பாத சிலர் உங்களுக்கு போட்டியாக செயல்படுவர். ஒரு கடனை அடைக்க மற்றுமொரு கடனை வாங்கும் சூழ்நிலை உருவாகும் .*

***கடகம்:***

*தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.உத்தியோகத்தில் நீங்கள் தீவிரமாக உழைத்தாலும் அதற்கான அங்கீகாரம் கிடைக்காது.*


***சிம்மம்:***

*பணி புரியும் இடத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். சொத்துக்களாலும் சொந்தங்களாலும் நன்மை ஏற்படும்.*

***கன்னி:***

*பெற்றோர் ஆதரவு திருப்தி தரும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். தொழில் நடத்துபவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.*


***துலாம்:***

*இடம் பூமி வாங்கும் யோகம் உண்டு. பத்திரப்பதிவில் இருந்து தடைகள் அகலும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் படிப்படியாக விலகும்.*

***விருச்சிகம்:***

*புதிய தொழில் தொடங்கும் திட்டங்களில் நிறைவேறும். என்றைக்கோ குறைந்த விலைக்கு வாங்கி போட்ட சொத்து இப்பொழுது அதிக விலைக்கு வெற்றிலை லாபத்தை கொடுக்கும்.*

***தனுசு:***

*கட்டிடம் கட்டிக் குடியேறும் யோகம் சிலருக்கு உண்டு. விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.*

***மகரம்:***

*தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. பாகப்பிரிவினை சுமூகமாக முடியும். அண்ணன் தம்பிகளுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும்.*

***கும்பம்:***

*பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். தொழில் தொடர்பாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். திருமண தடை அகலும்.*

***மீனம்:***

*கொடுக்கல் வாங்கல்கள் சரளமான நிலைக்கு வந்துவிடும். வாகனங்கள் அடிக்கடி பழுதாகி மனக்குழப்பத்தை உருவாக்குகின்றதே இனி புதிய வாகனங்கள் வாங்கலாம் என்று சிந்திப்பீர்கள்.*

## மூன்று வருடங்களின் பின்னர்...

சுற்றுலா பொருளாதரம் உட்பட கீழ்மட்ட வேலைத் திட்டங்கள் பலவும் தடைப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அந்த வேலைத்திட்டங்களை மீளவும் ஆரம்பித்து கிராமிய மக்களுக்கு அதன் பலன்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது அவசியமெனவும், கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கமாக கொண்டு அனைத்து அபிவிருத்திச் செயற்பாடுகளையும் முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவர்களுக்கு அறிவுறுத்தினார்.

அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது மத்திய மற்றும் மாகாண அடிப்படையில் பிரிந்துச் செயற்படாமல் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

2024 ஆம் ஆண்டு ஒவ்வொரு மாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் நிதி பகிர்ந்தளிக்கப்படும் விதம் தொடர்பிலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மக்களுக்கு காணி உரிமைகளை வழங்குதல் மற்றும் விவசாய நவீனமயப்படுத்தல் உள்ளிட்ட வேலைத்திட்டங்கள் பிரதான வேலைத்திட்டங்களாக கருதப்பட்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய வேலைத்திட்டங்களுடன் பார்க்கும்போது மேற்படித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து ஜனாதிபதி அலுவலகத்தின் நேரடி தலையீட்டின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

''கடந்த 03 வருடங்களாக அரசாங்கத்தினதும் மாகாண சபைகளினதும் மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் கிராமிய பொருளாதாரம் பெரும் சரிவை சந்ததித்து. கிராமிய மட்டத்திலான பல வேலைத்திட்டங்களும் முடங்கின. சுற்றுலாத்துறையும் சரிவை சந்தித்தது. அதனால் மாவட்ட மற்றும் கிராமிய மட்டத்திலான பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பிக்கவுள்ளோம்.

அடுத்த வருடத்தில் இந்நாட்டுக்கு வருகைத்தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டில் வருகை தந்தவர்களின் எண்ணிக்கைக்கு நிகரானதாக அமையக்கூடும். கீழ்மட்ட பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். அதற்காக இம்முறை விரிவுபடுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தை ஒதுக்கியுள்ளோம். அதனை அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிப்போம். பிரதேச மட்டத்திலான பிரநிதிகளுடன் கலந்துரையாடி அபிவிருத்திக்கான யோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதேபோல் மலைநாட்டு வேலைத்திட்டம் ஒன்றும் உள்ளது. மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட நிதிக்கும் மேலதிகமாக மலையகத்திற்கு வழங்கப்படும். இன்னும் 05 06 வருடங்களுக்கு மலையக பகுதிகளின் அபிவிருத்திக்காக அந்த தொகை வழங்கப்படும். மலையக பகுதியில் அபிவிருத்தி குன்றிய தமிழ், சிங்கள கிராமங்களின் மேம்பாட்டிற்காகவே அதனைச் செய்கிறோம்.

அதற்கு மேலதிகமான மாகாண சபைகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அமைச்சுக்களுக்காக ஒதுக்கப்பட்ட மூலதனச் நிதியும் உள்ளது. வெளிநாட்டு உதவிகளுடன் முன்னெடுக்கப்படும் பல வேலைத்திட்டங்களும் உள்ளன. அதனை செயற்படுத்துவதற்கான தடைகளை நீக்கி கீழ் மட்டத்திலிருந்து வசதிகளை பெருக்க வேண்டும்.

அதற்கு மேலதிகமான காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதி பத்திரங்களை வைத்திருப்போருக்கு காணி உரிமத்தை வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்படுகிறது. எனக்கு கிடைத்திருக்கும் தரவுகளுக்கமைய 20 இலட்சம் குடும்பங்கள் அதற்கு தகுதி பெற்றுள்ளன. இது இலகுவான பணியல்ல. அதன் முதற்கட்ட வேலைத்திட்டம் 05 ஆம் திகதி தம்புளையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதன் பின்னர் மாவட்ட மட்டத்தில் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். அதற்காக ஒரு மாவட்டத்தில் ஒரு பிரதேச சபையை தெரிவு செய்து அந்த பணிகளை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்க்கிறோம். அந்த பணிகள் மார்ச் மாதமளவில் ஆரம்பிக்கப்படும்.

அதேபோல் விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்படும். அதற்காக மத்திய அரசாங்கம் மாற்றும் மாகாண சபைகளை இணைத்துக் கொண்டு அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கிய புதிய வேலைத்திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்படும்.

மேற்படி பணிகளுக்காக எம்.பிக்கள் மற்றும் உரிய குழுக்களின் ஊடாக கீழ்மட்ட தலைவர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம். மூன்று வருடங்கள் தாமதமாகிய அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒரே தடவையில் ஆரம்பிப்பது இலகுவானதல்ல. எவ்வாறாயினும் வெளிநாட்டு கடன்களின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்களையும் மீள ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். இவை ஒரே வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் அல்ல. 05 06 வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த திட்டங்கள். இருப்பினும் நாம் இவை அனைத்தையும் ஒரே முறையில் ஆரம்பிக்க வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. அதற்காக அனைத்து அதிகாரிகளினதும் ஒத்துழைப்பு அவசியம். அதேபோல் எம்.பிக்களின் ஒத்துழைப்பும் அவசியம். அரசியல் பிரதிநிதிகளின் யோசனைகளும் ஆலோசனைகளும் அவசியம்.

இதன்போது அனைத்து பிரதமச் செயலாளர்களும் மாவட்டச்செயலாளர்களும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகளுடன் சிறந்த ஒருங்கிணைப்புடன் ஒரே குழுவாக செயற்பட வேண்டியது அவசியமாகும்.

பிரதேச அரசியல் தலைமைத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குழுக்கள் அமைத்து, குழுவின் வேலைத்திட்டங்களை ஒருக்கிணைப்புச் செய்வதற்கான தலைவராக எம்.பி ஒருவரை நியமிக்க வேண்டும். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்களும் அதற்குள் உள்வாங்கப்படுவர். அதன்படி தங்களது பிரதேசங்களில் நடக்கும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான மேற்படி தரப்பினர் ஒற்றுமையாக செயற்பட வேண்டியது அவசியமாகும்.

அந்த பணிகளை ஆளுநர், பிரதமச் செயலாளர்கள், புதிய மாவட்ட குழுக்களின் தலைவர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்கள் இணைந்து மாதாந்த பணிகளை மேற்பார்வை செய்ய வேண்டியதும் அவசியமாகும். இந்த பணிகளில் இறுதி அம்சமாக இவற்றின் பலன் மக்களை சென்றடைய வேண்டும். கிராமங்களுக்கு நிதி கிடைக்கக்கூடியவாறு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் அதே நேரம் கிராமிய பொருளாதாரத்தையும் ஊக்குவிக்க வேண்டும். கிழக்கு மாகாணம், தம்புளை, கொழும்பை மையப்படுத்தி சுற்றுலாத் துறையை விரிவுபடுத்தும் பட்சத்தில் கிராமிய பகுதிகளிலும் குறிப்பிட்டளவு அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். அதேபோல் விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்துடன் அடுத்த இரு வருடங்களில் விவசாய உற்பத்திகள் உயர்வடையும். அதனால் போட்டித்தன்மையுடன் கூடிய விவசாயத்தை கட்டியெழுப்ப இடைக்கால பிரதிபலன்களை கிராமிய பொருளாதாரத்திற்கு வழங்க எதிர்பார்க்கிறோம். அதனால் கிராமிய பொருளாதாரம் தொடர்பில் கவனம் செலுத்தி மேற்படி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர்களை சார்ந்துள்ளது. இதன்போது தீர்வுகான முடியாத பிரச்சினைகளை பிரதமர் தலைமையில் நியமிக்கப்பட்டிருக்கும் குழுவிடம் சமர்பித்து அதற்குரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு தீர்வு கிட்டாத பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரவையில் ஆலோசிக்க தீர்மானித்துள்ளோம்.'' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## போதைப்பொருள் வர்த்தகம், பாதாள...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (21) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டிரான் அலஸ்,

“யுக்திய” என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் தடுப்பு சிறப்பு நடவடிக்கை குறித்து தற்போது நாடு முழுவதும் பேசப்படுகிறது. நாட்டில் போதைப்பொருள் வர்த்தகமும் பாதாள உலக செயற்பாடுகளும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இவற்றை யாராவது நிறுத்த வேண்டும். எனவே இதனை நிறுத்த தீர்மானித்தேன். அதற்காகத்தான் “யுக்திய” சிறப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்த விடயத்தில் சமூக பொலிஸ் குழுக்களுக்கும் விசேட பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நடவடிக்கை வெற்றியடைய மக்களின் ஆதரவும் குறிப்பாக ஊடகங்களின் ஆதரவும் அவசியம். முப்பது வருட யுத்தம் வடக்கு கிழக்கில் மாத்திரமே இருந்தது. ஆனால், தற்போதுள்ள இந்த யுத்தம் நாடு பூராகவும் பரவியுள்ளது. இதனை முடிவுக்குக் கொண்டுவர பொதுமக்கள் வழங்கும் ஆதரவு பாதுகாப்புத் துறைக்கு பெரும் பலமாக அமைந்துள்ளது.

எனவே, இதற்குத் தேவையான ஆதரவையும் சரியான தகவல்களையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு முழுமையான ஒத்துழைப்பு கிடைத்தால் அடுத்த வருடம் ஜுன் மாதத்திற்குள் போதைப்பொருள் வர்த்தகத்தையும் பாதாள உலக செயற்பாடுகளையும் ஒழிக்க முடியும் என நம்புகிறேன்.

அத்துடன், கடல் மார்க்கமாக இந்நாட்டுக்கு போதைப்பொருள் கொண்டு வருவதைத் தடுக்க விசேட செயல்திட்டமொன்றை கடற்படையினர் ஆரம்பித்துள்ளனர். முதலில், நாட்டில் இயங்கும் போதைப்பொருள் விநியோக வலையமைப்பை நிறுத்த வேண்டும். இரண்டாவதாக போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய பாதாள உலக செயற்பாடுகள் நிறுத்த வேண்டும்.

மூன்றாவதாக, போதைப்பொருட்களைப் பயன்படுத்துவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். போதைக்கு அடிமையானவர்களுக்குப் பதிலாக போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை வழங்கினேன். போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய 4,665 பேர் இருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் எமக்கு கிடைத்துள்ளன. இவர்கள் அனைவரையும் கைது செய்ய உத்தரவிட்டுள்ளேன். கடந்த 04 நாட்களில் மாத்திரம் புலனாய்வுத்துறை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 731 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். புலனாய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்படாத சந்தேக நபர்களும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக 8,451 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 346 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 61 பேர் சொத்து விசாரணைக்காகவும், 697 பேர் புனர்வாழ்விற்காகவும் அனுப்பப்பட்டுள்ளனர்.

# அகில இலங்கை எம்ஜிஆர் மன்றத்தின் நினைவு அஞ்சலி

*தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆரின் 36ஆவது நினைவு அஞ்சலியும் தமிழக முன்னாள் முதல்வர்புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதாவின் 7வது நினைவு அஞ்சலியும் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு கொழும்பு 11, பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அகில இலங்கை எம்ஜிஆர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வு அதன் தலைவர் எஸ். எச். எம். இதிரீஸ் தலைமையில் சட்டத்தரணி ரஷித் எம். இம்தியாஸ் முன்னிலையில் நடைபெறும். இதில் பிரதம அதிதியாக கொழும்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் எம். டீ.எம். இக்பாலும் பிரபல தொழில் அதிபர்களான அ. முத்தப்பன் செட்டியாரும் எட்மண்ட் பெர்னாண்டோவும் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்வார்கள். பிரபல நகைச்சுவைக் கவிஞர் பிரேம்ஜீ, பிரபல தொழில் அதிபர் இம்ரான் நெய்னார், டாக்டர் நிலாம், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஜோசப் பெர்ணான்டோ, தெலுங்கு காங்கிரஸ் தலைவர் அன்பழகன், அச்சக உரிமையாளர் தேவர் முனிவர், பொன்மாலைப் பொழுது தயாரிப்பாளர் முஹம்மத் இர்பான், சங்கவி பிலிம்ஸ் அதிபர் சுரேஷ் ஆகியோர் விஷேட அதிதிகளாக கலந்து கொள்வார்கள்.*

## சிவனொளிபாதமலை யாத்திரை...

வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, அனுமதிக்கப்பட்ட இடங்களை தவிர்ந்த ஏனைய இடங்களில் வழிபாட்டு பொருட்கள் மற்றும் உணவு பொருட்கள் உள்ளிட்டவற்றை விற்பனை செய்யக் கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புகையிலை உள்ளிட்டவற்றை எடுத்து செல்வதற்கும் விற்பனை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட இடங்களை தவிர்ந்த ஏனைய இடங்களில் தற்காலிக அல்லது நிரந்தர வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அன்னதானம் வழங்குவதற்கு முன்னர் அதற்கான அனுமதி பெறப்பட வேண்டும். உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களில் சுகாதாரம் உரிய முறையில் பேணப்பட வேண்டும். இதேவேளை, சிவனொளிபாதமலை தலம் மற்றும் ஓய்வறை உள்ளிட்ட எந்தப் பகுதியிலும் யாசகம் பெறுவதற்கு தடை விதிக்கப்படுவதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழரசுக் கட்சியின் மாநாடு...

கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"கடந்த 18 ஆம் திகதி எங்களுடைய கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கட்சியின் பொதுச் சபைக் கூட்டமும் புதிய தலைவர் உள்ளிட்ட நிர்வாகத் தெரிவும் நடைபெற இருக்கின்றன.

எக்காரணம் கொண்டும் கட்சிக்கான புதிய தலைவர் தெரிவு அல்லது பொதுச் சபைக் கூட்டம் ஒத்திவைக்கும் எண்ணத்தில் கடந்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் இல்லை. ஆகவே, தெரிவு என்பதில் தெளிவாகவே நாங்கள் இருக்கின்றோம். மாற்று எண்ணத்திலும் எவரும் இல்லை. தேசிய மாநாட்டுக் கூட்டத்தை குறிப்பிட்ட திகதியில் நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான் சகலரும் உறுதியாக இருக்கின்றனர்.ஆகையினால் திட்டமிட்டபடி நிச்சயமாக இந்தக் கூட்டம் நடைபெறும். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அதில் தலைவர் தெரிவும் நடைபெறும்.

அந்தத் தெரிவில் போட்டி இருக்குமா?, இல்லையா?என்பது குறித்து எல்லாம் எனக்குச் சொல்லத் தெரியவில்லை. ஆனால், நிச்சயமாகத் தலைவர் உள்ளிட்ட நிர்வாகத் தெரிவு நடக்கும். இவை நடைபெறும் வாய்ப்புக்கள் 90 வீதம் இருக்கின்றன.

## அஸ்வெசும:,14 10,064 குடும்பங்களுக்கு...

அனுப்பப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். அந்த வகையில் இம்முறை டிசம்பர் மாத நலன்புரி கொடுப்பனவுகளுக்காக பதிவு செய்யப்பட்டுள்ள 1,410,064 பயனாளிகளுக்கு இந்நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். அதேவேளை, அரசாங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கடந்த ஜுலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 51, 967 மில்லியன் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## DRONE தொழில்நுட்பத்தில்...

உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேல் மாகாணத்தில் கொழும்பு நகர எல்லைப்பகுதி, கல்கிசை, கடுவெல நகர எல்லை ஆகிய பகுதிகளில் பெருமளவு டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். சுகாதாரத் துறையினரின் அர்ப்பணிப்புடனான செயற்பாடுகள் மூலம் அப்பகுதியில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சாத்தியமானதாக முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டங்கள் நடைமுறையிலிருந்தாலும் மக்களுக்கு தெளிவூட்டி அவர்களையும் தொடர்புபடுத்தி நடவடிக்கையை மேற்கொள்வது முக்கியமாகும்.

இது அனைவரும் இணைந்து மேற்கொள்ளக்கூடிய செயற்பாடு என்றும் ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு இதற்கு அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

## பண்டிகைக்காலம்: நாடு முழுவதும்...

வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் சிவில் உடையில் பொலிஸ் உத்தியோகத்தர்களும் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக சட்டத்தரணி நிஹால் தல்துவா குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு இன்று முதல் விசேட பேருந்து மற்றும் ரயில் சேவையை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் மற்றும் பாடசாலை விடுமுறை நாட்களில் கிராமங்களுக்கு செல்லும் மக்களுக்காக விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இன்றுமுதல் நீண்ட தூர சேவைகளுக்காக நூறு மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என இலங்கை போக்குவரத்து சபை வலியுறுத்தியுள்ளது.

## பாடசாலைகளுக்கு இன்று...

இயங்கும் தனியார் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் இன்றுடன் முடிவடைகின்றன. இதன்படி, மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும். புதிய ஆண்டின் புதிய கல்வி தவணை நடவடிக்கைகள், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19 இல், ஆரம்பிக்கப்படுமென கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## ஜப்பானில் தொழில் தருவதாக...

வயதுடையவரென பொலிஸார் தெரிவித்தனர். இவர் அனுமதிப்பத்திரமின்றி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் ஒன்றை நடத்தி வந்துள்ளதாகவும் பல இலட்சம் ரூபா மோசடி செய்துள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. அநுராதபுரம் பிரதேசத்திலுள்ள பெண்ணொருவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமொன்றுக்கு இது தொடர்பில் முறைப்பாடு வழங்கியுள்ளார். இதனையடுத்து அதிகாரிகள் அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில், சந்தேக நபரின் வெளிநாட்டு பயண அனுமதியும் தடை செய்யப்பட்டுள்ளது. இவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு (19) நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார்.

## பாதாளகோஷ்டி, போதைப் பொருள்...

கொண்டு வரப்படுமென அவர் தெரிவித்துள்ளார். மக்கள் அமைதியான சூழ்நிலையில் வாழ்வதற்கான பின்னணியை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். யுக்திய என்னும் பெயரில் விசேட பொலிஸ் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இம்மாதம் 17 இல்,ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை எதிர்வரும் 23 வரை தொடரும் எனவும் பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக இணைந்து முன்னெடுத்த யுக்திய நடவடிக்கையின் ஊடாக இதுவரையில் 6,583 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## வடக்கு, கிழக்கு தமிழ் எம்.பிக்கள்...

டீ கலையரசன், குலசிங்கம் திலீபன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திசாநாயக்க, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரட்ண, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்த்தன, வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர். இம்.சீ.எம்.ஹேரத், சுற்றாலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் எச்.எம். பீ.பீ. ஹேரத் உள்ளிட்டவர்களும் நல்லிணக்கம் தொடர்பிலான நிறுவனங்களின் பிரதானிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

## வடக்கு கிழக்கில் பலத்த....

இதன்படி மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படலாம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னலின் அபாயத்தைக் குறைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## தொழில்நுட்ப கோளாறு...

இருந்த பயணிகளை விரைவில் மற்ற விமானங்களில் மாலைத்தீவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாலை 06.30 மணிக்கு புறப்பட்ட விமானத்தில் மீதமுள்ள பயணிகளை மாலைதீவுக்கு அனுப்ப விமான நிலைய அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர்.

## புதிய இந்திய உயர்ஸ்தானிகர்...

பொறுப்பேற்கவுள்ளார். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக பணியாற்றிய கோபால் பாக்லே, ஆஸ்திரேலியாவுக்கான இந்திய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகராக இந்தியாவின் சிரேஷ்ட இராஜதந்திரியான ஸ்ரீ சந்தோஷ் ஜா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பெல்ஜியத்துக்கான இந்தியத் தூதுவராகக் கடமையாற்றினார்.

## இன்றைய நவீன யுகத்துக்கு அவசியமான உயர்கல்வி

# விஞ்ஞானம், தொழில்நுட்பத்திற்கான சர்வதேச பல்கலைக்கழகம்

**★மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கைகள் ஜனவரி 03 ஆம் திகதி முதல் ஆரம்பம்**

**★ குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கவும் திட்டம்**

இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் மனித வள மேம்பாட்டுக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நவீன யுகத்திற்கு ஏற்ப இளைஞர், யுவதிகளைக் கட்டியெழுப்புவதில் அதிகூடிய கவனம் செலுத்தியுள்ளன. அதற்கேற்ப உயர்கல்வியைப் பெற விரும்புவோரின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக பாரிய பங்களிப்புக்களை அவை நல்கி





வருகின்றன.

தற்போதைய சூழலில் இந்நாட்டு இளம் பராயத்தினர் தொழில்நுட்பத் திறன், உயர்தர அங்கீகாரம் பெற்ற கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகள் ஆகியவற்றுடன் கூடிய தரமானதும் உயர்தரத்திலுமான கல்வியைத் தேடுவதில் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளனர். அதனை நிறைவேற்றுவதில் பல்கலைக்கழகங்களும் உயர்கல்வி நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன.

இதன் பயனாக உயர்கல்வி பெற்று வெளியேறும் இளம் பட்டதாரிகள் எல்லையற்ற உலகை ஆராயவும் அவர்களது முழு திறனையும் கனவுகளையும் நனவாக்கிக் கொள்ளவும் வாய்ப்புகள் கிடைக்கப்பெறுகின்றன.

இன்றைய காலகட்டத்தில் இந்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் பெரும்பாலான வளங்கள், கற்பித்தல் மற்றும் பயிற்சியுடன் இணைந்த கற்கைகளை வடிவமைத்து மேம்படுத்தவும், கற்பித்தல் மற்றும் பயிற்சி தொடர்பான வளங்கள், வழிமுறைகள் மற்றும் கருவிகளை வழங்கவும், ஆய்வுகள் செய்யவும் பயன்படுத்தப்படுகின்றன.

அந்த வகையில் இந்நாட்டு அரசியலில் மூன்று தசாப்தங்களுக்கும் மேற்பட்ட பரந்த அரசியல் அனுபவத்தைக் கொண்டுள்ளவரும் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் பேராதனை பல்கலைக்கழகத்திலும் அமெரிக்காவின் பசுமைப் பல்கலைக்கழகத்திலும் உயர் பட்டப்படிப்புகளை மேற்கொண்டவருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்வினால் இந்நாட்டு இளம் பராயத்தி



னருக்கு நவீன யுகத்திற்கு ஏற்ற தரமான உயர்கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும் இப்பல்கலைக்கழகம் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்த நிலையில் சுமார் நான்கு வருட காலம் அரசின் கீழ் கடந்த ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்டிருந்தன.

என்றாலும் நாட்டின் துரித பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு செயற்பட்டுவரும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் அடிப்படையில் இப்பல்கலைக்கழக கட்டடங்கள் அதன் ஸ்தாபகரும் முன்னாள் ஆளுநருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்விடம் அண்மையில் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்நாட்டின் இளம் பராயத்தினருக்கு சிறந்த உயர் கல்வியைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய வளங்களைக் கொண்டுள்ள நிறுவனமொன்று எவ்வித பயன்பாட்டுக்கும் உட்படுத்தப்படாத வகையில் மூடப்பட்டு கிடக்க இடமளிக்கக்கூடாது என்ற அடிப்படையில் மீளக் கையளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பிப்பதற்கும் உலகளாவிய ரீதியில் வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு, இணைய குற்றங்கள் தொடர்பான கற்கைகள் உள்ளிட்ட கற்கைநெறிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஆரம்பிப்பதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. 2007 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டம் எண் 7 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இப்பல்கலைக்கழம் 'இன்டர்நேஷனல் கெம்பஸ் ஒஃப் சயின்ஸ் அண்ட் டெக்னொலஜிஸ் (பிரைவேட்) லிமிடெட்' என்ற பெயரைப் பெற்றுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தின் உள்ளக வீதிகளை நவீனப்படுத்தி செப்பனிடும் பணிகள் வேகமடைந்துள்ளன. இங்கு அமைக்கப்பட்டுள்ள நூலகம் வளர்ச்சி பெற்ற நாடொன்றின் பல்கலைக்கழகம் கொண்டிருக்கும் நவீன வசதிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

கணனி கற்கைகளுக்கென மூன்று கணனி கூடங்கள் செயற்பாட்டு நிலைக்கு மேம்படுத்தப்பட்டுள்ளன. விரிவுரை மண்டபங்களும் மாணவர் தங்கும் விடுதிகளும் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகர் ஹிஸ்புல்லாஹ், ஜனவரி மாதம் 3 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் கல்வி நடவடிக்கைகளுக்காக மாணவர்களை உள்வாங்கும் பணிகள் ஆரம்பமாகும். பெப்ரவரி மாத இறுதியில் அல்லது மார்ச் மாத முற்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இப்பல்கலைக்கழகம் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படும் என்றார்.



'கல்வி நடவடிக்கைகளுக்கு மாணவர்களை ஜனவரியில் உள்வாங்கும் வகையில் இணைய வழியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதன் ஊடாக சுமார் 300 350 விண்ணப்பங்கள் தான் கிடைக்கப்பெறும் என எதிரபார்த்தோம். ஆனால் இவ்விண்ணப்பம் கோரப்பட்ட சில நாட்களுக்குள் 2,000க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. முஸ்லிம் மாணவர்கள் தான் பெருமளவில் விண்ணப்பித்துள்ளனர். ஆனால் இப்பல்கலைக்கழகம் இந்நாட்டில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களுக்குமானது. இது தனியே முஸ்லிம் மாணவர்களுக்கானதல்ல எனவும் குறிப்பிடுகிறார் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்.

இப்பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெற விண்ணப்பித்துள்ள மாணவர்கள் ஜனவரி 3 ஆம் திகதி முதல் தினமும் 50 பேர் படி பெற்றோருடன் வரவழைக்கப்பட்டு பல்கலைக்கழகத்தின் வசதிகள் காண்பிக்கப்படும். அதனைத் தொடர்ந்து நேர்முகப் பரீட்சைகளும் நடாத்தப்படும். தற்போது விண்ணப்பித்துள்ள மாணவர்களுக்கான பதிவுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எமது பல்கலைக்கழகத்தில் முதல் கட்டமாக பொறியியல், தகவல் தொழில்நுட்பம், கட்டட வடிவமைப்பு மற்றும் அளவீடு, சுற்றுலா மற்றும் வணிக முகாமைத்துவம், விவசாய தொழில்நுட்பம் மற்றும் வள முகாமைத்துவம், மற்றும் மொழிகள் ஆகிய கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.



மேலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு உயர்கல்வியைப் பெற்றுக்கொடுக்கவும் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக வெளிநாட்டில் பட்டப்படிப்பை மேற்கொள்ள இலங்கை நாணயப்படி சுமார் 20 முதல் 25 இலட்சம் ரூபாய் செலவாகுமாயின் இப்பல்கலைக்கழகத்தில் குறைந்தபட்சம் 10 முதல் 15 இலட்சம் ரூபா செலவில் பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம்.

இந்நிலையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்கவென நிதியமொன்றை நிறுவவும் இப்பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா எதிர்பார்த்துள்ளார். இதன் ஊடாக மிகவும் நியாயமான தொகைக்கு, இப்பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கப்பெறும்.

இச்சமயம் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா மேலும் குறிப்பிடும் போது, 'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்து தீர்மானங்களை மேற்கொள்ளும் தலைவராவார். நான் பல ஜனாதிபதிகளுடன் இணைந்து பணியாற்றியுள்ளேன். ஆனால் சிலர் நீண்ட கால நோக்கில் நாட்டைப் பற்றி சிந்திக்காமல் செயற்பட்டுள்ளார்கள். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்காக முடிவுகளை எடுக்கக்கூடியவராவார். அதை சில அரசியல்வாதிகளால் புரிந்து கொள்ள முடியாதுள்ளது.

உண்மையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இற்றைக்கு பல வருடங்களுக்கு முன் நம் நாட்டின் ஜனாதிபதியாக இருந்திருக்க வேண்டும். அவர் தொலைநோக்கு பார்வை மிக்க தலைவர். நாம் இந்நாட்டை அபிவிருத்தி செய்ய விரும்புகிறோம். பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும். அதற்கு இந்நாட்டின் குடிமக்கள் என்ற வகையில் நாம் ஆதரவு வழங்க வேண்டும்.

எனினும், நாம் நமது நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டும். இன்று உலகிற்கு தேவையான செயற்கை நுண்ணறிவு, இணைய குற்றங்கள், தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். இக்கல்வி அறிவை எமது பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இக்கற்கைகள் சிறப்பு ஆர்வத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளன. இப் பாடநெறிகளுக்கு வருடத்திற்கு சுமார் 10,000 மாணவர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் தற்போது 1000 பேருக்குக் கூட இக்கல்வி பெற்றுக்கொடுக்கப்படுவதில்லை. இவற்றைக் கற்க வாய்ப்பு கிடைக்கப்பெறாத மாணவர்களில் சுமார் 7000 பேர் இந்தியா செல்கின்றனர். அவை அனைத்தையும் இந்நாட்டில் வழங்க முடியுமென்றால் வருடமொன்றுக்கு சுமார் 5 பில்லியன் டொலர்களை ஈட்ட முடியும். எனவே, உலகிற்குத் தேவையான உயர் கல்வியை வழங்குமாறு எங்களுக்குத் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அந்த பாடப்பிரிவுகளை தொடங்கும் பணியில் நாம் ஏற்கனவே ஈடுபட்டுள்ளோம்' என்றார்.



இப் பல்கலைக்கழகத்தில் கற்கை நெறிகளை விரைவில் ஆரம்பிப்பதிலும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் தீவிரமாக செயற்பட்டுவரும் தேசமான்ய மங்கள செனரத் இது தொடர்பாகக் கூறும்போது, 'இப்பல்கலைக்கழகத்தின் மூலம் எமது பிள்ளைகள் மிகவும் நியாயமான விலையில் கற்கை நெறிகளை மேற்கொள்ள முடியும்.

பொதுவாக, வெளிநாட்டில் பட்டப்படிப்பை மேற்கொள்ள நிறைய பணம் செலவாகும். ஆனால் நம் நாட்டில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் மிகவும் நியாயமான கட்டணத்தில் பட்டப் படிப்புகளை தொடர முடியும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்பல்கலைக்கழகம் தொடர்பில் அக்கறையுடன் செயற்படுகின்றார். இளம் பராயத்தினரின் எதிர்காலம் தொடர்பில் முக்கியமான முடிவுகளை எடுத்துள்ளார். இப்பல்கலைக்கழகத்தை உயர்கல்வி நடவடிக்கைகளுக்காக திறப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள முடிவு மிகவும் வரவேற்கத்தக்கதாகும்' என்றார்.

இப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பேராசிரியர் ஜயந்தலால் சந்திரசேகர நியமிக்கப்பட்டுள்ளார். அவர் கடமைகளை பொறுப்பேற்று பணிகளை ஆரம்பித்துள்ளார். இங்கு சுமார் 10,000 பிள்ளைகளுக்கு உயர்கல்வி வழங்கக்கூடிய பல பாடநெறிகள் திட்டமிடப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் சில புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் நவீன யுகத்திற்கு அவசியமான வளங்களைக் கொண்டுள்ளது. இது இந்நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு மிகப்பெரிய முதலீடு என்றால் அது மிகையாகாது.

**மர்லின் மரிக்கார்**






ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2023.12.20
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5334
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,843,584.00
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 4 0 8 8 2 7

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3576
சீட்டிழுப்பு திகதி 2023.12.20
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,263,399.40
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 43 51 73 75
விசேட எழுத்து D
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 23617

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1682
2023.12.20
62906
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 418,465,656.00
ஆங்கில எழுத்து R
சுப்பர் இலக்கம் 12
வெற்றி இலக்கங்கள் 33 34 71 77
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP**
திகதி 2023.12.20
சீட்டிழுப்பு இலக்கம் 0160
ஆங்கில எழுத்து D
L7 எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 4 3 6 2 0 8
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 21,797,039.00

**ராசி சுப பலன்**
திகதி 2023.12.20
சீட்டிழுப்பு இலக்கம் 643
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,111,280.24
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 04 37 38 42
தனயோக இலக்கம் 37802
நாளுக்கான விதி எண் 29

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1364
2023.12.20
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 126,187,604.32
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 08 45 63 69
விசேட எழுத்து L
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 49971

# கிழக்கின் குரல்



## நிந்தவூரில் கடலரிப்பை தடுக்க ஜனாதிபதி நிதி ஒதுக்கீடு

### திகாமடுல்ல எம்.பி. பைசல் காசீம்

ஒலுவில் விசேட நிருபர்



நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுப்பதற்கான தடுப்புச்சுவர் நிர்மாணிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக, திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசீம் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்த கோரிக்கைக்கமைய இந்த நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

நிந்தவூரில் தொடர்ச்சியாக கடலரிப்பு ஏற்பட்டுள்ளதால் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம், தென்னந்தோட்டங்கள், வீடுகள், பொதுக்கட்டடங்கள் ஆகியன பாதிக்கப்பட்டு வருகின்றன. இதனால், அப்பிரதேசத்தில் வாழும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்காக கடலோரத்தை பேணல் மற்றும் கடல் மூலவள முகாமைத்துவ திணைக்களத்தால் இதற்கான செலவு மதிப்பீட்டை சமர்ப்பித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

நிந்தவூரில் கடலரிப்பை கட்டுப்படுத்தும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்தமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசீம் நன்றி தெரிவித்துள்ளார்.

## காத்தான்குடியில் 'யுக்திய' விசேட சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு குறூப் நிருபர்



யுக்திய போதைப் பொருள்ஒழிப்புமற்றும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான விசேட சுற்றிவளைப்பு தேடுதல் காத்தான்குடி பிரதேசத்தில் நேற்று அதிகாலை 4.00 மணி முதல் காலை 7.00 மணிவரை முன்னெடுக்கப்பட்டது.

இராணுவத்தினரும் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். போதைப்பொருள் விற்பனை இடம்பெறுவதாக அடையாளம் காணப்பட்ட பல இடங்களில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது இராணுவத்தினர், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் பல குழுக்களாக பிரிக்கப்பட்டு, வீடு வீடாக தேடுதல் நடத்தினர்.

மோப்ப நாயின் உதவியுடன் 15 க்கும் மேற்பட்ட வீடுகளில் தேடுதல் நடத்தப்பட்டது.

### புதிய காத்தான்குடியில்

## ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

ஊழலுக்கு எதிரான வாரத்தையொட்டி புதிய காத்தான்குடி தெற்கு 167 சி கிராம அலுவலர் பிரிவிலுள்ள பொதுமக்கள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் நிர்வாகிகளுக்கான விழிப்புணர்வுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை (19) புதிய காத்தான்குடி தெற்கு பல நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது காத்தான்குடி உதவிப் பிரதேச செயலாளர் எம்.எஸ். சில்மியா கலந்துகொண்டு, ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளித்தார்.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பாக காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### கிண்ணியாவில்

## பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சுயதொழில் உபகரணங்கள் வழங்கல்



தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிக்கான சுயதொழில் உபகரணங்கள் நேற்று வியாழக்கிழமை (21) வழங்கி வைக்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி தலைமையில் பிரதேச செயலகத்தில் வைத்து இந்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் கைம்பெண்களுக்கான சுயதொழில் திட்டத்தின் கீழ் 7 பயனாளிகளுக்கு இந்த உதவி வழங்கப்பட்டது.

இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அதன் மூலம் வருமானத்தை அதிகரிக்கவும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், தலைமை முகாமையாளர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கிழக்கு பாடசாலைகளில் கலை மன்றங்களை அமைக்கும் திட்டம்



அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் பாடசாலைகளில் கலை மன்றங்களை அமைக்கும் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை (19) நிகழ்வொன்று நடைபெற்றது.

பாடசாலை மாணவர்களின் கலை இலக்கிய ஆற்றல் மற்றும் ஆளுமையை மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று கல்வி வலயத்திலுள்ள 17 பாடசாலைகளில் கலை மன்றங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கமைய, அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் கருங்கொடி கலாமன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதுடன், அதற்கான நிர்வாகத் தெரிவும் நடைபெற்றது.

இதன்போது கலையுடன் தொடர்புடைய நூல்கள் மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரால் பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

முஸ்லிம் மத்திய கல்லூரி அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், அக்கரைப்பற்று கல்வி வலய தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ. சவுறுதீன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## அட்டாளைச்சேனையில் கலை இலக்கிய விழா

திராய்க்கேணி தினகரன் நிருபர்



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் இணைந்து நடத்திய பிரதேச கலை இலக்கிய விழா, அப்பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முஸாபீர் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (20) சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது பல்வேறு கலை நிகழ்வுகள் நடைபெற்றதுடன், மாவட்ட, பிரதேச மட்டங்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது ஷாபிர் கலந்துகொண்டார். அத்துடன் கணக்காளர் எஸ்.எல். றிபாஸ், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.மஜித், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.எம். ஹமீட், முகாமையாளர் எஸ்.எல். அஸீஸ், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்ஸான் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## பூச்சியியல் ஆய்வறிக்கை கையளிப்பு

பாலமுனை விசேட நிருபர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் சுகாதார பூச்சியியல் உத்தியோகத்தர் கே.ஏ.ஹமீட்டினால் தயாரிக்கப்பட்ட அரையாண்டுக்கான பூச்சியியல் ஆய்வறிக்கை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் முதல் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

## மண்முனை வடக்கில் கலைக்கதம்பம் நிகழ்வு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மண்முனை வடக்கு பிரதேச செயலகமும் பிரதேச செயலக கலை மன்றங்களும் இணைந்து நடத்திய கலைக்கதம்பம் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை (19) மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது நடனம், பாடல்கள், கவிதை, பறங்கியர் நடனம் மற்றும் முஸ்லிம் மாணவர்களின் பாடல்கள் போன்ற கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் ல.பிரஷாந்தன், மட்டக்களப்பு மாவட்ட உதவி செயலாளர் ஆ.நவேஸ்வரன், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டனர். கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ரூபி வலன்ரீனா பிரான்சிஸ், கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சு.சிவரெத்தினம் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## திருகோணமலை மாவட்ட இலக்கிய கலை பெருவிழா





திருகோணமலை தினகரன், தம்பலகாமம் குறூப் நிருபர்கள்

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்ட இலக்கிய கலை பெருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை (19) மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. பாரம்பரிய கலை, கலாசார அம்சங்களுக்கு புத்துயிர் அளிக்கும் வகையில் இக்கலை இலக்கிய பெருவிழா நடத்தப்பட்டது. இதன்போது நடனம், கதை கூறல், இசை ஆகிய கலை நிகழ்வுகள் நடைபெற்றதுடன், இதில் பாடசாலை மாணவர்களும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் பங்கேற்றனர்.

கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடாந்தம் நடத்தும் மாவட்ட மட்ட இலக்கியப் போட்டியில் திருகோணமலை மாவட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கும், திறந்த பிரிவில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## அம்பாறை மாவட்ட வர்த்தக நிலையங்களில் விசேட சோதனை

ஒலுவில் விசேட நிருபர்

எதிர்வரும் புதுவருடத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் விசேட சோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டார தெரிவித்தார்.

சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக கூறி சீனியை பதுக்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை குறைக்கப்பட்ட போதிலும், சில வர்த்தக நிலையங்களில் கூடுதல் விலைக்கு அவை விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்களிடமிருந்து தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை பதுக்கி வைத்தல், வர்த்தக நிலையங்களில் விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்தல், உணவுப் பொருட்களை பதுக்கி வைத்து சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்தல், நுகர்வுக்கு பொருத்தமில்லாத உணவுப் பொருட்களை விற்பனை செய்தல் ஆகியன பாரிய குற்றமெனவும், அவர் தெரிவித்தார்.

## வெள்ளப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு சமைத்த உணவு

கிண்ணியா தினகரன் நிருபர்

திருகோணமலை, உப்பாறு கிராம அலுவலர் பிரிவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை (20) வழங்கி வைக்கப்பட்டன. கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கனியின் வேண்டுகோளுக்கமைய குளோபல் இஹ்சான ரிலீப் நிறுவனத்தின் அனுசரணையுடன் அம்மக்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டது.

உப்பாறு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சோலைவெட்டுவான், மயிலப்பஞ்சேனை, காரைவெட்டுவான், கண்டல்காடு ஆகிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கே சமைத்த உணவு வழங்கப்பட்டதாகவும், அம்மக்களுக்கு இவற்றை கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கனி வழங்கி வைத்தார்.

தற்போது நிலவும் சீரற்ற கால நிலையைத் தொடர்ந்து அடைமழையால் மகாவலி ஆறு பெருக்கெடுத்த போது, மேற்படி பிரதேசங்களுக்கான போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டது.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக கிண்ணியாவில் பல பிரதேசங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அப்பிரதேச மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

## பொத்துவில் மக்களின் நலன் கருதி இலவச கண் பரிசோதனை முகாம்

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்



பொத்துவில் வாழ் மக்களின் நலன் கருதி ஒழுங்கு செய்யப்பட்ட இலவச கண் பரிசோதனை முகாம் MBS Health Care Solutions மூக்குக் கண்ணாடி நிலைய முன்றலில் அண்மையில் நடைபெற்றது.

பொத்துவில் முன்பள்ளி அபிவிருத்தி ஒன்றியத்தின் சமூக சேவைப் பிரிவின் அனுசரணையுடன் அக்கரைப்பற்று MBS Health Care Solutions நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த கண் பரிசோதனை முகாமில் பலர் கலந்துகொண்டு நன்மையடைந்தனர். இதன்போது, கண் பார்வைக் குறைபாடு உடையவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டதுடன், மூக்குக்கண்ணாடியை பயன்படுத்த வேண்டிய தேவை உடையவர்களுக்கு மிகவும் குறைந்த விலையில் மூக்குக்கண்ணாடியை பெற்றுக்கொள்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

# பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு வழங்கக்கூடிய செல்வங்களில் சிறந்த செல்வம் கல்விச்செல்வமே

## மடவளை பஸார் அல் முனவ்வரா நிகழ்வில் சஹீட் எம். ரிஸ்மி தெரிவிப்பு

மடவளை பஸார் அல் முனவ்வரா ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா மடவளை மதீனா தேசிய பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி எப். இஸட். ஹலீல்டீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவரும் தேசிய விவகாரங்களுக்கான தவிசாளருமான சஹீட் எம். ரிஸ்மி (MBA) கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக சரோ பொறியியலாளர் கட்டட நிர்மாண நிறுவனத்தின் உரிமையாளர் எம். பி. எம். ரமீம், சிறப்பு விருந்தினராக மதீனியன் மாஸ்டர் நலன் புரிச் சங்கத்தின் தலைவர் எம். எஸ்.எம். மனாஸிர் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் சமூக சேவையாளர் பௌஸ் ஏ. காதர், ஊர் பிரமுகர்கள் பெற்றோர்கள். ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதம அதிதி சஹீட் எம். ரிஸ்மி;

உலகத்தில் புறக்கணிக்கப்பட்டோர் எத்தனை பேர் உள்ளனர். ஆனாலும் அவர்கள் கல்வியின் ஊடாகத்தான் வரலாற்றை மீளப் பெற்றுள்ளார்கள் என்பதே உண்மையாகும். நாங்கள் விட்டதைப் பிடிப்பதற்கு ஒரே வழி கல்விதான். எந்த இலக்கையும் தொட முடியும். இன்றைய தொழில் நுட்பத்தின் வளர்ச்சி கற்போர்களுக்கு பல வாய்ப்புக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றன. ஏதோ ஒரு காரணத்திற்காக நீங்கள் கல்வியை விட்டு இருந்தாலோ அல்லது இடை விலகி இருந்தாலோ நீங்கள் மீளவும் கற்று முன்னேறுவதற்கு பல வழிகள் இன்று உள்ளன.

ஒரு மாணவனுடைய பெறுபேற்றை ஆசிரியர் அம் மாணவனிடம் கூறும் போது குனிந்து வந்த அவனது முள்ளந்தண்டு எலும்பு நிமிர்ந்து நிற்குமளவுக்கு தன்னம்பிக்கை அவனுக்கு வந்து விடும். சிலபேர் அவர்களுடைய இளமைக் காலத்தில் கம்பீரமாக இருந்தவர்கள், சிறப்பாக இருந்தார்கள். வயது வந்த பிறகு சற்று ஓய்வெடுத்த பின் எவ்வளவு அழகாக இருந்தவர் இப்படிப் போய் விட்டாரே என நாங்கள் கூறுவதுண்டு. ஆனாலும் ஒரு பட்டதாரி அல்லது உயர் தரத்தைக் கற்றவன் அல்லது சாதாரண தரத்தையாவது கற்றிருந்த ஒருவன் காலப்போக்கில் அவன் எவ்வளவு சோர்ந்து இருந்தாலும் அவன் கற்ற கல்வி அவனை விட்டுப்போகாது.

பெற்ற கல்வி ஒரு நாளும் மாறுவதில்லை. பெற்றோர்களாகிய நாங்கள் வெறும் செல்வத்தை கொடுப்பதை விட பிள்ளைகளுக்கு கல்வி என்னும் சொத்தை எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

எனவே, கற்க முடியாதவர்கள் தொடர்ந்து கற்றுக் கொண்டிருங்கள். உங்கள் வீட்டைக் கல்விச் சூழலாக மாற்றுங்கள். கல்விச் சூழலாக மாற்றப்படும் போதுதான் ஒரு வீடு, ஒரு குடும்பம், ஒரு கிராமம், ஒரு சமூகம், ஒரு நாடு முழு உலகமும் கல்வியின் ஊடாக அபிவிருத்தி அடையும். இன்று உலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்ற யூதர்களாக இருக்கலாம். கிறிஸ்தவர்களாக இருக்கலாம். ஏன் அவர்கள் உலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் நாங்கள் சர்வதேச மட்டத்தில் பின்னடைவில் இருக்கின்றோம்.

அதேபோன்று இன்று பதக்கங்களை அணிவிக்கப்பட்ட சின்னஞ்சிறார்கள் அவர்கள் இதற்கு முன்னர் இருந்த மாணவர்களுடன் ஒப்பிடும் போது ஒரு வித்தியாசமானவர்கள், அற்புதமானவர்கள். சவால்களைச் சந்தித்தவர்கள்.இதற்கு முன்னர் இருந்த மாணவர்களுடன் ஒப்பிடும் போது உண்மையிலேயே அவர்கள் சவால்களைச் சந்தித்தவர்கள். 2019 இல் கொரோனா தொற்றைச் சந்தித்தார்கள். முதலாம் வருடத்தில் கொரோனா தொற்று நோயினால் நாடு முடக்கப்பட்ட கால கட்டத்தில் கல்வியை ஆரம்பித்தார்கள். நாங்கள் தற்போது 'சூம்' தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அவர்கள் முதலாம் வருடத்திலே சூம் தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக கல்வியைக் கற்றார்கள். அதன் பயனடைந்து விட்டார்கள். எனவே கல்வியின் தாத்பரியத்தை தேடிக் கொள்வதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்து இருக்கின்றது.





கல்வி என்பதற்கு பலபேர் பலவிதமான வரைவிலக்கணங்களைக் கூறுவார்கள். குவிந்து கிடக்கும் தகவல்களை எது சரி எது பிழை என்று தேர்ந்தெடுக்கும் முன்னறிவு என்று கூறுவார்கள். அதே போன்று தனது சமூகத்தை உணர்ந்து தன்னை நிலைப்படுத்தி தனது சுய ஆற்றலை வளர்த்துக் கொள்வதும் கல்வி என்பார்கள். இந்த மாணவர்களுக்கு இவ்வாறான அனுபவங்கள் கிடைத்திருக்கும். பொதுவாக எல்லா விடயத்திலும் அறிவின் மீது திறன்மிக்கவர்களாக வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நம் சமூகம் உலக மட்டத்திலே கல்வி எங்கே இருக்கின்றோம். 8 பில்லியன் சனத்தொகையைக் கொண்ட இந்த உலகத்திலே முஸ்லிம்கள் 2 பில்லியன் இருக்கின்றார்கள்.



CP/W/ AL MUNAWWARA PRIMARY SCHOOL
MADAWALA BAZAAR

Grade 5 Scholarship Examination 2023

| | |
|---|---|
| 1. F.M. Faasir - 178 | 16. I.A. Hamdha - 154 |
| 2. A.F. Hamdha - 173 | 17. D.A. Yaqeen - 153 |
| 3. N.P. Faathih - 172 | 18. S.M. Zahran - 153 |
| 4. M.S.M. Shafak - 168 | 19. M.N. Ayna - 153 |
| 5. M.F. Zaid - 162 | 20. I.F. Amna - 151 |
| 6. M.R. Hanlala - 162 | 21. T.M. Abdulla - 150 |
| 7. I.V. Ishak Keshiya - 161 | 22. R.F. Salma - 150 |
| 8. M.M.M. Raiyyan - 160 | 23. M.R. Kanza Maryam - 150 |
| 9. S. Sadik Ahamed - 160 | 24. M.A.M. Ayaan - 149 |
| 10. N.H. Humaima - 159 | 25. M.S. Shahim - 149 |
| 11. S.H. Reeha - 158 | 26. M.S. Ahnaf - 148 |
| 12. M.I. Haazir - 157 | 27. M.A. Zuha - 148 |
| 13. M.R. Rifa - 157 | 28. M.I.M. Imana - 148 |
| 14. S.A. Nasha - 156 | 29. S.A. Maasin - 147 |
| 15. F.A. Yahya - 155 | |

CONGRATULATIONS
SDEC - AMPS

யூதர்கள் வெறுமனே 16 மில்லியன் இருக்கின்றார்கள். ஒரு யூதனுக்கு 125 முஸ்லிம்கள் என்ற வகையில் இருக்கின்றார்கள். ஆனால் உலகமே யூத சமூகத்தின் கையில் இருக்கிறது. காரணம் அவர்கள் கல்வியில் முன்னணியில் நிற்கின்றார்கள். கிறிஸ்தவர்கள் கல்வியில் முன்னணியில் நிற்கின்றார்கள். எல்லா கல்வி நிறுவனங்களும் அவர்களுடைய கையிலே இருக்கின்றது. உலகில் 4000 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் அமெரிக்காவில் இருக்கின்றன. இந்தியாவில் 1000 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. ஆனால் உலகிலுள்ள முழு முஸ்லிம் நாடுகளிலுமாக 500 க்கும் குறைவான பல்கலைக்கழகங்கள் மட்டுமே இருக்கின்றன. இதில் ஒரு பல்கலைக்கழகம் கூட முதல் தரப் பல்கலைக்கழகங்கள் இல்லை. காரணம் என்னவென்றால் முழுமையாகக் கல்வியைக் கற்பவர்களில் யூதர்கள் 90 விகிதம். முஸ்லிம்கள் சர்வதேச மட்டத்தில் 40 விகிதம். சர்வதேச மட்டத்தில் பல்கலைக்கழகங்கள் சென்று கல்வி கற்பவர்களில் யூதர்களும் கிறிஸ்தவர்களும் 40 விகிதம். ஆனால் முஸ்லிம்கள் சர்வதேச மட்டத்தில் 2 விகிதம் உள்ளார்கள். இந்தப் புள்ளி விபரங்களை நாங்கள் தெரிந்து இருக்க வேண்டும்.

வரலாறு தெரியாத சமூகம் விலாசமற்ற சமூகம் என்பார்கள். இலங்கையில் நாங்கள் ஓரளவு கூடி இருந்தாலும் சர்வதேச மட்டத்திலே எமது நிலை 2 விகிதம் ஆகும். எனவே நாங்கள் எங்கு இருந்தோம். எவ்வாறு நாங்கள் இங்கு வந்தோம் என்ற வரலாற்றை பெரியவர்களும் சிறார்களும் கட்டாயம் தெரிந்து இருக்க வேண்டும்.

அந்த வகையில் அல் முனவ்வரா என்று மின்னிக் கொண்டிருக்கக் கூடிய எமது பாடசாலையின் வரலாறு பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். முனவ்வரா என்றால் தமிழில் ஒளிமயமானவள். இப்பாடசாலை ஆரம்பிக்கப்பதற்கு முன்னாள் நாங்கள் எங்கே இருந்தோம். 1901 ஆம் ஆண்டு மடவளையின் சனத் தொகையில் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களின் தொகை 10 விகிதம் இருந்தார்கள். அதில் ஒருவர் கூட பெண் இருக்கவில்லை. 1911 ஆம் ஆண்டு அதுவும் 10 விகிதம் ஆகும். ஆனால் 3 பெண்கள் இடம்பெற்றிருந்தார்கள். அதில் ஒருவருக்கு மாத்திரம்தான் ஆங்கிலம் பேசத் தெரியும்.

இப்பாடசாலைக்கு காணியைப் பெற்றுக் கொடுப்பதற்காக 1944 களில் மடவளையில் ஆரம்பிக்கப்பட்ட வை. எம். எம். ஏ. அமைப்பின் ஊடாக மிகப் பிரபல்யமானவர்கள் பங்கேற்றனர். இது ஒரு முக்கியமான வரலாறு ஆகும். 1948 ஆம் ஆண்டு இங்கு கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. 1948 03 02 கால கட்டத்தில் ஆண்கள் பிரிவு வேறாகவும் பெண்கள் பிரிவு வேறாகவும் நடத்தப்பட்டன. 1952 இல் மீண்டும் கீழ் பிரிவு மேல் பிரிவு என்று தனியாகப் பிரிக்கப்பட்டன. பின்பு கலவன் பாடசாலையாக காணப்பட்ட இப்பாடசாலை 1958 இல் தனியான பெண்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1961 இல் மடவனை மதீனா மகா வித்தியாலமாக மாற்றப்பட்டது. 1967 இல் மீண்டும் மதினா பாடசாலையுடன் பெண்கள் பாடசாலையினை இணைத்தனர். 1990 களில் மத்திய கல்லூரியாக மாற்றம் பெறுகின்றது. 2012 ஆம் ஆண்டில் 1000 பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அல் முனவ்வரா மீண்டும் தனியாகப் பிரிக்கப்பட்டது. இலங்கையில் உள்ள 10,155 பாடசாலைகளில் 9782 மாகாணப் பாடசாலைகள் உள்ளன. அதில் மத்திய மாகாணத்தில் 644 பாடசாலைகள் உள்ளன. அதில் அல் முனவ்வரா முன்வரிசையில் இருக்கின்றது.

கண்டி மாவட்டத்தில் மூன்றே மூன்று பாடசாலைகள் மாத்திரம் தான் உத்தியோக பூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. ஏனைய பாடசாலைகள் இன்னும் முறையாகப் பிரிக்கப்படவில்லை. ஏனைய பாடசாலைகள எல்லாம் இணைக்கப்பட்ட முறையிலே இருந்து கொண்டிருக்கிறது. எனவே இவ்விடயம் தொடர்பில் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் ஊடாக கவனத்தில் எடுக்க வேண்டிய தேவை இருக்கிறது . இந்தச் மாணவர் தலைவர்கள் எமது எதிர்காலத்தின் தலைவர்கள். இவர்கள் தான் இந்த ஊரை ஆட்சி செய்யப் போகிறார்கள். இவர்கள் தான் இந்த சமூகத்தை ஆட்சி செய்யப் போகிறார்கள்.

நீங்கள் சொந்த ஊருக்குச் செல்லும் போது விரைந்து செல்லுங்கள். அங்கு செல்லும் போது நீங்கள் பெருமை காட்டக் கூடாது. உயரமான மரத்தைக் கண்டால் நிமிர்ந்து பாருங்கள். நிமிர்ந்து பார்க்கும் போது எங்களை விட அறிவில் சிறந்தவர்கள் இருந்தால் அவர்களுக்கு மரியாதை செலுத்துங்கள். வயது வரும் போது ஒரு சிலரின் பலமான பற்கள் வலிமை இழந்து நாக்கு மென்மையாகும். மென்மையானவை மிகவும் வலிமையாக இருந்தவை என்பதை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். தண்ணீர் மிகவும் மென்மையானது ஆனால் அது வலிமையானது.

ஒரு தலைவன் தண்ணீரைப் போல் இருக்க வேண்டும். இந்தச் சிறுவர்கள் அவ்வாறு பயிற்றப்பட வேண்டும். அது எந்தத் தடை வந்தாலும் நிற்காது. அது தடைகளைத் தாண்டி ஓடும். அதே போன்று தண்ணீரைப் போல உள்ள தலைவனும் எந்த தடைகள் வந்தாலும் அவன் நிமிர்ந்து நிற்பான். அவனே ஒரு சிறந்த தலைவன் தண்ணீர் பள்ளங்களை நிரப்புகின்ற பரோபகாரி. மேடுகளை அல்ல. தண்ணீர் அழுக்கைப் போக்கும். அது ஒரு செயற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறது. எனவே அடுத்தவர்களுடைய அழுக்கைப் போக்கி தன்னையும் சிலவேளை அசுத்தமாக்கிக் கொண்டு அவ்வாறான உன்னதமான சேவையை தண்ணீர் செய்கின்றது. தண்ணீர் ஓடிக் கொண்டெ இருக்கும். இயங்கிக் கொண்டே இருக்கும். பாய்ந்து கொண்டே இருக்கும். குதித்தால் அருவி, பாய்ந்தால் நதி. ஓடினால் ஓடை, அடித்துச் சென்றால் ஆறு. எழுந்தால் ஊற்று, கலந்தால் கடல் ஆகும்.



பாத்திரத்தின் வடிவத்திற்கு ஏற்ப அது தன்னை மாற்றிக் கொள்ளும். அது எந்தப் பாத்திரத்தித்தில் தண்ணீரை வைத்தாலும் அது தன்னை மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டது. எனவே உண்யான தலைவன் அவன் அந்த நேரத்திற்கு ஏற்ப அவனை அவன் மாற்றிக் கொள்வான். அதில் மூன்று நிலைகளை நாங்கள் பார்க்கலாம். ஆவியாகி எழுகிறது, கட்டியாகி மிதக்கிறது.

திரவமாக ஓடுகிறது. இந்த மூன்று நிலைமையினை ஒருவன் தன்னை தயார் செய்து கொள்பவன்தான் சிறந்த தலைவன் ஆவான். எனவே இன்று எமது கரங்களினால் சின்னம் சூட்டப்படும் எமது எதிர்கால மாணவத் தலைவர்களும் அந்த நிலைக்கு நாம் கொண்டு வருதல் வேண்டும்.

இமாம் ஹஸனுல் பன்னா அவர்கள் சமூகப் பணிகளுக்கு கடமைகளுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். ஒரு முக்கியமான விடயத்தை விட்டுப் போட்டு அடுத்த விடயங்களுக்குச் செல்லக் கூடாது என்பது பற்றி எவை முதன்மையானது என்பது பற்றி பிள்ளைகளுக்கு தெளிவுபடுத்திக் காட்டுங்கள். எல்லாத் துறைகளிலும் நேர மதிப்பீடு அவசியம். காலத்தின் தேவையறிந்து கல்வி புகட்டுதல் வேண்டும். எதையும் தக்க காரணம் இல்லாமல் ஒத்திப் போடுவதற்கான பயிற்சி அளித்தல் வேண்டும். அதே போன்று அவர்கள் படிப்பதற்கான சூழலை உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும்.

பெற்றோர்களின் முன்மாதிரிதான் உங்களுடைய பிள்ளைகளிலும் பிரதிபலிக்கும். பிள்ளைகளை தன்னம்பிக்கையுடன் வளர்ப்பதற்கு முதலில் தன்னம்பிக்கை பெற்றோர்களிடத்தில் உருவாக வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்பால் அலி























# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. பின்வரும் பந்தியை வாசித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

மரக்கிளைகளினூடாக வந்த இளஞ் சூரியக் கதிர்கள் எனது மேனியை இதமாக வருடிச் சென்றன. பறவைகளின் இனிய கானத்தினால் அப்பகுதிகள் முழுவதும் இசையில் மூழ்கி இருந்தது. மெல்லென வீசிய இளந்தென்றல் என்னை அன்புடன் தழுவிச் சென்றது. காட்டு மலர்கள் ஆற்றின் இரு பக்கங்களையும் எழில் செய்தன. மலரிதழ்களினாலும், மகரந்தங்களினாலும் மூடப்பட்டிருந்த தரையின் மீது, எனது பாதங்கள் பதியும் போது, மென்மையான பட்டுக் கம்பள விரிப்பில் நடப்பது போன்ற உணர்வு பெற்றேன். மலரிதழ்களால் அழகு பெற்ற நீரின் மீது அலைகள் அங்குமிங்கும் எழுந்தபோது, அவை அலங்காரம் செய்யப்பட்ட நீல வண்ண ஆடையைப் போலக் காட்சியளித்தன. இயற்கையன்னையின் சீதனமாக இக்காட்சியைக் கண்டு ஒரு நாளினை ஆரம்பிப்பதற்கு நான் எவ்வளவு பாக்கியசாலியாக இருக்க வேண்டும் என எண்ணினேன்.

01. மரக்கிளை என்ற சொல்லை பிரித்து எழுதுக. ...........................................

02. மேனி என்ற சொல்லின் ஒத்த கருத்துள்ள சொல்லை எழுதுக. ........................

03. ஆற்றின் இரு பக்கங்களையும் எழில் செய்தவை எவை? ..............................

04. இப்பந்தியில் வரும் ஒரு உவமைத் தொடரினை எழுதுக.

...............................................................................................

05. பந்தியில் காணப்படும் ஓர் இணைமொழியினை எழுதுக.

...............................................................................................

06. “என்னை அன்புடன் தழுவிச் சென்றது” என்ற வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

...............................................................................................

**II. பின்வரும் பழமொழிகளை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

07. மட்டு / புத்தி / ஆத்திரக்காரனுக்குப் ................................................

08. விடாதே / காலை / ஆழமறியாது ........................................................

09. எழுத்து / கல்வி / சிலையில் / இளமையிற் ...........................................

**வெற்றிடத்துக்குப் பொருத்தமான வினைச்சொல்லை தெரிந்து எழுதுக.**

10. சிங்கம் தனது குட்டிகளை கவனமாகப் .......................................... (பாதுகாத்தது, பாதுகாத்தன)

11. எனது முற்றத்தில் மலரும் ஒவ்வொரு பூவும் வாசனை ................................ (மிக்கது, மிக்கவை)

12. பின்வரும் சொற்களில் எதிர்பாற் சொற்கள் அல்லாத சொல்லின் கீழ்க் கோடிடுக.
i. அரசன், மந்திரி, அரசி, தம்பி, தங்கை
ii. தேவன், தம்பி, தங்கை, நடிகன், நடிகை
iii. உத்தமன், உத்தமி, தமையன், மகள், மகன்
iv. சிறுவன், புதல்வன், புதல்வி, புத்திரன், புத்திரி
v. மேலோன், நல்லவன், நல்லவள், பாட்டன், பாட்டி

**கிழே தரப்பட்டுள்ள வாக்கியங்களிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

13. நேற்று மலை பெய்தது. ...............................................................

14. மிழகாய்ச் செடி செளித்து வளர்ந்தது. ...............................................

15. நான் மனல் வீடு கட்டினேன். .........................................................

16. சுருக்கக் குறியீடுகளை விளக்கி எழுதுக.

i. இ.போ.ச. ..............................................................................

ii. இ.ம.வ. ...............................................................................

iii. இ.மி.ச. ..............................................................................

17. பின்வரும் பிராணிகளின் ஒலி மரபுச் சொற்களை எழுதுக.

i. நரி - .................................... ii. பாம்பு - ....................................

iii. குதிரை - ................................ iv. கோழி - ....................................

18. சேர்த்தெழுதுக.

i. மாலை + நேரம் - ............................ii. பூ + செடி - ..............................

iii. முட்டை + ஒன்றிலிருந்து - ..........................................

19. பின்வரும் சிங்கள வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

i. அ(ப்)பி பத் கமு - .....................................................................

ii. நம கியன்ன - ..........................................................................


iii. பாடம கியலா தென்ன - ...............................................................

20. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

i. This is my book - ...................................................................

ii. I am drinking water - ................................................................

**III.**

21. 

i. இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பங்காகும் என எழுதுக.

...............................................................................................

ii. 1201, 2301, 3401, 4504, [ ]

22. $\frac{2}{3} = \frac{8}{\square}$ வெற்றுக் கூண்டுக்கு பொருத்தமான எண்ணை வெற்றுக் கூண்டினுள்ளே எழுதுக.

23. எழுத்தில் தரப்பட்டுள்ள எண்ணை இலக்கத்தில் எழுதுக.
அறுபத்தொன்பதாயிரத்துத் தொண்ணூற்றொன்பது : ........................................

24. [ 8 4 3 6 ] பெட்டியினுள் தரப்பட்டுள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க சிறிய எண்ணை எழுதுக.

...............................................................................................


25. 132 தேங்காய்களில் 18ஐ நீக்கி, மீதித் தேங்காய்கள் சமனான மூன்று குவியல்களாகப் பிரிக்கப்பட்டன. அதன்படி, ஒரு குவியலில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

...............................................................................................

26. ½ லீற்றர் குளிர்பானம் ஐந்து நண்பர்களிடையே ஒரேயளவாகப் பகிர்ந்தளிக்கப்பட்டால், ஒருவருக்குக் கிடைக்கும் குளிர்பானத்தின் அளவு யாது?

...............................................................................................

27. XIX – VIII இன் பெறுமதியை உரோமன் இலக்கத்தில் எழுதுக. ....................

28. 


இவ்வுருவை முறிகோடு வழியே வெட்டிய பின்னர் B துண்டின் மேற்பரப்புக்கள் எத்தனை?

...............................................................................................

29. பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது கடையொன்றில் நான்கு வார நாட்களில் விற்பனை செய்யப்பட்ட பாண்களின் எண்ணிக்கையாகும். கீழே உள்ள அட்டவணையின்படி வினாக்களுக்குரிய விடைகளைத் தருக.

| நாட்கள் | காலை | மாலை |
|---|---|---|
| திங்கள் | 12 | 18 |
| செவ்வாய் | 19 | 16 |
| புதன் | 24 | 21 |
| வியாழன் | 17 | 15 |

i. நான்கு நாட்களிலும் மாலை**யில் விற்பனை** செய்யப்பட்ட பாண்களின் மொத்த எண்ணிக்கை யாது?

...............................................................................................

ii. 35 பாண்கள் விற்பனை செய்யப்பட்ட நாள் யாது?

...............................................................................................

**IV. மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. குறித்த காலத்தில் மட்டும் பூக்கும் தாவரம்
i. தென்னை ii. வாழை iii. வேம்பு


31. நத்தையின் உணவு யாது?
i. தாவர இலைகள் ii. பூச்சிகள் iii. மீன்கள்

32. ஒருவரின் தனிப்பட்ட பாவனைக்குரிய பொருட்கூட்டம்
i. கைக்குட்டை, பற்தூரிகை, கணினி ii. சீப்பு, பற்தூரிகை, கைக்குட்டை
iii. சீப்பு, பற்தூரிகை, புத்தகம்

33. போமலின் இடப்பட்ட மீனை உண்பதால் ஏற்படும் விளைவு
i. வாந்தி ii. சொறிவு iii. உதடுகள் வீங்குதல்

34. அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய நோய்
i. மஞ்சட்காமாலை ii. தடிமன் iii. குக்கல்

35. பின்வரும் பிராணிகளில் வாயினால் உண்டு வாயினால் கழிவகற்றுவது

i.  ii.  iii. 

36. கடல் உணவுகளில் இருந்து பெறக்கூடிய போசணைப் பொருள்
i. அயடீன் ii. மாப்பொருள் iii. உயிர்ச்சத்து

37. பூச்சாடியினுள் பூக்கள் வாடாதிருக்க இடவேண்டியது,
i. குளோரின் ii. அஸ்பிறின் iii. பனடோல்

38. மரக்கறிகளை எப்போதும்
i. கழுவிய பின் வெட்ட வேண்டும்
ii. வெட்டிய பின் கழுவ வேண்டும்
iii. கழுவாமல் வெட்ட வேண்டும்

39. நிலத்தில் படர்ந்து பயன்தரக்கூடிய கொடிகளில் ஒன்று
i. புடோல் ii. வெள்ளரி iii. பாகல்

40. படகமுவ வனம் அமைந்துள்ள மாவட்டம்
i. குருநாகல் ii. அம்பாறை iii. பொலன்னறுவை

41. நீண்டகாலம் பேணி வைப்பதற்காக மணலில் புதைத்து வைத்துப் பாதுகாக்கப்படுவது
i. பனங்கிழங்கு ii. எலுமிச்சம்பழம் iii. பாகற்காய்

42. முட்கள் காணப்படாத தாவரம்
i. ரோஜா ii. தூதுவளை iii. சதைக்கரைச்சான்

43. 

இவ்வீதிச் சமிக்கை குறிப்பது
i. முன்னால் பாதை வேலை
ii. பாதசாரிகள் கடவை முன்னால்
iii. சிறுவர் கடவை முன்னால்

44. நாதஸ்வரம் ஒரு
i. துளைக்கருவி ii. நரம்புக்கருவி iii. கஞ்சக்கருவி

45. ஈமெயில் என்பதன் தமிழ் வடிவம்
i. இணையம் ii. மின்னஞ்சல் iii. தொலைநகல்

(11ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

46. தாதுசேன மன்னனால் கட்டப்பட்ட குளம்
 i. மின்னேரியா ii. கலாவாவி iii. பசவக்குளம்


47. வயிற்றோட்ட நோயை ஏற்படுத்தும் நோய்க்காவி
 i. எலி ii. நுளம்பு iii. வீட்டு ஈ

48. இலங்கையின் வடக்கே அமைந்திருக்கும் நாடு
 i. மலேசியா ii. இந்தியா iii. ஜப்பான்

49. 
பின்வரும் குறியீட்டின் மூலம் விளக்கப்படும் கருத்து
 i. வண்டியில் செல்லலாம்
 ii. வயோதிபர் மட்டும்
 iii. ஊனமுற்றோர்

50. இலங்கையின் தேசிய மலர்
 i. அல்லி ii. தாமரை iii. நீலஅல்லி

51. தலைவனைப் பின்பற்றிச் செல்லக்கூடிய பிராணிகளில் ஒன்று
 i. நாய் ii. யானை iii. வௌவால்

52. 
அருகில் தரப்பட்டிருக்கும் தாவரம்
 i. இக்கிரி
 ii. தொட்டாற்சுருங்கி
 iii. மூக்குத்திப்பூண்டு

53. வினாகிரி பின்வரும் எத்தாவரத்தில் இருந்து பெறப்படுகின்றது
 i. கித்துள் ii. பனை iii. தென்னை

54. அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படாத நோய்
 i. செங்கண்மாரி ii. நீரிழிவு iii. வாந்தி

55. கீழ்வரும் பிராணிகளில் எது கமக்காரனுக்கு நன்மை பயக்கின்றது
 i. வெட்டுக்கிளி ii. அந்துப்பூச்சி iii. மண்புழு

56. பொசன் பண்டிகை எவ் இனத்தவர்களால் கொண்டாடப்படுகின்றது
 i. தமிழர்கள் ii. சிங்களவர்கள் iii. முஸ்லிம்கள்

57. 
இவ்வுரு காட்டும் பழவகை
 i. அப்பிள் பழம்
 ii. தூரியன் பழம்
 iii. மாதுளம் பழம்

58. மிக அதிக எண்ணிக்கையிலான மாவட்டங்கள் அடங்கிய மாகாணம்
 i. வடமத்திய மாகாணம் ii. மேல் மாகாணம் iii. வட மாகாணம்

59. பாக்கு நீரிணை அமைந்துள்ளது
 i. இலங்கைக்கும் மாலைத்தீவிற்கும் இடையில்
 ii. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில்
 iii. இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில்

60. "நான் கண்ட விசித்திர கனவு" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருப்பதோடு எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக பேணப்பட வேண்டும்.

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

## கடந்த வார (15.12.2023) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 2 | 31. | 3 |
| 02. | 3 | 12. | 2 | 22. | 1 | 32. | 2 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 1 | 33. | 1 |
| 04. | 3 | 14. | 1 | 24. | 1 | 34. | 3 |
| 05. | 2 | 15. | 2 | 25. | 1 | 35. | 1 |
| 06. | 3 | 16. | 1 | 26. | 3 | 36. | 1 |
| 07. | 2 | 17. | 3 | 27. | 3 | 37. | 2 |
| 08. | 3 | 18. | 3 | 28. | 2 | 38. | 2 |
| 09. | 1 | 19. | 1 | 29. | 2 | 39. | 3 |
| 10. | 1 | 20. | 3 | 30. | 2 | 40. | 1 |




'200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி'

# மலையக மக்களின் சாதனைகள், தியாகங்களை நினைவுகூரும் நிகழ்வு

## ஞாயிறன்று நுவரெலியா நகரில் விழா

**நுவரெலியா தினகரன் நிருபர்**

'200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி' எனும் தொனிப்பொருளின் கீழ் மலையக மக்களின் சாதனைகளை வெளிபடுத்தி மலையக தியாகிகளை நினைவுகூரும் நிகழ்வொன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (24) நுவரெலியாவில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 9.00 மணிக்கு நுவரெலியா நகரில் ரீகல் திரையரங்குக்கு முன்பாக ஆரம்பமாகும் ஊர்வலம், சினிசிட்டா நகர மண்டபத்தை நோக்கிப் பயணிக்கும்.

இந்த ஊர்வலத்தின் போது, 5 ஊர்திகளின் பவனி நடைபெறவுள்ளது. இதில் மலையக மக்களை இலங்கைக்கு அழைத்து வந்த முதலாவது கப்பலான ஆதிலக்ஸ்மி கப்பல் வடிவமைக்கப்பட்டு ஊர்வலத்தில் இடம்பெறுகின்றது. இதைத் தவிர, எமது மலையக மக்கள் வாழ்வு நிலைமை, படிப்படியாக பெற்றுக்கொண்ட வெற்றிகள் ஆகிய விடயங்களும் இந்த ஊர்வலத்தில் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன், வெள்ளைக்காரத் துறைமார் போன்ற வேடம் தரித்து குதிரையொன்றில் நபர் ஒருவர் வருகை தருவார்.

பாடசாலை மாணவர்கள், அறநெறி பாடசாலை மாணவர்கள் தமது கைகளில் எமது நாட்டின் தேசியக் கொடியை ஏந்திய வண்ணம் நடைபவனியாக வருகை தருவர்.

மலையக மக்களின் கலை, கலா சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் சிலம்பம், காவடிதப்பு, பறை போன்ற வாத்தியங்களை இசைத்தவாறு கலைஞர்கள் இதில் பங்கேற்பர்.

இந்த ஊர்வலமானது புதிய கடை வீதி வழியாக தர்மபால சுற்றுவட்டத்தை கடந்து, நுவரெலியா பதுளை வீதி வழியாக சினிசிட்டா நகர மண்டபத்தை அடையும். இதனை தொடர்ந்து மேடை நிகழ்வுகள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணித் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் கலந்துகொள்ளவுள்ளார். விசேட அதிதிகளாக இந்திய பிரதித் தூதுவர் சத்யன்ஜல் பாண்டே, கண்டிக்கான இந்திய உதவித் தூதுவர் டாக்டர் எஸ். ஆதிரா, சிறப்பு அதிதிகளாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவருமான மனோ கணேசன், தொழிலாளர் தேசிய சங்கத் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார் மயில்வாகனம் உதயகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். மலையகத்தில் பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்த 90 பேர் இதன்போது கௌரவிக்கப்படவுள்ளனர். கல்வி, கலை, கலாசாரம், பொறியியல், வைத்தியம், சட்டம், சமூக சேவை, ஊடகத்துறை, விளையாட்டு ஆகியவற்றில் உச்சம் தொட்டவர்களும் சுயதொழில் முயற்சியாளர்கள், இலக்கியத்துறை சார்ந்தவர்கள், எழுத்தாளர்கள், சிறந்த பெற்றோர் ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அண்மையில் இந்தியாவின் சீ தமிழ் தொலைக்காட்சியில் சரிகமபா நிகழ்வில் கலந்துகொண்டு இறுதிவரை பயணித்த மலையக மாணவி அசானி விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார். கிரிக்கெட்டின் உலக சாதனை வீரர் முத்தையா முரளிதரன் சார்பாக அவரது தந்தை முத்தையா, அன்னை லக்ஸ்மி முத்தையா ஆகியோர் அவருக்கான விருதை பெற்றுக்கொள்வர்.

மலையக மக்களின் பிரச்சினைகளையும் எமது வெற்றிகளையும் உலகளவில் கொண்டுசென்ற ஊடகங்களுக்கும் விசேட விருதுகள் வழங்கப்படவுள்ளன.



பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அப்பாடசாலை அதிபர் மகேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (20) பதுளை சைமன் பீரிஸ் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்துகொண்டு, தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைத்த போது பிடிக்கப்பட்ட படம்.

# பாலியல் தொல்லை; ஆசிரியர் கைது

**அக்குறணை குறூப், மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்கள்**


நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலையொன்றில் மூன்று மாணவிகளை பாலியல் தொல்லைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் அதே பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரை நேற்று வியாழக்கிழமை (21) பொலிஸார் கைது செய்துள்ளனர். 29 வயதுடைய திருமணமான சந்தேக நபரையே கைது செய்துள்ளதாகவும், சந்தேக நபரின் கையடக்கத் தொலைபேசியைக் கைப்பற்றியுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இம்மாணவிகளை மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# முன்னாள் அதிபர் புவாஜியின் இழப்பு கவலையளிக்கிறது

## மு.கா. வின் மாத்தளை கிளையினர் அனுதாபம்

**மாத்தளை சுழற்சி நிருபர்**



மாத்தளை சாஹிரா பாடசாலையின் முன்னாள் அதிபரும் வரலாற்று ஆசிரியரும் சமூக சேவையாளருமான ஏ.ஏ.எம்.புவாஜியின் இழப்பு கவலையளிப்பதாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாத்தளை மாவட்டக் கிளையினர் தெரிவித்தனர்.

இவரது மறைவு தொடர்பாக மேற்படி கிளையின் பொதுச் செயலாளர் எம்.டீ.நிஃமதுல்லா விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

அந்த அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"மாத்தளையை வசிப்பிடமாகக் கொண்ட புவாஜி, கல்வித்துறையில் மிகவும் அனுபவம் கொண்டவராவார். இவர் தாய்மொழி மட்டுமன்றி, ஆங்கிலமொழியிலும் புலமை மிக்கவர். அத்துடன், இவர் மாத்தளை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறும் பாரம்பரியமும் எனும் நூலையும் வெளியிட்டு வைத்தார். மேலும் Islamic Law, Islamic Leadership, Don't Be Sad ஆகிய ஆங்கில புத்தகங்களையும் இவர் தமிழில் மொழிபெயர்ப்பு செய்துள்ளமை வரவேற்கத்தக்கது.

மாத்தளை சாஹிராவின் முதல் முஸ்லிம் பட்டதாரியான இவரை மாத்தளை கல்வியின் தந்தையெனவும் குறிப்பிடலாம். இந்நிலையில், அல்லாஹ் அன்னாருக்கு மேலான சுவன வாழ்வை வழங்குவானாக" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, கேகாலையில்

# ஆங்கிலப்பாட ஆசிரியர் 755 பேருக்கு ஆங்கிலமொழி புலமை கற்கைநெறி

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

சப்ரகமுவ மாகாண சபை மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் இணைந்து இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டப் பாடசாலைகளில் ஆங்கிலமொழி கற்பிக்கும் 755 ஆசிரியர்களுக்கு ஆங்கிலமொழி புலமை கற்கைநெறியை ஆரம்பித்துள்ளதாக, சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஆங்கிலமொழி புலமை கற்கைநெறிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை (20) இரத்தினபுரி கேத்துமதி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கையில் சப்ரகமுவ மாகாண சபை சார்பாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனுஆராச்சியும் பிரிட்டிஷ் கவுன்சில் சார்பாக அதன் திட்டப் பணிப்பாளர் Orlando Edwards ஆகியோர் கைச்சாத்திட்டனர். பாடசாலை மாணவர்களின் கல்விக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஆங்கிலமொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் பங்கேற்கும் வகையில் 6 மாதகாலத்தைக் கொண்ட இக்கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக சப்ரகமுவ மாகாண சபையால் 500 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க, "பௌதீக வள அபிவிருத்தியுடன் மனிதவள அபிவிருத்திக்கும் முன்னுரிமை வழங்குவதே எனது நோக்கமாகும். ஆகையால், சப்ரகமுவ மாகாணத்திலுள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கு மொழியை கற்பிக்க பிரிட்டிஷ் கவுன்சிலுடன் ஒப்பந்தம் செய்வதற்கு நான் நடவடிக்கை எடுத்தேன். இதற்காக நிதி ஒதுக்கீடும் நான் செய்துள்ளேன். பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் சப்ரகமுவ மாகாண சபைக்கு இடையிலான இந்த உடன்படிக்கை அமைச்சரவை அங்கிகாரத்துக்கு உட்பட்டதாகும்.

அடுத்த வருடம் சப்ரகமுவ மாகாண சபையால் 50 மில்லியன் ரூபா செலவில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்துடன் ஒன்றிணைந்த தகவல் தொழில்நுட்ப வேலைத் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனூடாக சப்ரகமுவ மாகாணத்திலுள்ள தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்" எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய, வைத்தியர் லங்கா ஜயசூரிய திஸாநாயக்க, சப்ரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளர் உபாலி சந்திரகுமார உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வெலிமடையில் மழை: சந்தை, வீதிகள் வெள்ளத்தில்

**ஊவா சுழற்சி நிருபர்**

தற்போது நிலவி வரும் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து வெலிமடை பிரதேசத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக நாளாந்த சந்தை மற்றும் பிரதான வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அத்துடன், வெலிமடை பண்டாரவளை வீதியின் மிராஹவத்தை பிரதேச வீதியின் இரு மருங்கிலுமுள்ள மரங்கள் முறிந்து விழுந்ததில் வீதிப் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக, வீதிப் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் பாடசாலை மாணவர்கள், பணியாளர்கள், ஏனைய பயணிகள் போக்குவரத்து செய்வதில் சிரமத்தை எதிர்நோக்கினர்.

இந்நிலையில், பொதுமக்களும் வீதிப் போக்குவரத்து பொலிஸாரும் வீதி அதிகார சபையினரும் இணைந்து வீதியின் குறுக்கே விழுந்து கிடந்த மரங்களை வெட்டி அகற்றி போக்குவரத்தை சீர்செய்தனர்.

# மாத்தளை ஆமினாவில் மாணவர் பாராளுமன்றம் அங்குரார்ப்பணம்














மாத்தளை ஆமினா மகளிர் தேசிய பாடசாலையின் 2023/2024 ஆண்டுக்கான மாணவர் பாராளுமன்றத்தின் அங்குரார்ப்பண அமர்வு அதிபர் திருமதி ஜெ.எஸ். எம்.பவாஹிதா தலைமையில் அண்மையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இதில் மாத்தளை வலய கல்வி அதிகாரிகள் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளின் இணைப்பதிகாரி யு.எல்.எம். ரிழ்வான் உட்பட பலரும் கலந்து கொண்டனர். இப் பாடசாலையில் இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கு பொறுப்பான எம். தஷ்ரீப் ரஹீம் மற்றும் பொறுப்பாசிரியை திருமதி எச். இர்பானா ஹனபி தலைமையிலான ஆசிரியர் குழு, முகாமைத்துவ குழுவினர் உட்பட SDEC உறுப்பினர்களின் பங்களிப்புடன் இந்நிகழ்வுகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

படமும் தகவலும்
**எம். சதுார்தீன்,**
மாத்தளை சுழற்சி நிருபர்

புதிய அதிபர்களுக்கான நியமனங்கள்

## தவறுகள், முறைகேடுகள் இருப்பின் ஆராய்ந்து அவை நிவர்த்திக்கப்படும்

அமைச்சர் டக்ளஸ் உறுதி



அதிபர் நியமனங்களில் தவறுகள் அல்லது முறைகேடுகள் நடைபெற்றிருக்குமாயின் அதுதொடர்பாக ஆராய்ந்து, அவை நிவர்த்திக்கப்படுமென தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச சுற்று நிருபங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற நியமனங்களில் தலையிடுவது, மக்களுக்கு செய்கின்ற அநீதியாக அமைந்து விடும் எனவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை, வட மாகாணத்தில் புதிதாக அதிபர் நியமனம் பெற்றுக் கொண்டவர்களுள் ஒரு பகுதியினர் நேற்று(21) சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிதாக அதிபர்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்களில் ஒரு பகுதியினர் வெளி மாவட்டங்களிலுள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு நியமிக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே ஆசிரியர்களாக வெளி மாவட்டங்களில் கடமையாற்றியிருப்பது உட்பட பல்வேறு காரணங்களை முன்வைப்பதுடன், தம்மை சொந்த மாவட்டங்களில் கடமையாற்ற சந்தர்ப்பம் அளிக்குமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இக் கோரிக்கைகள் தொடர்பாக, சம்மந்தப்பட்ட அதிபர்களின் கருத்துக்களையும் ஆதங்கங்களையும் கேட்டறிந்த அமைச்சர், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, இவ்விடயம் தொடர்பாக பிரஸ்தாபித்ததுடன், நியமனங்கள் அனைத்தும் நியாயமானதாகவும் சுற்று நிருபங்களுக்கு அமைவானதாகவும் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

மனிதாபிமான காரணங்களையும் பரிசீலிக்குமாறும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

## மன்னார் மாவட்ட புதிய அரசஅதிபராக க.கனகேஸ்வரன் நியமனம்



**(மன்னார் குறூப் நிருபர்)**

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரன் மன்னார் மாவட்டத்தின் புதிய அரச அதிபராக எதிர்வரும் சனிக்கிழமை (23) பதவியேற்கவுள்ளார்.

நேற்று (21) பொது நிர்வாகம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோகவிடமிருந்து நியமன கடிதத்தை பெற்றுக் கொண்டார்.

1998 முதல் 2003 செப்டெம்பர் வரை கொடிகாமம் போகட்டி அ.த.க. பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிய அவர், 2003 முதல் 2004 ஆகஸ்ட் வரை நிர்வாக சேவைக்கான பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அதன் பின்னர், அவர் 2004 அக்டோபர் முதல் 2015ஆம் ஆண்டு மே மாதம் வரையில் தொழில் திணைக்களத்தின் பிரதி தொழில் ஆணையாளராக பணியாற்றியுள்ளார்.

இந்நிலையில், நாளை (23) சனிக்கிழமை முதல் மன்னார் மாவட்ட அரச அதிபராகப் பதவியேற்கவுள்ளார்.

## சிறு வியாபாரிகளை வலுவூட்டும் செயற்றிட்டம்

**(மாங்குளம் குருப் நிருபர்)**

உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் சிறு வியாபாரிகளை வலுவூட்டும் செயற்றிட்டம் அண்மையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகப்பிரிவில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இச் செயற்றிட்டத்தின் ஊடாக பயனாளிகளுக்கு மூன்றாம் கட்ட உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பூவரசன்குளம், பாலிநகர் மற்றும் செல்வபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கிவைக்கப்பட்டது.

# வடக்கின் உதயம்

சைவ மகாசபை ஏற்பாட்டில்

## யாழ். சம்புநாத ஈச்சரத்திலிருந்து ஈழத்துச் சிதம்பரத்துக்கு பாத யாத்திரை

**(பருத்தித்துறை விசேட நிருபர்)**

சைவ மகா சபை ஏற்பாட்டில் சம்புநாத ஈச்சரத்திலிருந்து ஈழத்து சிதம்பரம் வரையான பாதயாத்திரை திருவெம்பாவையின் 07 ஆம் நாளான எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை (2023.12.24) காலை 07 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

வழமைபோன்று இம்முறையும் மாதகல் சம்புநாத ஈச்சரத்திலிருந்து ஆரம்பமாகி சைவத்தமிழ்ப் பெருமக்கள் வாழும் பல ஊர்களையும் அங்குள்ள ஆலயங்களையும் தரிசித்தவாறு பிற்பகல் 4.30 மணியளவில் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தைச் சென்றடையும்.

பாத யாத்திரையாக வரும் அடியார்களுக்கு பொன்னாலை நாராயணன் தாகசாந்தி நிலையத்தினால் அமுது வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாத யாத்திரையில் இணைந்துகொள்ளும் அடியவர்கள் உரிய நேரத்திற்கு ஆரம்ப இடத்துக்கு வருகைதருமாறு சைவ மகா சபை கேட்டுக்கொண்டுள்ளது.

## யாழ். குடத்தனையில் மோதல் - 07 பேர் காயம்

**(கரவெட்டி தினகரன், யாழ் நிருபர்கள்)**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பகுதியில் இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் காரணமாக 07 பேர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, வடமராட்சி கிழக்கு, குடத்தனை மாளிகைத்திடல் பகுதியில், இரண்டு தரப்பினருக்கு இடையில் நீண்டகாலமாக நிலவி வரும் முரண்பாடு காரணமாக மோதல் சம்பவம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

முதல் சம்பவத்தில் ஒரு தரப்பில் நால்வரும் மற்றைய தரப்பில் மூவருமாக 07 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு , ஒரு தரப்பினர் மற்றைய தரப்பினர் மீது தாக்குதல் மேற்கொள்ள தயாரான போது , சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் விசேட அதிரடி படையினர் மற்றும் பொலிஸார் , அங்கு கூடியிருந்தவர்களை அப்புறப்படுத்தி வீடுகளுக்கு அனுப்பி வைத்தனர்.

சில மணிநேரம் அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட பின்னர் பொலிஸ் விசேட அதிரடி படையினர் மற்றும் பொலிஸார், அவ்விடத்திலிருந்து திரும்பிய பின்னர், மீண்டும் ஒன்றுகூடிய சிலர் மற்றைய தரப்பினர்களின் வீடுகள் மீது கல் வீச்சு தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## டெங்குஒழிப்பு சிரமதானம்

**(யாழ். விசேட நிருபர்)**

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலும், அதன் சுற்று சூழலிலும் டெங்கு சிரமதான நடவடிக்கை நேற்றைய தினம் வியாழக்கிழமை மாவட்ட செயலக உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டது.

பாடசாலைகள், வைத்தியசாலைகள், பல்கலைக்கழகம், பல்கலைக்கழக விடுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க யாழ்.மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அழைப்பு விடுத்திருந்தார்.

யாழ்.மாவட்டத்தில் நாளாந்தம் நூற்றுக்கணக்கானோர் டெங்கு காய்ச்சலுடன் அடையாளம் காணப்பட்டு வருகின்றமையால் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள், நாளைய தினம் வெள்ளிக்கிழமையும் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

**(ஓமந்தை விசேட நிருபர்)**

போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கையில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பல இடங்களில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில் முள்ளியவளை பகுதியில் நேற்று கஞ்சா வியாபாரியொருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் நேற்றுமுன்தினம் (20) சட்டவிரோதமாக கசிப்புக்காய்ச்சி விற்பனை செய்யும் இடமொன்றையும் சுற்றிவளைத்துள்ளனர்.

9 பரல்கள் மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் என்பன இதன் போது மீட்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் இரகசியமான முறையில் கசிப்பு காய்ச்சி வெளியிடங்களுக்கு விநியோகித்து வருபவர்களையும் பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

## 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம் பிரிவு 55

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவில் மெதவேலேன கிராம அதிகாரி பிரிவில் மெதவேலேன தெபரவெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல 30068, துண்டு இல 03. பத்திர இல 01. துண்டு இல 19 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த.

391, தெபெரவெவல, திஸ்ஸமஹாராம எனும் விலாசத்தைக் கொண்ட

கல்தொட்டகே ஞானசீலி என்பவர் 2022 செப்டெம்பர் 19 ம் திகதி மரணமடைந்துள்ளார் அவரது உரித்தாளர் எவரேனும் திஸ்ஸமஹாராம, தெபரவெவ என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.01.22 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

**பதவி வெற்றிடம்**

### உணவு பரிசாரகர் பதவி
**(POST OF DIET STEWARDESS)**

**மேற்கூறிய பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**கல்வித் தகைமைகள்:**
க.பொ.த. சா/த பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மற்றும் எண்கணித பாடங்கள் உட்பட நான்கு திறமைச் சித்திகள் சகிதம் ஆறு பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயது :**
25 வயதிற்கு குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**அனுபவம் :**
உணவுப் பரிசாகராக 03 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது கீர்த்திவாய்ந்த நிறுவனத்தில் இதற்கு நிகரான பதவி.

**சம்பளம் :**
ரூபா 36640 – 10 x 405 – 40,690/- மாதாந்தம்.

**வேலைவாய்ப்பின் நியதிகள் :**
நிரந்தரம் / ஒப்பந்தம் மற்றும் சேமநல நிதி அடிப்படையில்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் 2024 ஜனவரி 06ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**
**2023-12-20.**

## பேலியகொட - நகர சபை

பேலியகொட நகரசபை 2023 டிசம்பர் 01ம் திகதி பிரசுரிக்கப்பட்ட பேலியகொட, பியகம வீதி, பொது மலசலகூடம் மற்றும் 05 வாகன நிறுத்துமிடங்களுக்கு கேள்விகோரல் காலம், 2023 டிசம்பர் 15 முதல் 2023 டிசம்பர் 22 வரை நீடிக்குமாறு திருத்தப்படுகின்றது.

கேள்விப் படிவம் விநியோகித்தல் -
**2023.12.01 மு.ப. 9.00 முதல் 2023.12.21 பி.ப. 3.00 வரை**

கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளல் -
**2023.12.22 பி.ப. 3.00 இற்கு முன்**

கேள்விகள் திறத்தல் -
**2023.12.22 பி.ப. 3.00 இற்கு**

கோ. தரங்கா கமலத்,
செயலாளர் மற்றும் பேலியகொட நகரசபையின்
அதிகாரம், செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,

திகதி : 2023.12.21

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**பிரதான அமைச்சு - சப்ரகமுவ மாகாண சபை**

சப்ரகமுவ மாகாண சபை அதிகார பிரதேசத்தினுள் சூரியசக்தி வீதி விளக்குகளை பொருத்தும் செயற்றிட்டத்திற்கு இயைபாக வீதி விளக்குகளை வழங்குதல் மற்றும் அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விநியோகிப்பதற்காக தகைமை மற்றும் ஆற்றல் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் சப்ரகமுவ மாகாண சபை பிரதான அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- மேலதிக விபரங்களை https://sg.gov.lk/web/pages/tender-notices/ எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து chief ministry கீழுள்ள Tender Notice இற்குப் பிரவேசித்து “PROCUREMENT OF SOLAR LED LAMP” என்பதில் தொடர்புகொள்வதன் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- இது தொடர்பிலான மேலதிக தகவல்களை பிரதான அமைச்சிற்கு வருகை தந்து அல்லது பின்வரும் தொலைபேசி இலக்கங்களின் மூலம் அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். தேவையானவர்கள் 2023-12-22ஆம் திகதி முதல் 2024-01-12ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான அமைச்சிற்கு 2024-01-16ஆம் திகதி பி.ப. 01.00 மணிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவுற்ற உடனடுத்து அவைகள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
- 2023-12-22ஆம் திகதி முதல் 2024-01-12ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை உங்கள் நிறுவனத்தின் வேண்டுகோள் கடிதம் சகிதம் 6000.00 ரூபா தொகையை பிரதான அமைச்சிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் விலைமனுக்கள் வழங்கப்படும்.

**தலைவர்,**
**பிரதான அமைச்சின் பெறுகைக் குழு,**
**பிரதான அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம்,**
**இரத்தினபுரி.**
**தொலைபேசி: 045-2223298 / 045-2222204**
**2023-12-22ஆம் திகதி**

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 39 (1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் விபரிக்கப்பட்ட 2022.07.08 ஆந் திகதிய 2287/38 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 120 ஆம் இலக்க 2022.06.30 ஆந் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித் துண்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித்துண்டின் இருப்பாட்சி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. ஆகையால், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1)ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2022.07.08 ஆந் திகதிய 2287/ 38 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 120 ஆம் இலக்க 2022.06.30 ஆந் திகதிய இக் கட்டளைக்குரிய KU/ PNN/2015/ 698 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட துண்டு G, H மற்றும் J என்ற துண்டுகள் மட்டுமே இத்தால் இரத்துச் செய்கிறேன்.

**ஹரின் பெர்னாண்டோ,**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.**

எனது இல.: **4-3/10/2015/E/175.**

பிரதேச செயலாளரின் இல.: **DIVPANN/LND/ACSCH/ 1/2/38.**

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு, “மிஹிகத மெதுர”, இல. 1200/6, ரஜ்மல்வத்தை வீதி, பத்தரமுல்லை,

2023, மார்ச் 01.

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பன்னல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 1589 பஹலமாகந்துர கிராம அலுவலர் பிரிவில் பஹல மாகந்துர கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2016.06.06 ஆந் திகதிய KU/PNN/2015/698 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

01. துண்டு G - கமகேவெல மற்றும் நைவலகும்புர - விஸ்தீரணம் :0.2886 ஹெக்டயார்

    வடக்கு : டப்ளியூ. ஜி. ஏ. மஹேந்திரா ரணவீர உரிமைகோரும் கமகேவெல மற்றும் நைவலகும்புர கிழக்கு: இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் உரிமைகோரும் கமகேவெல மற்றும் நைவலகும்புர தெற்கு: உரிமையாளர் தெரியாத மஹயாய வத்தை மேற்கு: துண்டு H.

02. துண்டு H - பக்மீகஹகும்புர - விஸ்தீரணம் : 0.3295 ஹெக்டயார்

    வடக்கு : கால்வாய் கிழக்கு : டப்ளியூ. ஜி. ஏ. மஹேந்திரா ரணவீர உரிமைகோரும் கமகேவெல மற்றும் நைவலகும்புர மற்றும் G தெற்கு: உரிமையாளர் தெரியாத மஹயாய வத்தை மேற்கு: வீதி மற்றும் துண்டு J.

03. துண்டு J - பக்மீகஹகும்புர - விஸ்தீரணம் : 0.2890 ஹெக்டயார்

    வடக்கு : கால்வாய் கிழக்கு: துண்டு தெற்கு: துண்டு H மற்றும் வீதி மேற்கு : பி. நயனா புஸ்பகுமாரி உரிமைகோரும் மீகஹகும்புர மேட்டுக் காணி மற்றும் டப்ளியூ. டீ. தினெத் டி திசேரா உரிமைகோரும் பக்மீகஹகும்புர மேட்டுக் காணி.

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## பேலியகொட நகர சபை

## 2024ஆம் வருடத்திற்கான வரிப்பணம் விதித்தல்

பேலியகொட நகர சபையின் அதிகாரத்தை செயற்படுத்தும், அதிகாரம் வாய்ந்த கடமைகளை நிறைவேற்றும் பேலியகொட நகர சபை செயலாளர் துஷ்லானி தரங்கா கம்லத் ஆகிய நான் 255ஆம் அதிகாரமான நகர சபை சட்டத்தின் 184(அ) அத்தியாயத்துடன் வாசிக்க வேண்டிய அந்தச் சட்டத்தின் 160(1)ஆம் அத்தியாயத்தின் விதிமுறைகளின் பிரகாரம் பேலியகொட நகர சபை அதிகார பிரதேசத்திற்கு 2024ஆம் வருடத்தில் வரிப்பணம் விதித்தல் பின்வரும் வகையில் மேற்கொள்ளப்படல் வேண்டும் என நான் தீர்மானித்துள்ளேன். அதாவது,

255ஆம் அதிகாரமான நகர சபை சட்டத்தின் 166ஆம் அத்தியாயத்துடன் வாசிக்க வேண்டிய 252ஆம் அதிகாரமான மாநகர சபைச் சட்டத்தின் கீழ் 238(1)ஆம் அத்தியாயத்தில் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பேலியகொட நகர சபை அதிகார பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டிடங்கள், காணிகள், குடிசைகளின் பெறுமதிக்காக 2023ஆம் வருடத்திற்கான மதிப்பீடானது 2024ஆம் வருடத்திலும் செயற்படுத்தப்பட வேண்டிய மதிப்பீடாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும் எனவும், அந்த மதிப்பீடு 2024-01-01ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படும் திகதியாக கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும் எனவும், அந்த மதிப்பீட்டின் மீது 255ஆம் அதிகாரம் நகர சபைச் சட்டத்தின் 184(அ) அத்தியாயத்துடன் வாசிக்க வேண்டிய அந்தச் சட்டத்தின் 160(1) உப அத்தியாயத்தில் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அந்த ஆதனங்களின் மீது மேற்கூறப்பட்ட மதிப்பீட்டிற்காக வருடாந்த பெறுமதியின் நூற்றுக்கு ஆறு வீதம் (6%) வருடாந்த வரிப்பணமாகவும், வதிவிட இடங்களுக்காக நூற்றுக்கு ஏழு வீதம் (7%) வருடாந்த வரிப்பணமும் வர்த்தகம் மற்றும் வியாபார விடயங்களுக்காக பயன்படுத்தப்படும் இடங்களுக்காக விதிக்கப்பட வேண்டும் எனவும்,

மேலும், 2024ஆம் வருடத்தில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டுகளுக்கு எதிரில் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன் அவ்வாறு விதிக்கப்பட்டுள்ள வருடாந்த வரிப்பணத்தை பேலியகொட நகர சபைக்குச் செலுத்த வேண்டும் என்பதுடன் அவ்வாறாக வருடாந்த வரிப்பணத்தை 2024 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் செலுத்தினால் வருடாந்த வரிப்பணத் தொகையின் நூற்றுக்கு பத்து வீதம் (10%) கழிவும், அந்த அட்டவணையில் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரில் மூன்றாம் நிரலில் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன் குறித்த வரிப்பணத் தொகையை பேலியகொட நகர சபைக்குச் செலுத்தினால் குறித்த தொகைக்கு நூற்றுக்கு ஐந்து வீதம் (5%) கழிவு பேலியகொட நகர சபையினால் வழங்கப்படல் வேண்டும் என நான் தீர்மானித்துள்ளேன்.

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

| 1ஆம் நிரல் | 2ஆம் நிரல் | 3ஆம் நிரல் |
|---|---|---|
| காலாண்டுகள் | செலுத்த வேண்டிய தினம் | 5% கழிவிற்கு உரித்தாகும் இறுதி நாள் |
| முதலாம் காலாண்டு | மார்ச் 31ஆம் திகதிக்கு முன் | ஜனவரி 31 |
| இரண்டாம் காலாண்டு | ஜூன் 30ஆம் திகதிக்கு முன் | ஏப்ரல் 30 |
| மூன்றாம் காலாண்டு | செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு முன் | ஜூலை 31 |
| நான்காம் காலாண்டு | டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன் | ஒக்டோபர் 31 |

**துஷ்லானி தரங்கா கம்லத்,**
**நகர சபையின் செயலாளர் மற்றும்**
**பேலியகொட நகர சபையின் அதிகாரம் வாய்ந்த கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**பேலியகொட நகர சபை.**

**2023 டிசம்பர் மாதம் 20ஆம் திகதி,**
**பேலியகொட நகர சபை,**
**பேலியகொட.**

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture
THE WORLD BANK

## கமத்தொழில் அமைச்சு
## விவசாயப் பிரிவு

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**கமத்தொழில் அமைச்சு**

## விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்

**IDA Credit No.: 5873 LK**

**பெறுகை அறிவித்தல் - விலைமனு மூடும் திகதியின் பிற்போடல்**

## பதுளை மாவட்டத்தின் கிராந்துருகோட்டேயின் மிளகாய் உலரவைத்தல் நிலைய நிர்மாணம்

**(Contract No.: LK-MOA-PMU-365182-CW-RFB)**

1. பதுளை மாவட்டத்தின் கிராந்துருகோட்டேயின் மிளகாய் உலரவைத்தல் நிலைய நிர்மாண விலைமனு மூடும் திகதியானது **(Contract No.: LK-MOA-PMU-365182-CW-RFB)** 2023 டிசம்பர் 29 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.
2. விலைமனு திறத்தலானது விலைமனு மூடலின் பின்னர் உடனடியாகவே நடைபெறும்.
3. விலைமனுக்கள் 2024 மார்ச் 08 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. விலைமனுப் பிணையானது 2024 மார்ச் 22 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், 2023 டிசம்பர் 29 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மொனராகல, ஹுலந்தாவ, வெள்ளவாய வீதி, 566 ஆம் இலக்கத்திலுள்ள விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட மாகாண செயற்றிட்ட கண்காணித்தல் பணிமனைக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**
**திகதி: 2023 டிசம்பர் 22.**

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

TRC

## பொது அறிவித்தல்

### ரைமாஸ் மீடியா (பிரைவட்) லிமிடட்டின் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்தல்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் (திருத்த) சட்டத்தின் கீழ் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) ("ஆணைக்குழு") தாபிக்கப்பட்டுள்ளதுடன் இது இலங்கையில் தொலைத்தொடர்புகள் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் வானொலி அதிர்வெண் நிறமாலையை (ஸ்பெட்ரம்) முகாமை செய்வதற்கும் பொறுப்பாக உள்ளது.

2006.03.10 ஆம் திகதிய 1435/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிட்ட சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் திருத்தம் செய்தல் தொடர்பான வழிகாட்டல் மற்றும் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க **இணைய மற்றும் கேபிள் டெலிவிசன் சேவைகள் உள்ளடங்கலாக தரவு தொடர்பாடல் சேவைகள்** வழங்குவதற்கு தொலைத்தொடர்புத் திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 (2) ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் **கொள்வதற்கு ரைமாஸ் மீடியா (பிரைவட்) லிமிடட்** விண்ணப்பித்துள்ளது.

எனவே, பொது / கைத்தொழில் பிரதிநிதித்துவங்கள் / மறுப்புக்களின் கருதப்பாட்டின் படி ஆணைக்குழுவினால் விதிக்கப்படக் கூடிய அவ்வாறான நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு இணங்க மேலுமொரு **ஐந்து வருட** காலப் பகுதிக்காக **ரைமாஸ் மீடியா (பிரைவட்) லிமிடட்டிற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைப்** புதுப்பிப்பதற்கு, அதிமேதகு சனாதிபதிக்கு சிபாரிசு செய்வதற்கு ஆணைக்குழு கருதுகின்றது என்பது சட்டத்தின் 17 (3) (அ) பிரிவின் கீழ் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ரைமாஸ் மீடியா (பிரைவட்) லிமிடட்டிற்கு** அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான பிரதிநிதித்துவத்தை அல்லது மறுப்பினை **2024.01.20** ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள முடியும் என மேலும் இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. உங்களுடைய பிரதிநிதித்துவம் அல்லது மறுப்பு எழுத்து மூலம் இருத்தல் வேண்டும் என்பதோடு

பணிப்பாளர் நாயகம், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு முகவரியிட்டு அனுப்பப்படுதலும் வேண்டும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் வரைவொன்றை பொதுமக்கள் ஆணைக்குழுவின் அலுவலக இணையத்தளமான www.trc.gov.lk. இல் பார்வையிடலாம்.

**ஆணைக்குழுவின் கட்டளைப்படி**

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு,**
**இல. 276, எல்விடிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**
**தொலைபேசி : 011 – 2689345 பெக்ஸ் : 011 – 2689341 மின் அஞ்சல் : dgtsl@trc.gov.lk**

SELACINE

## அறிவித்தல்

பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.

**கம்பனியின் முன்னைய பெயர் :** மெக் இன்வெஸ்ட் மென்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் புதிய பெயர் :** புரோட்வே புரொப்பர்டீஸ் (பிரைவட்) லிமிடெட்

**பெயர் மாற்றத் திகதி :** 2023 ஜூலை 19

**பதிவு முகவரி :** 7/15, நாவல 2 ஆம் ஒழுங்கை, நாவல வீதி, ராஜகிரிய

**கூட்டிணைக்கப்பட்ட திகதி:** 2023 ஜூன் 26

**பதிவிலக்கம் :** PV 93266

**கம்பனி செயலாளர்கள்:**
**ஆர் அண்ட் எஸ்**
**கோர்ப்பரேட் சேர்விசஸ்**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

## விண்ணப்பத்திற்கான அறிவித்தல்

**வழக்கு எண் : DTS 441/2023/T**
இயல்பு : ஏற்பாடு
செயல்முறை: சுருக்கம்
மதிப்பு : ரூ.5,579,053/-

மலேசியா, நெகிரி செம்பிலான் தாருல் குசுஸ், 70000 செரெம்பன், ஜாலான் டத்தோ பந்தர் துங்கல், இல.90, என்ற முகவரியில் வசித்த மறைந்த ஜெக தேவன் எம்.நட்சத்திரமின் இறுதி உயில் தகுதிகாண் மறுமுத்திரையிடுவதற்காக (1977ம் ஆண்டு 20ம் இலக்க சட்டம் மற்றும் 1993ம் ஆண்டு 14ம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தப்பட்ட) குடியியல் நடைமுறைச் சட்டத்தின் 554(U) பிரிவின் கீழ் இறுதி உயில் மற்றும் மரண சாசனம் விண்ணப்பம் சம்மந்தமாக

ஜெக தேவன் எம்.நட்சத்திரம்

**இறந்தவர்**

1. துப்பல் புரஹரன் ராமகிருஷ்ணன்,
   இல.90, ஜாலான் டத்தோ பந்தர் துங்கல்,
   70000 செரம்பன், நெகிரி செம்பிலான்,
   மலேசியா.
2. பரமேஸ்வரன் கோவிந்தன்,
   இல.26, லோரோங் டெலிமா 10,
   தமன் இந்தா, ஜாலான் துங்கு குர்சியா,
   70400 செரெம்பன், நெகிரி செம்பிலான்,
   மலேசியா.
3. ஜெ.்.ப்ரி பின் ஜனாப் அஹ்மத்,
   இல. 32, பிளாக் மாயா, அஸ்டாரியா
   அபார்ட்மெண்ட், தமன் கோசாஸ், அம்பாங்,
   68000 அம்பாங், சிலாங்கூர், மலேசியா.

தங்களது அற்றோணி தத்துவக்காரரான
திரு.நிஹால் நிஸ்ஸங்க ரத்நாயக்க
அபார்ட்மெண்ட் 16A, த எலிமன்ட்ஸ், இல.62,
புத்கமுவ வீதி, ராஜகிரிய அவர்களின் மூலம்
ஆஜராகிறார்கள்.

**மனுதாரர்கள்**

இதன் மூலம் அறிவிக்கப்படுவதாவது. இல.90, ஜாலான் டத்தோ பந்தர் துங்கல், 70000 செரெம்பன், நெகிரி செம்பிலான் தாருல் குசுஸ், மலேசியா என்ற முகவரியில் வசித்த மறைந்த ஜெக தேவன் எம்.நட்சத்திரமின் இறுதி உயில் மற்றும் ஏற்பாட்டின் பேரில் 13-09-2021 அன்று செரெம்பனில் உள்ள மலாயா உயர்நீதிமன்றத்தில் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு தகுதிகாண் மறுமுத்திரையிடுவதற்காக 1977 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1993 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட சிவில் நடைமுறைச் சட்டத்தின் அத்தியாயம் XXXVIII B இன் பிரிவு 554U இன் கீழ் மனுதாரர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்துள்ளார்கள்.

**2023 நவம்பர் 29 ஆம் நாள்.**

**மனுதாரர்கள் சார்பில் வழக்கறிஞர்**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

## வலய கல்வி அலுவலகம், கந்தளாய்

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலமாக பின்வரும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக தகைமையுள்ள நிர்மாண ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கந்தளாய் வலய கல்வி அலுவலக வலய கல்வி பணிப்பாளரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| இல. | ஆளடையாள இல. | விளக்கம் | கட்டிட வகுதியில் விலை மனுதாரரின் தேவைப்படும் CIDA தரம் | விலைமனுப் பிணை (ரூபாவில்) | பொறியியலாளரின் மதிப்பீடு (மில். ரூபாவில்) | பூர்த்தி செய்யப்படும் காலம் நாட்காட்டி நாட்களில் | விலை மனுக் கோரல் ஆவணத்தை வழங்கும் வலய கல்வி அலுவலகம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | KN/ZE/06 /01/NEW BUILDING/ 2023/924(II) | கந்தளாய் வலய கல்வி அலுவலகத்திற்காக நிருவாக கட்டிட நிர்மாணம் (II ஆம் கட்டம்) | சி-8, சி-7 மற்றும் சி-6. | 90,000 | 8.47 | 90 நாட்கள் | கந்தளாய் |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் (பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக) நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரமுன்னுரிமை ஆகியன 04/2016 (iv) என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விஷேடத்துவ துறையில் கட்டிடத்திற்கான ICTAD /CIDA பதிவில் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட தரத்தின் கீழ் ஒப்பந்தக்காரர் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைக்கான தகைமைத் தேவைப்பாடுகள்.

| தொழில்நுட்ப தேவைப்படுத்தல்கள் | நிதியிடல் தேவைப்படுத்தல்கள் | சட்டரீதியிலான தேவைப்படுத்தல்கள் |
|---|---|---|
| **தகைமை மற்றும் அனுபவத்துடனான ஆகக்குறைந்த நபர்கள்.**<br>01. தொழில்நுட்ப அலுவலர்-01 தகைமை: NDT (சிவில்) அல்லது நிகரான அனுபவம்: 3 வருடங்கள்<br>அல்லது<br>தகைமை: NCT அல்லது நிகரான அனுபவம்:5 வருடங்கள்<br>02. வேலை மேற்பார்வையாளர்-01 தகைமை: NCT அல்லது நிகரான அனுபவம்: 3 வருடங்கள் | * மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து விலைமனு தொகையின் 20% இற்கான கடன் வசதியை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.<br>* கடந்த 3 வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி பெறுமதியானது விலைமனுத் தொகையின் ஆகக்குறைந்தது 60% இற்கு சமமாகவிருத்தல் வேண்டும்.<br>* கடந்த 3 வருடங்களில் நிகரான தன்மையில் ஆகக்குறைந்தது விலைமனுத் தொகையின் 30% இற்கு குறையாத ஒரு ஒப்பந்தத்தையாவது விலைமனுதாரர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>(மூன்று பாரிய செயற்றிட்டங்களை மாத்திரம் குறித்துரைக்கவும்) | * விலைமனுதாரர் பதிவு செய்யப்பட்ட சட்டநிலபரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் (ஏகஉரிமையாளர்,பங்குடமை,கம்பனி போன்றவை)<br>* அரச நிதித் திணைக்களம் அல்லது வேறேதாவது முகவராண்மையினால் அபகீர்த்தியானோர் பட்டியலிலிடப்பட்ட/ தவறிழைத்த ஒப்பந்தக்காரரென விலைமனுதாரர்கள் பிரகடனப்படுத்தியிருத்தல் ஆகாது |

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கந்தளாய் வலய கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெற்று மேலே வழங்கப்பட்டுள்ள அட்டவணையின் வலய கல்வி அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2023.12.22 ஆம் திகதியிலிருந்து 2024.01.04 ஆம் திகதி வரையும் மு.ப.9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கந்தளாய் வலய கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்று இரு பிரதிகளில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் கந்தளாய் வலய கல்வி அலுவலக கணக்கிடல் கிளையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் தனித்தனியான உறைகளில் இரு பிரதிகளில் 2024.01.05 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கந்தளாய் வலய கல்வி பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் கந்தளாய் வலய கல்வி அலுவலகத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதித் திகதியிலிருந்து 77 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் ஒன்றில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட புகழ் வாய்ந்த வங்கியொன்றிலிருந்து அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து பெறப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் கந்தளாய் வலய கல்வி பணிப்பாளரின் பெயரில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2024.01.05 ஆம் திகதியிலிருந்து 105 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. கந்தளாய் வலய கல்வி அலுவலகத்தில் 2023.12.28 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடாத்தப்படும்.

**K.B. Dharmasena,**
**வலய கல்விப் பணிப்பாளர்,**
**வலய கல்வி அலுவலகம்,**
**கந்தளாய்.**
22.12.2023

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## அறிவித்தல்

2022 (2023) க்கான க.பொ.த. (உ/த) **மீள்ஆய்வு பெறுபேறுகளின்** அடிப்படையில், பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களில் 2022 (2023) கல்வியாண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகிறது

2023 நவம்பர் 24 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்ட 2022 (2023) க.பொ.த.(உயர்தர) மீள்ஆய்வு பெறுபேறுகளின் அடிப்படையில், 2022 (2023) கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு 2023 டிசம்பர் 22ஆம் திகதி முதல் 2023 டிசம்பர் 29ஆம் திகதி வரை இணையவழி மூலம் விண்ணப்பிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

விண்ணப்பங்களை கோருவது குறித்த மேலதிக விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.ugc.ac.lk) 2022 (2023) கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுதல் சம்பந்தமாக ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட செய்தித்தாள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**முக்கியம்**

பாடநெறிக்கான விருப்பொழுங்கு வரிசையை மாற்றுவதற்கு 2022.்.2023 கல்வியாண்டுக்கான விண்ணப்பதாரர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட இரண்டு வாரங்கள் கால அவகாசம் இந்த சந்தர்ப்பத்தில் பொருந்தாது என்பதை கருத்தில் கொள்ளவும்.

மேலும், மேற்கூறியவாறு 2022.்.2023 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான இந்த வாய்ப்பு, பல்கலைக்கழகம் / வளாகம் / நிறுவனத்தினால் ஏற்கனவே நடாத்தப்பட்ட செயன்முறை / உளச்சார்பு தேர்வுகள் கொண்ட கற்கைநெறிகளுக்குப் பொருந்தாது

**உப தலைவர் (பதில் தலைவர்)**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**
**2023.12.22**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus

Magazine Issued with Sunday Observer
THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz

- Auto Focus
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# பதவி வெற்றிடம்

## கைத்தொழில் அமைச்சு

### கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனம்

**உள்ளகக் கணக்காய்வாளர்**
**கிரயக் கணக்காளர்**
**உதவி ஆராய்ச்சி தொழில்நுட்பவியலாளர்**

பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள்
**2024-01-05**

மேலதிக விபரங்களுக்கு 2023-12-22 ஆம் திகதிய Daily News பத்திரிகையைப் பார்க்கவும்.

**பணிப்பாளர் நாயகம் / பி.நி.அ.**
**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்**

# இலங்கை புகையிரத சேவைகள்

## பெறுகை அறிவித்தல்

**Procurement for the supply of 200,000 Nos.
Rubber Pads to suit 80 Lbs Concrete Sleepers.
Procurement No.: SRS/F.7957**

01. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் 80 இறாத்தல் நிறையுடைய Concrete Sleepers இற்கு பொருந்தக்கூடிய 200,000 எண்ணிக்கையான இறப்பர் பேட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து இலங்கை புகையிரத சேவைகளின் திணைக்கள பெறுகைக் குழுத் (உயர்மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.
02. 2024.01.18 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.
03. 11,375 ரூபா (பதினோராயிரத்து முன்னூற்று எழுபத்தைந்து ரூபாவை) மாத்திரம் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாகச் செலுத்தியபின்னர், 2024.01.17 ஆம் திகதி பி.ப. 3 மணி வரையும் கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடியவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளை சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
05. விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டவாறான 450,000 ரூபா (நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா) பெறுமதியான விலைமனுப்பிணையொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம்.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு (உயர்மட்டம்),
பிரதி பொது முகாமையாளரின் அலுவலகம் (பெறுகை),
இலங்கை புகையிரத சேவைகள்,
ஒல்கட் மாவத்தை,
கொழும்பு-10.**

07. இலங்கை, கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாமென்பதுடன், மேலதிக விபரங்களுக்கு, தயவு செய்து பின்வரும் வழிகளில் தொடர்புகொள்ளவும்.

**தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2436818**
**தொலைநகல் இல. : 94(11) 2432044**
**மின்னஞ்சல் : srs.slr@gmail.com/tender2@railway.gov.lk**
**இணையதளம் : www.railway.gov.lk**

**குறிப்பீட்டு இல. : SRS/F.7957**

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு (உயர்மட்டம்)
இலங்கை புகையிரத சேவைகள்**

**For classified advertisements and for replies**
**received in response to advertisements published under Lake House box numbers**

**+94 112429342**
**+94 112429343**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

LE/RE/208

# இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (HDFC வங்கி)

**(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான**

## பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்

**கடன் இலக்கம் : 903500000866 மற்றும் 903521000045**
**கடனாளியின் முழுப் பெயர் : திசாநாயக்க முதியன்சேலாகே சசங்க அனுராத கொழுகல & திசாநாயக்க முதியன்சேலாகே கோரலேகெதர ஷானிக்கா மதுவந்தி கோரலேகெதர**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2023.03.31 ஆம் திகதி 2326 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியிலும் 2023.03.31 ஆம் திகதி “தினமின”, “தினகரன்” மற்றும் “டெய்லி நியூஸ்” பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இலக்கம் 134, பெத்தகான வீதி, கோட்டே என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் பீ.கே. ஈ.சேனாபத்தி என்பவரினால் 2024.01.16 ஆம் திகதி பி.ப 03.00 மணியில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில் அல்லது HDFC வங்கி மாத்தளை கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் 3709ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரங்களின்படி, ஒரு கோடி மூன்று இலட்சத்து தொன்னூற்று எட்டாயிரத்து அறுபத்து ஆறு ரூபா அறுபத்து எட்டு சதம் (ரூபா 10,398,066.68), 2023.01.31 ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

1) 1வது கடன் தொகை 903500000866
குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான எண்பத்து ஆறு இலட்சத்து நாற்பத்து ஓராயிரத்து முந்நூற்று பதினைந்து ரூபா தொன்னூற்று நான்கு சதம் (8,641,315.94) 2023.01.31 ஆம் திகதி வரையிலான நிலுவையாக பதினொரு இலட்சத்து அறுபத்து ஐயாயிரத்து பதினான்கு ரூபா தொன்னூற்று ஆறு சதத்தினையும் (ரூபா 1,165,014.96) இதன்படி 2023.01.31 மொத்தமாக தொன்னூற்று எட்டு இலட்சத்து ஆறாயிரத்து முந்நூற்று முப்பது ரூபா தொன்னூறு சதத்தையும் (ரூபா 9,806,330.90)

இரண்டாவது கடன் தொகை 903521000045
3709 ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலம் குறிப்பிட்ட இரண்டாவது கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான மூன்று இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து ஐந்நூற்று அறுபத்து ஆறு ரூபா பதினேழு சதம் (347,566.17), 2023.01.31 ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள இரண்டு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து நூற்று அறுபத்து ஒன்பது ரூபா அறுபத்து ஒரு சதத்தினையும் (ரூபா 244,169.61) இதன்படி முழுத் தொகையான ஐந்து இலட்சத்து தொன்னூற்று ஓராயிரத்து எழுநூற்று முப்பத்து ஐந்து ரூபா எழுபத்து எட்டு சதத்தினையும் (ரூபா 591,735.78) இதன்படி மொத்த கூட்டுத் தொகையாக, ஒரு கோடி மூன்று இலட்சத்து தொன்னூற்று எட்டாயிரத்து அறுபத்து ஆறு ரூபா அறுபத்து எட்டு சதத்தினையும் (ரூபா 10,398,066.68) அறவீடு செய்வதற்கும்.

2) குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான எண்பத்து ஆறு இலட்சத்து நாற்பத்து ஓராயிரத்து முந்நூற்று பதினைந்து ரூபா தொன்னூற்று நான்கு சதத்தினையும் (8,641,315.94) அறவிட வேண்டிய 17.26% வீத வருடாந்த வட்டியினையும் மற்றும் இரண்டாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான மூன்று இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து ஐந்நூற்று அறுபத்து ஆறு ரூபா பதினேழு சதத்தினையும் (347,566.17) அறவிட வேண்டிய 9.89% வீத வருடாந்த வட்டியினையும் 2023.02.01 ஆம் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை அறவீடு செய்து கொள்வதற்கும்,

3) 2023.02.01 திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் வரை(அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட முழு நிலுவைத் தொகையான பன்னிரெண்டு இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து நாநூற்று எண்பத்து எட்டு ரூபா தொன்னூற்று எட்டு சதத்தினையும் (ரூபா 1,283,488.98) மாதாந்தம் 2.00% தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்யவும்,

4) 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை, அறவீடு செய்வதற்காகும்.

கடன் இலக்கம் 903500000866 மற்றும் 903521000045

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், மாத்தளை கிழக்கு பல்லேசிய பத்துவவில், இரத்தோட்டை பிரதேச சபை எல்லையில், மற்றும் இரத்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், இக்கிரியகொல்ல (இலக்கம் E371D) கிராம உத்தியோகத்தர் பிரிவில் பல்லேவேரகம கிராமத்தில் அமைந்துள்ள விகாரகம வத்தையின் ஒரு துண்டு வாரியபொலவத்த துண்டு -வாரியப்பொல பெருந்தோட்டத்தின் ஒரு பகுதி என்ற காணிக்கு 2004.10.26 ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் ஜே.எம். ஜயசேகர என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 10788 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே இதே காணியின் ஒரு துண்டும் கிழக்கே வேரகமவில் இருந்து ஓவல வரையிலான பிரதேசசபை பாதையும் தெற்கே மற்றும் மேற்கே விகாரகமவத்த எனப்படும் இதே காணியின் ஒரு துண்டும் அமைந்து காணப்படுகின்றன.இதன் பரப்பளவு இரண்டு ரூட்கள் ஆகும் (ஏக். 0 ரூட். 02 பேச். 00) அல்லது பூச்சியம் தசம் இரண்டு பூச்சியம் மூன்று (0.203) ஹெக்டயர்களாகும். இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக மாத்தளை காணிப்பதிவு காரியாலயத்தில் G18/140 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி
பொது முகாமையாளர்
திகதி - 15.12.2023**

**இ.வீ.அ.நி.கூ.வங்கி
தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்
சேர். சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,
த.பெ.இல. 2085
கொழும்பு 02.**

NLDB

# தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### புத்தம் புதிய பசும்பாலின் விற்பனை

2024 பெப்ரவரி 1 ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 30 ஆம் திகதியன்று வரையுமான கால எல்லைக்கு கீழே குறிப்பிட்டுள்ள பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட புத்தம் புதிய பாலை விற்பனை செய்வதற்காக உள்ளூர் கொள்வனவுக்காரர்/ கம்பனிகளிடமிருந்து கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, 40 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| பண்ணை | நாளொன்றிற்கான ஆகக்கூடிய பால் (லீட்டர்களில்) | பண்ணை | நாளொன்றிற்கான ஆகக்கூடிய பால் (லீட்டர்களில்) |
|---|---|---|---|
| ரிதியகம பண்ணை, அம்பலாந்தொட்ட | 5,000 | பெலிகம பண்ணை, பெலிகமுவ | 100 |
| மெனிக்பாலம பண்ணை, போப்பத்தலாவ | 2,500 | ருக்கத்தன பண்ணை, பிங்கிரிய | 300 |
| போப்பத்தலாவ பண்ணை, போப்பத்தலாவ | 2,000 | மெல்சிரிபுர பண்ணை, மெல்சிரிபுர | 100 |
| ஆண்டிகம பண்ணை, தம்பதெனிய | 400 | சிரிங்கபாத்த பண்ணை, படல்கம | 100 |
| கல்பொக்குண பண்ணை, உடுபத்தாவ | 100 | நிக்கவரட்டிய பண்ணை, நிக்கவரட்டிய | 100 |
| கவுல்வெவ பண்ணை, நாரம்மல | 400 | ஓயமடுவ பண்ணை, அலயபட்டுவ | 100 |
| நாரங்கல பண்ணை, கித்தலாவ | 150 | - | - |
| மஹாபேரதன்ன பண்ணை, திகண | 100 | - | - |

ஆர்வமுள்ள கொள்வனவுக்காரர் தேபவிஅச தலைமை அலுவலக சந்தைப்படுத்தல் பிரிவை அல்லது மேலேயுள்ள எந்தவொரு பண்ணை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் ‘‘தலைவர், பெறுகைக் குழு, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை, இல. 40, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05 என முகவரியிடப்பட்டு 2024 ஜனவரி 09 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **“Bids for Purchasing Fresh Milk”** என தயவு செய்து குறிப்பிடவும். விலைமனுக்கள் அதே நாளில் அதே இடத்தில் பி.ப. 2.30 மணிக்கு திறக்கப்படும்.
அனைத்து விபரங்களும் நிபந்தனைகளும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

**தலைவர்,
பெறுகைக் குழு,
தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,
இல.: 40,
நாராஹேன்பிட்ட வீதி, கொழும்பு-05.
011-2501701/2, 0773782127 (சந்தைப்படுத்தல் முகாமையாளர்)**

# இலங்கை வங்கி

**கிழக்கு மாகாணத்தில் பின்வரும் கிளையை வாடகை அடிப்படையின் கீழ் இடமாற்றம் செய்வதற்காக பொருத்தமானதொரு கட்டிடம் தேவைப்படுகின்றது**
**நிந்தவூர்**

**உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டடம் பின்வரும் வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டடமானது சட்டப்படியாக நிர்மாணிக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்டதாகவிருத்தல் ஆகாது.
- நகரின் மத்தியில் பிரதான வீதிக்கு முகப்பாக ஆகக் குறைந்தது 30 அடி வீதி முகப்பில் அமைந்திருத்தல்.
- ஆகக் குறைந்தது ஆறு வாகனங்களுக்கான போதுமானளவு வாகன தரிப்பிடம்
- தரைப்பரப்பானது ஆகக் குறைந்தது 3,000-3,500 சதுர அடியாகவிருத்தல் வேண்டும்.
- இரு மாடிக் கட்டடமாகவிருந்தால், தரைத்தளமானது 2,500 சதுர அடியாகவிருத்தல் வேண்டும்.
- 60 அம்பியர் 3 வழி (Phase) மின்சாரம், நீர் வழங்கல், ஸ்ரீலங்கா ரெலிகொம் தொலைபேசி இணைப்புக்கள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனியான கழிவறைகள், அவசர வெளிச்செல்லல் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள்.
- கட்டடத்தின் தரைப்பரப்பானது ஓடு பதிக்கப்பட்டிருத்தல் (2'x2')
- சீலிங் இருத்தல் வேண்டும்
- மின்னுற்பத்தி இயந்திரமொன்றிற்காக கட்டடத்தின் பின்பக்கத்தில் முறையாக காற்றோட்டமுள்ள 100 சதுர அடி அறையொன்று (மின்னுற்பத்தி இயந்திரத்தை எடுத்துச் செல்வதற்காக தனியான பாதையொன்று இருத்தல் வேண்டும்)
- அங்கவீனர்களுக்கான சாய்வுப்பாதை.
- 1000 லீட்டர் நீரை கொள்ளக்கூடிய நீர் களஞ்சியப்படுத்தும் தாங்கியொன்று இருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் பின்பக்கத்திலுள்ள கதவுகள் மற்றும் யன்னல்கள் பாதுகாப்பு கனரக இரும்பு தடுப்பினால் அடைக்கப்பட்டிருத்தல்.
- கட்டடத்திற்கான தீ காப்புறுதி பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர், கட்டிட வரைப்படப் பிரதி மற்றும் ஏனைய அனைத்து விபரங்களை பின்வரும் முகவரிக்கு 14 நாட்களுக்குள் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “நிந்தவூர் கிளை பொருத்தமான கட்டிடம்” என தயவு செய்து குறிப்பிடவும்.

**உதவிப் பொது முகாமையாளர்
(கிழக்கு மாகாணம்),
இலங்கை வங்கி,
கிழக்கு மாகாண அலுவலகம்,
இல. 455, பிரதான வீதி,
திருகோணமலை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (Ika) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், முகவர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக 2024.01.05ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு வழங்கல்கள் மற்றும் சேவைகளின் பொருட்டும் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். சகல விண்ணப்பங்களுக்கும் விண்ணப்பப்படிவக் கட்டணமாக 1500.00 ரூபா தொகை அறவிடப்படும். காசோலை, காசுக்கட்டளை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் நுகேகொடை கங்கொடவில, சுபத்ராராம வீதி, இல. 117, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இந்தச் சபையின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

**01. அச்சு வேலைகள்**
- I. அச்சு வேலைகள்
- II. பெப்ரிக் பிரிண்டிங் (டீசேர்ட், கெப்)

**02. வழங்கல்கள்**
- I. காகிதாதிகள்
- II. மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள்
- III. அலுவலக தளபாடங்கள்
- IV. அலுவலக உபகரணங்கள் (கணனிகள், கணனி அச்சுப்பொறிகள், ஸ்கேன் இயந்திரங்கள், UPS மற்றும் ஏனைய கணனி துணைப்பாகங்கள், புகைப்படப்பிரதி இயந்திரங்கள், வேறாக்கும் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள் ஏனைய அது சார்ந்த துணைப்பாகங்கள்)
- V. வளிச்சீராக்கி இயந்திரங்கள்
- VI. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்
- VII. டயர், டியூர், பற்றரி போன்றவற்றை வழங்குதல் மற்றும் பொருத்துதல்
- VIII. கணனி உபகரணங்கள் மற்றும் கணனி காகிதாதிகள்
- IX. கெமரா முறைமை, கெமரா வில்லைகள், பாதுகாப்பு கெமரா முறைமைகள், ட்ரோன் இயந்திரங்கள்
- X. அச்சுப்பொறிகள் மற்றும் அது சார்ந்த உருப்படிகள் (டேட்டா கார்ட் அச்சிடும் இயந்திரம், டேட்டா பிளாஸ்டிக் கார்ட்)
- XI. புகைப்படப்பிரதி இயந்திரங்கள் / அச்சுப்பொறிகளுக்கான டோனர், கார்ட்ரிச், ரிபன்
- XII. துணி உற்பத்திகள் மற்றும் துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் (சீருடைகள் மற்றும் கழுத்துப் பட்டிகள், திரைச்சீலைகள், முகக்கவசங்கள் (மாஸ்க்), கிருமிநாசினிப் பொருட்கள், தும்புத்தடி, ஈர்க்கிள், தூரிகைகள், கை துடைப்பான்கள்)
- XIII. உணவு பானங்கள்
- XIV. தங்குமிடங்கள்
- XV. காது அடையாளங்கள் (ஆடுகளுக்காக)

**03. சேவைகள் (திருத்தவேலைகள்)**
- I. பதாகைகள் மற்றும் பெயர்பலகைகள் வரைதல் மற்றும் பொருத்துதல்
- II. உலோக வெல்டிங் வேலைகள்
- III. கணனி, தொலைநகல் இயந்திரம், புகைப்படப்பிரதி இயந்திரம், வளிச்சீராக்கி இயந்திரம் மற்றும் மின் உபகரணங்கள்
- IV. கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள்
- V. சீருடைக்கான துணி வழங்குதல்
- VI. மோட்டார் வாகன திருத்தவேலைகள் (டீசல் மற்றும் பெட்றல்) (தொழில்நுட்ப திருத்தவேலைகள், தகர வேலைகள், பூச்சு வேலைகள், மின்வேலை பற்றிய சிறந்த ஆற்றல் மற்றும் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் இதற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.)
- VII. வாகன வளிச்சீராக்கி இயந்திர திருத்தவேலைகள்
- VIII. மென்பொருள் மற்றும் கணனி முறைமை வலையமைப்பிடுதல்
- IX. திரைச்சீலைகள், ரெக்ஸின் வகைகள், கம்பளங்கள், ரேலிங் கொக்கிகள் மற்றும் துணைப்பாகங்கள் போன்றன
- X. மின்னியலாளர்கள்
- XI. மின்பிறப்பாக்கிகளை வாடகைக்கு வழங்குதல்
- XII. பகுதி பிரிப்பு (Partition) வேலையாட்கள்
- XIII. வாகனங்களுக்கான தவணை சேவைகள்
- XIV. வாகனங்களை வாடகைக்கு வழங்குதல்
- XV. பாதுகாப்பு சேவைகள்
- XVI. நீர்க்குழாய் / மலசலகூட திருத்தவேலை சேவைகள்
- XVII. நிறப்பூச்சு பூசும் சேவைகள்

**வழங்குநர்களை பதிவு செய்தலுக்கு இயைபான நிபந்தனைகள்**

1. முழுமையற்ற விண்ணப்பங்களை நிராகரிக்கும் மற்றும் ஏற்றுக்கொள்ளாதிருக்கும் அதிகாரத்தை கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
2. விசாரிக்கும் போது பதிலளிக்கத் தவறும் அல்லது குறித்த காலத்தில் தேவையான பொருட்களை வழங்கத் தவறும் அல்லது வழங்கப்படும் பொருட்களை குறித்த விபரக்குறிப்புகளுக்கு அமைவாக அல்லது மாதிரிகளுடன் பொருத்தாதவிடத்து முன்னறிவித்தலின்றி அவர்களது பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்படும். (அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படும்)
3. வழங்குநர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது. வழங்கலுக்கான விலைகள் பதிவுசெய்துள்ள வழங்குநர்களின் பட்டியலில் இருந்தே கோரப்படும். எனினும் தேவைப்படும் போது வேறு வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்களை கோரும் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
4. பொருட்களை உரிய வகையில் ஒப்படைக்கும் முன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் குறைந்தபட்சம் 60 நாட்கள் கடன் கால எல்லை வழங்கப்படல் வேண்டும்.
5. பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் குழுவொன்றினால் குறித்த நிறுவனம் பரிசீலிக்கப்பட்டு, பொருட்கள் அல்லது சேவைகள் வழங்குதல் பற்றி பரிந்துரையொன்றை பெற்றுக்கொள்ளல் மற்றும் அக்குழுவினால் பரிந்துரை செய்யப்படாத நிறுவனங்களை பதிவு செய்யப்படமாட்டாது.
6. சபையினால் விலைகள் கோரப்படும் வேளையில் அதற்கு பதிலளிக்காத நிறுவனங்களிடமிருந்து மீண்டும் விலைகள் கோரப்படமாட்டாது.

(சகல விண்ணப்பங்களும் ‘தலைவர், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை, இல. 117, சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொடை’ என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘வழங்குநர்களை பதிவு செய்தல் - 2024’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை,
இல. 117, சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொடை.**

# சா.ஃப் கழக தொடருக்கு புளூ ஸ்டார் அணி தகுதி



தெற்காசி கால்பந்து சம்மேளன (சாஃப்) ஆடவர் கழக சம்பியன்சிப் போட்டியில் இலங்கை சார்பில் பங்கேற்க களுத்துறை, புளூ ஸ்டார் அணி தகுதி பெற்றுள்ளது.

2021 இலங்கை சுப்பர் லீக் தொடரில் சம்பியன்களாகத் தெரிவான நிலையிலேயே புளூ ஸ்டார் அணி இலங்கையை பிரதிநிதித்துவம் செய்ய நேரடி தகுதி பெற்றுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் முறையாக நடத்தப்படவுள்ள இந்தத் தொடரில் தெற்காசி பிராந்தியத்தின் எட்டு கழக அணிகள் பங்கேற்கவுள்ளன. போட்டிகள் உள்நாடு மற்றும் வெளிநாடு என்ற அடிப்படையில் நடைபெறவுள்ளன.

பிஃபா தரவரிசையின் அடிப்படையில் ஒவ்வொரு நாட்டில் இருந்தும் பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படவுள்ளன. இதன்படி தெற்காசிய பிராந்தியத்தில் முன்னணியில் இருக்கும் இந்தியாவில் இருந்து இரு கழகங்கள் பங்கேற்கவிருப்பதோடு இலங்கை உட்பட மாலைதீவு, நேபாளம், பூட்டார், பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானில் இருந்து தலா ஒரு கழக அணி பங்கேற்கும்.

# 32 பேருடன் தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் குழாம் தேர்வு



தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் குழாம் விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவின் ஒப்புதலுக்காக இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தினால் அனுப்பப்பட்டுள்ளது.

இதில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டி மற்றும் உலக கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டிகளை இலக்கு வைத்து 22 வீரர்கள் மற்றும் 12 வீராங்கனைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அடுத்த ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டி டுபாய் நகரில் எதிர்வரும் ஏப்ரல் 23 தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. அதேபோன்று பெரு நாட்டின் லீமா நகரில் அடுத்த உலக கனிஷ்ட (20 வயதுக்கு உட்பட்ட) மெய்வல்லுனர் போட்டி 2024 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 26 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

# சிம்பாப்வே அணி பயிற்சியாளர் இன்றி இலங்கை சுற்றுப்பயணம்



சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் டேவிட் ஹோக்டன் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

டேவிட் ஹோக்டனுக்கு புதிய பொறுப்பு ஒன்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் சிம்பாப்வே கிரிக்கெட் சபை திட்டமிட்டிருந்த நிலையில் அவர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

ஜனவரி மாதத்தில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு சிம்பாப்வே அணி மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரில் தலைமை பயிற்சியாளருக்கு பதிலாக தொழிநுட்பக் குழு ஒன்றை நியமிக்க சிம்பாப்வே கிரிக்கெட் சபை எதிர்பார்த்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி 3 ஆம் திகதி இலங்கை வரும் சிம்பாப்வே அணி இலங்கைக்கு எதிராக தலா மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் ஆடவுள்ளது.

சிம்பாப்வே அணியின் தலைமை பயிற்சியாளராக கடந்த 18 மாதங்களாக டேவிட் ஹோக்டன் செயற்பட்டுவந்தார். அவரின் பதவிக்காலத்தில் சடுதியான முன்னேற்றங்களை சிம்பாப்வே அணி காட்டியிருந்த போதும், இறுதியாக டி20 உலகக் கிண்ணத்துக்கான வாய்ப்பை இழந்திருந்தது.

இவ்வாறான நிலையில் புதிய பாதை ஒன்றில் சிம்பாப்வே அணி செல்ல வேண்டும் என்ற காரணத்துக்காக தன்னுடைய பதவியிலிருந்து விலகியுள்ளதாக டேவிட் ஹக்டன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை போதைப்பொருள் தடுப்பு விதிகளை மீறிய குற்றத்திற்காக சிம்பாப்வேயின் இரு வீரர்களை அந்நாட்டு கிரிக்கெட் சபை இடைநிறுத்தியுள்ளது. சிம்பாவே அணியின் சர்வதேச வீரர்களான வெஸ்லி மதவரே மற்றும் பிரண்டன் மவுடா இருவரும் எந்த ஒரு கிரிக்கெட் செயற்பாடுகளிலும் ஈடுபட தடை விதிக்கப்பட்டுள்ளது.

23 வயதான வெஸ்லி மதவரே சிம்பாப்வே அணிக்காக 98 சர்வதேச போட்டிகளில் ஆடி இருப்பதோடு 26 வயதான பிரண்டன் மவுடா 26 சர்வதேச போட்டிகளில் ஆடியுள்ளார்.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் போர் நிறுத்த பேச்சுகள் தீவிரம்: மக்கள் வெளியேற இஸ்ரேல் புது உத்தரவு

## பாதுகாப்புச் சபையில் தொடர்ந்து இழுபறி



காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் தீவிரமாக இடம்பெற்று வரும் நிலையில் தெற்கு காசாவின் பிரதான நகரான கான் யூனிஸில் இருந்து மேலும் மக்களை வெளியேற்றும் புதிய உத்தரவை இஸ்ரேல் பிறப்பித்துள்ளது.

140,000க்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் கான் யூனிஸின் பெரும் பகுதி ஒன்றில் இருந்து வெளியேறும்படி இஸ்ரேல் புதன்கிழமை (20) உத்தரவிட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

போர் வெடித்த ஆரம்பத்தில் முற்றுகையில் உள்ள காசாவின் வடக்கு பகுதியில் இருந்து மக்களை வெளியேறும்படி இஸ்ரேல் அறிவுறுத்திய நிலையில் பெரும்பாலான மக்கள் பாதுகாப்புத் தேடி தெற்கிற்கு வெளியேறினர்.

எனினும் அங்கு மக்கள் செல்ல முடியுமான பகுதிகள் நாளுக்கு நாள் சுருங்கி வருவதோடு உயிரிழப்பு எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருவது சர்வதேச அளவில் கவலையையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு காசாவை அடுத்து தற்போது கான் யூனிஸை மையமாகக் கொண்டு தெற்கு காசாவில் இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. இதனால் பலஸ்தீனர்கள் மேலும் தெற்காக எகிப்து எல்லையை ஒட்டி ரபா பகுதிக்கு அடைக்கலம் பெற்று வருகின்றனர்.

இதனால் காசாவின் ரபா பகுதி சனநெரிசல் மிக்க இடமாக மாறியுள்ளது. அங்கு ஒரு சதுர கிலோமீற்றர் பகுதிக்கு 12,000 பேர் இருப்பதாக ஐ.நா எச்சரித்துள்ளது.

"மோதலுக்கு முன்னரை விடவும் நான்கு மடங்கு அதிகாரித்து (ரபாவில்) சனநெரிசல் சதுர கிலோமீற்றருக்கும் 12,000 பேரை தாண்டியுள்ளது" என்று மனிதாபிமான விவகாரங்களின் இணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

முறைசாரா இடம்பெயர்ந்த இடங்கள் மற்றும் தற்காலிக தங்குமிடங்களில் கழிப்பறைகள் மற்றும் போதுமான தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் இல்லாத நிலையில், உணவு, தண்ணீர், தங்குமிடம் மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் உதவி விநியோக மையங்களுக்கு முன் ஆயிரக்கணக்கான மக்கள் வரிசையில் காத்து நிற்கின்றனர்" என்று அது குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் மத்திய மற்றும் தெற்கு கான் யூனிஸின் சுமார் 20 வீத பகுதியை உள்ளடங்கும் வகையில் பலஸ்தீனர்களை வெளியேறும்படி இஸ்ரேல் இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

அங்கு 32 தற்காலிக முகாம்களில் இருக்கும் 140,000க்கும் அதிகமானோர் வெளியேற வேண்டியவர்களின் பட்டியலில் இருப்பதாகச் கூறப்படுகிறது. அவர்கள் ஏற்கனவே வடக்கு காசாவில் வீடுகளைவிட்டு வெளியேறித் தெற்கில் இருக்கும் தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளனர்.

2.2 மில்லியன் மக்கள் தொகை கொண்ட காசாவில் 1.9 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் ஏற்கனவே வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசாவில் இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்கள் தொடரும் சூழலில் அங்கு கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 20,000ஐ தாண்டியுள்ளது. இதில் 8,000க்கும் அதிகமானவர்கள் சிறுவர்களாவர். கொல்லப்பட்டவர்களில் 97 ஊடகவியலாளர்கள், 310 சுகாதார பணியாளர்கள் மற்றும் 35 சிவில் பாதுகாப்பு பணியாளர்கள் அடங்குகின்றனர்.



தவிர, குறைந்தது 52,586 பேர் காயமடைந்திருப்பதோடு அவர்களில் 8,663 சிறுவர்கள் அடங்குகின்றனர். காசாவின் பெரும் பகுதி இஸ்ரேலிய தாக்குதல்களால் இடிபாடுகளாக மாறியிருக்கும் சூழலில் 4,900 சிறுவர்கள் உட்பட 6,700 பேர் காணாமல் போயுள்ளனர்.

**போர் நிறுத்த முயற்சி**

இதேவேளை காசாவில் புதிய போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது மற்றும் மேலும் இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு "தீவிர பேச்சுவார்த்தைகள்" இடம்பெற்று வருவதாக அமெரிக்கா கூறியுள்ளது. எனினும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல் முழுமையாக முடிவுக்கு வராத வரை எந்தப் பேச்சுவார்த்தையும் இல்லை என்று ஹமாஸ் அமைப்பு உறுதியாக கூறியுள்ள சூழலில் உடன்பாடு ஒன்றை எட்டுவதில் நிச்சயற்ற நிலை நீடித்து வருகிறது.

எகிப்து தலைநகர் கெய்ரோவுக்கு கடந்த புதன்கிழமை பயணித்த ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே, அங்கு எகிப்தின் மத்தியஸ்தத்திலான போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறார்.

இதில் பலஸ்தீன போராளிகளின் பிடியில் இருக்கும் இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றும் அதற்கு பகரமாக இஸ்ரேலிய சிறைகளில் இருக்கும் பலஸ்தீனர்களை விடுவிப்பது தொடர்பில் தூதுக் குழுவினர் தீவிர பேச்சுவார்த்தைகளில் இடுபட்டு வருவதாக அந்த பேச்சுவார்த்தையுடன் தொடர்புபட்ட வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

போரை முடிவுக்குக் கொண்டுவரும் சாத்தியம் ஒன்று பற்றி பேசுவதற்கு காசாவில் இயங்கும் சிறிய போராட்டக் குழுவான இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் தலைவரும் எதிர்வரும் நாட்களில் எகிப்து செல்லவிருப்பதாக அந்த அமைப்பு கூறியது.

"இது தீவிர கலந்துரையாடல் மற்றும் பேச்சுவார்த்தையாக இருப்பதோடு அது ஓர் இடத்திற்கு இட்டுச் செல்லும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்" என்று வெள்ளை மாளிகை பேச்சாளர் ஜோன் கிர்பி செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் கூறியிருந்தார்.

எனினும் ஹனியேவின் ஊடக ஆலோசகரான டஹ்ர் அல் நொனா ரோய்ட்டர்ஸுக்கு கூறியதாவது, "இஸ்ரேல் காசாவில் தனது இராணுவ நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவந்து பலஸ்தீன மக்களுக்கான உதவிகளை அதிகரிக்கும் வரை மேலும் இஸ்ரேலிய பணயக்கைதிகள் விடுவிக்கப்படமாட்டார்கள்" என்றார்.

"இந்த இரு விடயங்களும் அடைந்த பின் கைதிகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்த முடியும். ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட்ட பின்னரே கைதிகள் தொடர்பில் எந்த ஒரு முன்மொழிவும் பேசப்படும்" என்று கெய்ரோவில் அளித்த பேட்டியில் அல் நொனா மேலும் தெரிவித்தார்.

இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கையில் மேலும் தற்காலிக போர் நிறுத்தங்களை ஹமாஸ் நிராகரிக்கிறது. "எகிப்தில் எமது சகோதரர்களுடன் நாம் பேசியதோடு இந்த ஆக்கிரமிப்பு மீதான எங்கள் நிலைப்பாட்டை குறிப்பிட்டு கூறியுள்ளோம். அவசரமாக போரை நிறுத்துவதே எமது முதல் முன்னிரிமையாக உள்ளது" என்றார் அல் நொனா.

மறுபுறம் எகிப்து பேச்சுவார்த்தை தொடர்பில் பொது வெளியில் எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

எனினும் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றை நிராகரிக்கும் அது, ஹமாஸ் தோற்கடிக்கப்படும் வரையில் மட்டுப்படுத்தப்பட்ட மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கு மாத்திரமே இணக்கத்தை வெளியிட்டு வருகிறது.

ஹமாஸ் ஒழிக்கப்பட்டு, அனைத்து பணயக்கைதிகளும் விடுவிக்கப்பட்டு, காசா இஸ்ரேலுக்கு அச்சுறுத்தல் இல்லாத பகுதியாக மாற்றப்படும் வரை இந்தப் போர் தொடரும் என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியுள்ளார்.

"நாம் போரை நிறுத்துவோம் என்று நினைப்பவர்கள் யதார்த்தத்தில் இருந்து விலகி நிற்கிறார்கள். ஆரம்பம் தொடக்கம் கடைசி வரை அனைத்து ஹமாஸ் பயங்கரவாதிகளும் இறந்தவர்களாக்கப் படுவார்கள்" என்று நெதன்யாகும் புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கும் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் ஒன்றின் மீதான வாக்கெடுப்பு மூன்றாவது நாளாக நேற்று முன்தினத்திலும் ஒத்திவைக்கப்பட்டது.

ஐக்கிய அரபு இராச்சியம் கொண்டுவந்த இந்த நகல் தீர்மானத்தில், தற்காலிக போர் நிறுத்தம் என்ற சொல்லை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றித் தீவிரப் பேச்சுவார்த்தை நடைபெறுவதாக கூறப்படுகிறது.

இதில் அமெரிக்காவே முட்டுக்கட்டையை ஏற்படுத்தி வருகிறது. ஏற்கனவே இவ்வாறான தீர்மானத்தின் மீது அமெரிக்கா வீட்டோ அதிகாரித்தை பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

**பிராந்தியத்தில் நீடிக்கும் பதற்றம்**

இஸ்ரேலுடனான லெபனான் எல்லையில் ஹிஸ்புல்லா போராளிகள் மற்றும் இஸ்ரேலிய படைகளிடையே அடிக்கடி மோதல் வெடிப்பதோடு செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீது யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் இந்தப் போர் பிராந்தியத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

எல்லை கிராமமான மரூன் அல் ராஸில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய ஷெல் தாக்குதலில் பெண் ஒருவர் கொல்லப்பட்டு அவரது கணவர் காயமடைந்திருப்பதாக லெபனான் அறிவித்துள்ளது.

கடந்த சில நாட்களில் இஸ்ரேலிய தாக்குதல்களில் லெபனானில் பொதுமக்கள் கொல்லப்படும் மூன்றாவது சம்பவமாக இது உள்ளது.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே அடிக்கடி இவ்வாறு பரஸ்பரம் தாக்குதல்கள் இடம்பெற்று வந்தபோதும் அவை எல்லைப் பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவே நீடித்து வருகிறது.

மறுபுறம் அமெரிக்கா மற்றும் மற்ற சர்வதேச படைகள் நிலைகொண்டிருக்கும் ஈராக்கில் உள்ள அல் அஸாத் விமானத் தளத்தின் மீது நேற்று (21) ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதை அமெரிக்க இராணுவத்தின் மத்திய கட்டளையகம் உறுதி செய்துள்ளது.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் ஈராக் மற்றும் சிரியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தை இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல்களின் தொடர்ச்சியாகவே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# செய்யாத குற்றத்திற்காக அரை நூற்றாண்டு சிறை அனுபவித்தவர் விடுதலை



அமெரிக்காவின் ஒக்லஹோமா மாநிலத்தில் 71 வயது கிலின் சிம்மன்ஸ் 48 ஆண்டுகள் சிறை அனுபவித்த பின்னர் நிரபராதி என அறிவிக்கப்பட்டுள்ளார்.

1975ஆம் ஆண்டு சிம்மன்ஸ், டொன் ரொபர்ட்ஸ் இருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இருவரும் கடையைக் கொள்ளையடித்தபோது கடை ஊழியரைக் கொன்றதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. அவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

சம்பவத்தின்போது தலையில் சுடப்பட்ட பதின்ம வயது வாடிக்கையாளரின் வாக்குமூலத்தை மட்டும் வைத்து ஆடவர்கள் இருவரும் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆனால் அவர் குற்றவாளியைச் சரியாக அடையாளம் காட்டினாரா என்பது கேள்விக்குறியாகவே இருந்தது.

கொலை நடந்தபோது தாங்கள் ஒக்லஹோமா மாநிலத்திலேயே இல்லை என்று ஆடவர்கள் இருவருமே கூறினர்.

கடந்த செவ்வாயன்று (19) நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது சிம்மன்ஸ் நிரபராதி என அறிவிக்கப்பட்டது. ரொபர்ட்ஸ், 2008ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார்.

# கணவனை கொன்ற குழந்தை மணமகளுக்கு ஈரானில் தூக்கு



குழந்தை திருமணத்தால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவருக்கு தனது கணவனை கொன்றதற்காக ஈரானில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சமிரா ஷப்சியான் என்ற அந்தப் பெண்ணுக்கு கடந்த புதன்கிழமை (20) காலை மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக நோர்வேயை தளமாகக் கொண்ட ஈரான் மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது. ஷப்சியான் பல ஆண்டுகளாக குழந்தை திருமணம், வீட்டு வன்முறைகளால் பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது மரண தண்டனைக்கு முகம்கொடுத்திருக்கிறார் என்று அந்தக் குழு தெரிவித்துள்ளது.

திருமணம் முடிக்கும்போது 15 வயதான ஷப்சியான் நான்கு ஆண்டுகள் கழித்து கணவனை கொன்றதற்காக 2013 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட கணவரின் பெற்றோர் அவருக்கு மன்னிப்பு அளிக்க மறுத்த நிலையிலேயே தூக்கிலிடப்பட்டுள்ளார். அவருக்கு இரு குழந்தைகள் இருப்பதோடு கைது செய்யப்பட்டது தொடக்கம் குழந்தைகளை பார்க்காத நிலையில் கடைசியாக இந்த மாத ஆரம்பத்திலேயே குழந்தைகளை பார்த்துள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 22ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன் கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

# கேள்விக்கான அழைப்பு

**வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு**

## உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான உணவகத்தில் பாவிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல் – 2023

உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு சொந்தமான உணவகத்தில் பாவிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்குத் தேவையான நிபந்தனைகள், விபரப் பத்திரங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்காக மீளளிக்கப்படாத ரூ.2,000.00 மாதிரிப்பத்திரக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் ரூ. 10,000.00 கேள்வி வைப்புத் தொகையை உணவுத் திணைக்களத்தின் காசாளருக்கு செலுத்திய பின்னர் கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படும் பொருட்கள் மற்றும் உபகரணங்களை 2024.01.04 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை உணவுத் திணைக்களத்தின் தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள உணவகத்தில் பரீட்சிக்கலாம். பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2024.01.05 பி.ப. 2.00 வரை கணக்குக் கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலம் கேள்விகளை ஒப்படைக்கலாம். அன்றே பி.ப. 2.15 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அதற்காக சமுகமளிக்கலாம். கேள்வி ஆவணங்கள் உள்ளிடும் உறையின் இடது மூலையில் "உணவுத் திணைக்கள உணவகத்தில் உள்ள பாவிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல் - 2023" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**உணவு ஆணையாளர்,**
**உணவு ஆணையாளர் திணைக்களம்,**
**இல. 330 யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு - 02**

# பெறுகை அறிவித்தல்

## சிறைச்சாலைகள் திணைக்களம்

## 2024/2025 ஆண்டிற்கான விறகு வழங்கல்

01. கொழும்பு-09, பேஸ்லைன் வீதி, இலக்கம் 150 என்ற முகவரியிலமைந்துள்ள சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பெறுகைக்குழுத் தலைவரினால் பின்வரும் சிறைச்சாலை நிறுவனங்களிற்கு 2024/2025 ஆண்டில் விறகு வழங்குவதற்காக இலங்கையிலுள்ள வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.
02. கேள்வி விண்ணப்பப்படிவங்கள் வழங்கல் 2023.12.22 அன்று மு.ப. 10.00 முதல் 2024.01.29 அன்று பி.ப. 2.30 வரை மேற்கொள்ளப்படுவதுடன் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2024.01.30 அன்று மு.ப. 10.00 வரை மேற்கொள்ளப்படுவதுடன், கேள்விகளைத் திறத்தல் உடனடியாகவே மேற்கொள்ளப்படும்.
03. விறகு தேவைப்படும் சிறைச்சாலை நிறுவனங்கள்:-

| | | | |
|---|---|---|---|
| 1 | வெலிக்கட | 15 | பல்லேகெலே (எ.சி.க) |
| 2 | கொழும்பு ரிமான்ட் | 16 | ஹங்கிலிபொல |
| 3 | நவ மெகசின் (கொழும்பு) | 17 | வாரியபொல |
| 4 | போகம்பர (நவ தும்பர) | 18 | மொனராகல |
| 5 | மஹர | 19 | வவுனியா |
| 6 | அநுராதபுரம் | 20 | வீரவில |
| 7 | கேகாலை | 21 | குருவிட்ட |
| 8 | களுத்துறை | 22 | தல்தென |
| 9 | பதுளை | 23 | பூஸ்ஸ |
| 10 | காலி | 24 | வட்டரெக்க |
| 11 | மாத்தறை | 25 | மட்டக்களப்பு |
| 12 | அம்பேபுஸ்ஸ | 26 | திருகோணமலை |
| 13 | அங்குணகொலபெலெஸ்ஸ | 27 | பொலன்னறுவை |
| 14 | பல்லன்சேனை | 28 | யாழ்ப்பாணம் |

04. கேள்வி விண்ணப்பதாரர்கள், மேற்படி நிறுவனங்களிற்காக தனித்தனியான கேள்வி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. கீழ் விபரிக்கப்படும் அனைத்து சான்றிதழ்களும் மற்றும் ஆவணங்களும் கேள்வி விண்ணப்பங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
    - அ. கடந்த 03 ஆண்டுகளிற்கான, கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்று (2020 / 2021, 2021/2022, 2022/2023) அல்லது பொது 170 மாதிரிப்படிவத்தில் மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளரிடம் இருந்து கேள்வி ஆவணங்களின் நிரல் V இல் குறித்த நிறுவனத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானத்திற்குப் பெற்றுக்கொள்ளப்படும் ஆதனச் சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (கேள்விகள் மூடப்படும் தினத்திற்கு 30 நாட்களிற்குள் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பெயரில் வழங்கப்பட்ட சான்றிதழொன்றாக இருத்தல் வேண்டும்). சொத்து சான்றுகளுடன் சம்பந்தப்பட்ட பெறுமதிகள் பற்றிய விபரங்களை சிறைச்சாலை தலைமையகத்தின் வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
    - ஆ. வியாபாரப் பதிவுச் சான்றிதழ்.
    - இ. கேள்விதாரர் 1987 இல. 03, பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவுசெய்திருத்தல் வேண்டும்.
    - ஈ. விறகு வழங்கல் சேவையை மேற்கொள்வதற்கான வாகனங்கள் உள்ளன என்பதனை நிரூபிப்பதற்கான எழுத்துருவ அத்தாட்சிகள்
        - நிகழும் அத்தாட்சிகள்
        - வாகனத்தின் பதிவுச் சான்றிதழ்
        - வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனமொன்றெனின் செல்லுபடியாகும் வாடகை ஒப்பந்தம்
    - உ. விறகு சிறைச்சாலைகளிற்கு விநியோகிக்கும் பணிக்குழுவினருக்கான பொலிஸ் அறிக்கை.
06. மேற்படி வழங்கல்களிற்காக ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒவ்வொரு கேள்விக்கும் மீளளிக்கப்படாத ரூபா 10000/- இற்கான கேள்விக் கட்டணமொன்று சிறைச்சாலைகள் தலைமையக ஆணையாளருக்கு (நிதி) செலுத்துதல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் வணிக வங்கியொன்றினால், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்ட நிபந்தனைகளற்ற மற்றும் உடன் மாற்றக்கூடிய, கேள்வி ஆவணத்தின் நிரல் V (Section V)1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானத்திற்கான IV- நிரலின் மாதிரிப்படிவத்தின் பிரகாரம் கேள்விப் பிணையமொன்று அனைத்துக் கேள்விகளுடனும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். குறித்த கேள்விப் பிணையமானது, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 2024.04.01ஆம் திகதி வரை செல்லுபடியாகுதல் வேண்டும். (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)
07. கொழும்பு-09, பேஸ்லைன் வீதி, இலக்கம் 150 என்ற முகவரியிலமைந்துள்ள சிறைச்சாலைகள் தலைமையகம் வழங்கல் பிரிவில் 2024.01.29 அன்று பி.ப. 2.30 வரை இதற்கான நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புக்களுடன் கூடிய மாதிரிப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி முகவரியிலமைந்துள்ள சிறைச்சாலைகள் தலைமையக கேட்போர் கூடத்தில், மேற்படி 02ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்வி களைதிறத்தல் மேற்கொள்ளப்படும். (தொலைபேசி இலக்கம் 0114677178/ 0114677177 நீடிப்பு - 178) அவ்வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதிகள் செல்லுபடியாகும் கடிதமொன்றுடன் கலந்து கொள்ளலாம்.
08. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் கேள்விகள் பதிவுத்தபாலில் அனுப்புவதற்கு அல்லது கொழும்பு - 09, பேஸ்லைன் வீதி, இல. 150 இல் அமைந்துள்ள சிறைச்சாலைகள் தலைமையக வழங்கல் மற்றும் சேவைப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்ப்பதற்கு முடியும். 2023.12.22 மு.ப. 10.00 முதல் 2024.01.29 பி.ப. 2.30 வரை கேள்வி ஆவணங்களை இலவசமாக கொழும்பு - 09, பேஸ்லைன் வீதி, இல. 150 இல் அமைந்துள்ள சிறைச்சாலைகள் தலைமையக வழங்கல் மற்றும் சேவைப் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
09. கேள்விகள் மூடப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
10. முழுமையாகக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவின் தலைவருக்கு உரித்தாகும்.

**எச்.எம்.டி.என். உபுல்தெனிய,**
**சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்,**
**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**சிறைச்சாலைகள் தலைமையகம் பேஸ்லைன் வீதி,**
**கொழும்பு-09**
**2023.12.22**

## பெயர் மாற்றம்

காத்தான்குடி 02, பரிசாரியார் ஒழுங்கை, பழைய கல்முனை வீதி எனும் முகவரியைச் சேர்ந்த "பிறப்பு சான்றிதழ் இல. 1480" முகைதீன் பாவா பௌஸர் ஆகிய நான், எனது பெயரை முகைதீன் பாவா முஹம்மது பௌஸர் என மாற்றிக் கொண்டேன் / என்பதை இலங்கை சனநாயக சோசலிஷ குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவிக்கிறேன்.

**முகைதீன் பாவா முஹம்மது பௌஸர்**

## பெயர் மாற்றம்

பிள்ளையார் கோயில் வீதி, பட்டிப்பளை கொக்கட்டிச் சோலை எனும் விலாசத்தில் வசிக்கும் பரிகாரிப்போடி சீனித்தம்பி (பதிவு இக்கம் - 3991) எனும் பதிவில் பதியப்பட்டுள்ள எனது பெயரை பரிகாரிப்போடி சிதம்பரப்பிள்ளை என்றே அழைத்து வருகின்றேன். ஆகவே எனது பெயரை வழமையாக அழைக்கும் பரிகாரிப்போடி சிதம்பரப் பிள்ளை என்பதனை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

## கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் விதிகளின் கீழ் 2023 டிசம்பர் 12ம் திகதி முதல் அமுலுக்கு வருமாறு,

**கம்பனியின் பழைய பெயர் :**
இன்∴போர்மெடிக்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிட்டட்
**கம்பனி இலக்கம்:** PB 122
**கம்பனியின் பதிவு அலுவலக முகவரி:**
இல. 33, பகதலே வீதி, கொழும்பு - 03
**கம்பனியின் புதிய பெயர்:**
இன்வோர்மெட்டிக்ஸ் வென்சர்ஸ் லிமிட்டட்
**சபையின் கட்டளையின் பிரகாரம்**
P.R. கோர்ப்பரேட் சேர்விஸ் (பிரைவட்) லிமிட்டட் பணிப்பாளர்

## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல் 1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டப் பிரிவு 55

மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில் வெலேகொட மேற்கு என்னும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 820025 துண்ட இல. 04 பத்திர இல. 01 துண்டு இல. 79ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 02, நடு வீதி, வெலேகொட, மாத்தறை என்னும் விலாசத்தைக் கொண்ட எழுவாலகே வசந்த குணரத்ன என்னும் ஆள் 2017.10.03 மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 360, பல்லிமுள்ளை, மாத்தறை என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.01.24ஆம் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

LE/RE/208

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (HDFC வங்கி)

**(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான**

### பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்

**கடன் இலக்கம்** : **110500000218, 110500000219 மற்றும் 110521000011**
**கடனாளியின் முழுப் பெயர்** : **மீகஹவத்தகே மனோஹரி விக்ரமாரச்சி**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2023.03.31 ஆம் திகதி 2326 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியிலும் 2023.03.31 ஆம் திகதி "தினமின", "தினகரன்" மற்றும் "டெய்லி நியூஸ்" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இலக்கம் 134, பெத்தகான வீதி, கோட்டே என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் 2024.01.03 ஆம் திகதி பி.ப 03.30 மணியில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில் அல்லது HDFC வங்கி நுகேகொட கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் 3460 மற்றும் 3461 ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரங்களின்படி, ஒரு கோடி இருபத்து ஒரு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து நான்கு ரூபா முப்பது சதம் (ரூபா 12,134,934.30),2023.01.31 ஆம் திகதி வரை (அதன் பிறகு செலுத்தப்பட்ட எந்தவொரு கட்டணத்தையும் தவிர்த்து) இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

1) **முதலாவது கடன் தொகை 110500000218**

   3460 ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலம் குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான நாற்பத்து ஐந்து இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து அறுநூற்று அறுபத்து இரண்டு ரூபா முப்பத்து ஒன்பது சதம் (4,527,662.39) 2023.01.31 ஆம் திகதி வரையிலான நிலுவையாக பன்னிரெண்டு இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரத்து அறுநூற்று அறுபத்து மூன்று ரூபா இருபத்து ஐந்து சதத்தினையும் (ரூபா 1,291,663.25) இதன்படி 2023.01.31 மொஹத்தமாக ஐம்பத்து எட்டு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து முந்நூற்று இருபத்து ஐந்து ரூபா அறுபத்து நான்கு சதத்தையும் (ரூபா 5,819,325.64)

   **இரண்டாவது கடன் தொகை 110500000219**

   3461ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலம் குறிப்பிட்ட இரண்டாவது கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான நாற்பத்து ஒரு இலட்சத்து முப்பத்து ஐயாயிரத்து நாநூற்று ஐம்பத்து ஆறு ரூபா எண்பத்து ஒரு சதம் (ரூபா. 4,135,456.81), 2023.01.31 ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள பதின்மூன்று இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து நாநூற்று எழுபத்து ஐந்து ரூபா முப்பத்து மூன்று சதத்தினையும் (ரூபா 1,359,475.33) இதன்படி முழுத் தொகையான ஐம்பத்து நான்கு இலட்சத்து தொன்னூற்று நான்காயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து இரண்டு ரூபா பதினான்கு சதத்தினையும் (ரூபா 5,494,932.14)

   **மூன்றாவது கடன் தொகை 110521000011**

   2023.01.31 ஆம் திகதிவரை வட்டியுடன் நிலுவையாக எட்டு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூற்று எழுபத்து ஆறு ரூபா ஐம்பத்து இரண்டு சதம் (820,676.52)

2) குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான நாற்பத்து ஐந்து இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து அறுநூற்று அறுபத்து இரண்டு ரூபா முப்பத்து ஒன்பது (4,527,662.39) சதத்திற்காக அறவிட வேண்டிய 15.45% வீத வருடாந்த வட்டியினையும் இரண்டாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான நாற்பத்து ஒரு இலட்சத்து முப்பத்து ஐயாயிரத்து நாநூற்று ஐம்பத்து ஆறு ரூபா எண்பத்து ஒரு (ரூபா. 4,135,456.81) சதத்திற்காக அறவிட வேண்டிய 17.74% வீத வருடாந்த வட்டியினையும், மூன்றாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான எட்டு இலட்சத்து இருபதாயிரத்து அறுநூற்று எழுபத்து ஆறு ரூபா ஐம்பத்து இரண்டு சதம் (820,676.52)சதத்திற்காக அறவிட வேண்டிய 6.93% வீத வருடாந்த வட்டியினையும், 2023.02.01 ஆம் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்கும்,
3) 2023.02.01 திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட முழு நிலுவைத் தொகையான முப்பத்து ஒரு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து அறுநூற்று இருபத்து ஏழு ரூபா எண்பத்து ஒரு சதத்தினையும் (ரூபா 3,157,627.81) மாதாந்தம் 2.00% தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்யவும்,
4) 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை, அறவீடு செய்வதற்காகும்.

கடன் இலக்கம் 110500000218, 110500000219 மற்றும் 110521000011

#### மேற்கூறப்பட்ட அட்டவணை

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், ஹேவாகம் கோறலையில், பல்லேபத்துவவில் கடுவலை நகரசபை எல்லையில், கடுவலை பிரதேச செயலகப்பிரிவில், இலக்கம் 492 ஸ்ரீசுபுதிபுர கிராம உத்தியோகத்தர் பிரிவில், பத்தரமுல்ல கிராமத்தில் வரிமதிப்பீட்டிலக்கம் 097/3A சுபோதிபுர பாதையில் அமைந்துள்ள தெல்கஹவத்த என்ற காணிக்கு 2018.12.11 ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் எஸ்.எம்.ஜலாலுதீன் என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2997 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே பாதை (1985/08/27 ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் ஆர்.என்.தி சில்வா என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2315 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 4A2) மற்றும் 2012.04.09 ஆம் திகதி அனுமதிபெற்ற நில அளவையாளர் சாலிய விக்ரமசிங்ஹ என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 12080A என்ற இலக்க காணிவரைபடத்தின்படி A என்ற இலக்க காணித்துண்டும் (வரிமதிப்பீட்டிலக்கம் 97/3B போதிராஜ மாவத்தை) மற்றும் காணிவரைபடம் 12080A யும் கிழக்கே பாதை (1985/08/27 ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் ஆர். என். த சில்வா என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2315 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 4A2) மற்றும் 2012.04.09 ஆம் திகதி அனுமதிபெற்ற நில அளவையாளர் சாலிய விக்ரமசிங்ஹ் என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 12080A என்ற இலக்க காணிவரைபடத்தின்படி A என்ற இலக்க காணித்துண்டும் வரிமதிப்பீட்டிலக்கம் 97/3B போதிராஜ மாவத்த) மற்றும் 02ஆம் இலக்க காணித்துண்டும் தெற்கே இதே இரண்டாம் இலக்க காணித்துண்டும் பாதையும் (1985/08/27 ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் ஆர்.என். த சில்வா என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2315 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 4A2) மற்றும் மேற்கே பாதை (1985/08/27 ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் ஆர்.என்.த சில்வா என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2315 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 4A2) என்பன எல்லைகளாக அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு ஏழு பேர்சஸ்கள் ஆகும். (ஏக்0 ரூட் 0 பேர்ச் 07). இக் காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடங்கள், மரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் அடங்கலாக ஹோமாகம காணிப்பதிவு காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட 2997 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி B1497/63 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(1985/08/27 ஆம் திகதி, அனுமதிபெற்ற நில அளவையாளர் ஆர்.என்.த. சில்வா என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2315 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 4A2) பாதைக்கான உரிமையும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொது முகாமையாளர்**
**திகதி - 15.12.2023**

**இ.வீ.அ.நி.கூ.வங்கி**
**தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்**
**சேர். சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**த.பெ.இல. 2085**
**கொழும்பு 02.**

LE/RE/208

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (HDFC வங்கி)

**(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான**

### பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்

**கடன் இலக்கம்** : **301500000168**
**கடனாளியின் முழுப் பெயர்** : **போலந்த ஹக்குரு ருவன் தினேஷ் குணவர்தன**

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2023.11.17 ஆம் திகதி 2359 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியிலும் 2023.11.17 ஆம் திகதி "தினமின", "தினகரன்" மற்றும் "டெய்லி நியூஸ்" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இலக்கம் 134,பெத்தகான வீதி, கோட்டே என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் 2024.01.17 ஆம் திகதி பி.ப 03.30 மணியில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில் அல்லது HDFC வங்கி அம்பலங்கொடை கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் 2993 ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரங்களின்படி, எண்பத்து இரண்டு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து நூற்று நாற்பத்து எட்டு ரூபா பத்து சதம் (ரூபா 8,224,148.10), 2023.08.31 ஆம் திகதி வரை (அதன் பிறகு செலுத்தப்பட்ட எந்தவொரு கட்டணத்தையும் தவிர்த்து) இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

1. கடன் இலக்கம் 301500000168

   குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான அறுபத்து ஐந்து இலட்சத்து முப்பதாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது ரூபா முப்பத்து ஆறு சதத்தினையும், (ரூபா 6,530,930.36) 2023.08.31 ஆம் திகதி வரையிலான நிலுவையாக பதினாறு இலட்சத்து தொன்னூற்று மூவாயிரத்து இருநூற்று பதினேழு ரூபா எழுபத்து நான்கு சதத்தினையும் (ரூபா 1,693,217.74) இதன்படி மொத்தமாக எண்பத்து இரண்டு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து நூற்று நாற்பத்து எட்டு ரூபா பத்து சதத்தினையும் (ரூபா 8,224,148.10)
2. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத அறுபத்து ஐந்து இலட்சத்து முப்பதாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது ரூபா முப்பத்து ஆறு சதத்திற்காக, (ரூபா 6,530,930.36) அறவீடு செய்ய வேண்டிய 15.00% வீதமான வருடாந்த வட்டியினையும் 2023.09.01 ஆம் திகதியிலிருந்து ஆதனத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதிவரைக்கும் (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்காகவும்.
3. 2023.09.01 திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்குறிப்பிட்ட முழு நிலுவைத் தொகையான பதின் நான்கு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து அறுநூற்று மூன்று ரூபா எழுபத்து நான்கு சதத்திற்காக (ரூபா 1,457,603.74) மாதாந்தம் 2.00% வீத தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்யவும்,
4. குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றை கழித்த பின்னர்) மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என, 2011 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2023 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடன் இலக்கம் 301500000168

#### மேற்குறிப்பிட்ட அட்டவணை

1. தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், பெந்தோட்டை வலல்லாவிட்ட கோரளையில், கரந்தெனிய பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 41, வடக்கு மாகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாகல கிராமத்தில் அமைந்துள்ள மில்லகஹவத்த காணியின் ஒன்றிணைக்கப்பட்ட காணித்துண்டிலக்கம் B1 மற்றும் B2 என்ற காணிக்கு 2021 மார்ச் மாதம் 04 ஆம் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பீ.எச்.சீ. த சில்வா என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 139ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே: காணித்துண்டிலக்கம் B யின் ஒரு பகுதியும் கிழக்கே: ஊரகஸ்மங்கந்தியவில் இருந்து மஹ ஏதண்ட வரையிலான பிரதான வீதியும் தெற்கே: அதே காணியின் 2ஆம் இலக்க காணித்துண்டும் மேற்கே: எச்.பீ.டி.சில்வா என்பவருக்கு சொந்தமான மகவத்த மற்றும் B என்ற இலக்க காணியின் மிகுதிப் பகுதியும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் பத்து பேச்சஸ்களாகும். (ஏக்.0 - ரூட்.0 பே. 10) இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், தாவரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் எல்பிட்டிய காணிப்பதிவு காரியாலயத்தில் இலக்கம் J 215/23 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
2. தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், பெந்தோட்டை வலல்லாவிட்ட கோரளையில், கரந்தெனிய பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 41, வடக்கு மாகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாகல கிராமத்தில் அமைந்துள்ள மில்லகஹவத்த காணியின் ஒன்றிணைக்கப்பட்ட காணித்துண்டிலக்கம் B1 மற்றும் B2 என்ற காணிக்கு 2021 மார்ச் மாதம் 04 ஆம் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பீ.எச்.சீ. த சில்வா என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 139 ஆம் இலக்கம் காணிவரைபடத்தின்படி 02 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே: இதே காணித்துண்டின் 01 ஆம் இலக்க காணித்துண்டும் கிழக்கே: ஊரகஸ்மங்கந்தியவில் இருந்து மஹ ஏதண்ட வரையிலான பிரதான வீதியும் தெற்கே: இதே காணித்துண்டின் 03 ஆம் இலக்க காணித்துண்டும் மேற்கே. எச்.பீ. டி. சில்வா என்பவருக்கு சொந்தமான மகவத்த மற்றும் இதே காணித்துண்டின் 01ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் பத்து பேச்சஸ்களாகும். (ஏக்.0 - ரூட்.0 பே. 10) இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், தாவரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் எல்பிட்டிய காணிப்பதிவு காரியாலயத்தில் இலக்கம் J 215/24 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
3. தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், பெந்தோட்டை வலல்லாவிட்ட கோரளையில், கரந்தெனிய கிராம பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 41, வடக்கு மாகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாகல கிராமத்தில் அமைந்துள்ள மில்லகஹவத்த காணியின் ஒன்றிணைக்கப்பட்ட காணித்துண்டிலக்கம் B1 மற்றும் B2 என்ற காணிக்கு 2021 மார்ச் மாதம் 04 ஆம் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பீ.எச்.சீ. த சில்வா என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 139 ஆம் இலக்கம் காணி வரைபடத்தின்படி 03 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே: இதே காணித்துண்டின் 02ஆம் இலக்க காணித்துண்டும் கிழக்கே: ஊரகஸ்மங்கந்தியவில் இருந்து மஹ ஏதண்ட வரையிலான பிரதான வீதியும் தெற்கே: சுமித் ஹேவகே என்பவருக்கு சொந்தமான மஹவத்தையும் மேற்கே: எச்.பீ. டி. சில்வா என்பவருக்கு சொந்தமான மகவத்த மற்றும் இதே காணித்துண்டின் 02 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இக்காணித்துண்டின் விஸ்தீரணம் பத்து பேச்சஸ்களாகும். (ஏக்.0- ரூட்.0 பே. 10) இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், தாவரங்கள், பழவகைகள் மற்றும் அனைத்தும் எல்பிட்டிய காணிப்பதிவு காரியாலயத்தில் இலக்கம் J 215/25 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொது முகாமையாளர்**
**திகதி - 15.12.2023**

**இ.வீ.அ.நி.கூ.வங்கி**
**தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்**
**சேர். சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**த.பெ.இல. 2085**
**கொழும்பு 02.**

# இலங்கை நில அளவைத் திணைக்களம்

## பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கோரல்

இல 150, கிருள வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ள நில அளவைத் திணைக்களத்திற்கு உரித்தான பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடரிலக்கம் | வாகன இலக்கம் | வாகன வகை | வாகனத்தின் விபரங்கள் | விலைமனுக் காப்பீட்டுத் தொகை ரூ. | பரீட்சித்துப் பார்க்க இயலுமான இடங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 31-1637 | Mitshubishi கார் வண்டி | விற்பனை செய்வதற்கு | 50,000.00 | மாவட்ட நில அளவை அலுவலகம் மொனராகலை |
| 02 | 32-4249 | Daihutsu கார் வண்டி | விற்பனை செய்வதற்கு | 50,000.00 | மாவட்ட நில அளவை அலுவலகம் அம்பாந்தோட்டை |
| 03 | 51-0357 | Mitshubishi Double Cab L200 வண்டி | விற்பனை செய்வதற்கு | 60,000.00 | மாவட்ட நில அளவை அலுவலகம் யாழ்ப்பாணம் |

மேலே குறிப்பிடப்பட்டு உள்ள வாகனங்களை 2023.12.22 ஆம் திகதி தொடக்கம் 2024.01.17 ஆம் திகதி வரை அரச கடமைகளை மேற்கொள்ளும் நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையான காலப்பகுதியில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரின் நேரடியான கண்காணிப்பின் கீழ் பரீட்சித்துப் பார்க்க முடியும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் கொள்வனவாளர்களுக்கு 2023.12.22 ஆம் திகதி தொடக்கம் 2024.01.17 ஆம் திகதி வரை வாரத்தின் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 2.30 மணி வரையான காலப்பகுதியில் மீளச் செலுத்தப்படாத கட்டணமாக ரூ.1500.00 தொகையினை நில அளவைத் திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து விலைமனு கோருவதற்கான விண்ணப்பப்படிவத்தை நில அளவைத் திணைக்களத்தின் பெறுகைகள் மற்றும் வழங்கல் பிரிவின் சிரேஷ்ட நில அளவைகள் அத்தியட்சகரிடம் இருந்து

பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலம் மாத்திரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு வாகனத்திற்காகவும் வெவ்வேறாக ஏல உத்தரவாத விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தாமதமாகிக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் 2024.01.18 ஆம் திகதி மு.ப. 11.35 மணிக்கு நில அளவைத் திணைக்களத்தின் பெறுகைகள் மற்றும் வழங்கல் பிரிவில் விலைமனுக்கள் திறந்து வைக்கப்படுவதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற முகவர் ஒருவர் மேற்படி நிகழ்வில் பங்குபற்ற முடியும்.

மேலதிக விபரங்களுக்காக :- தொலைபேசி இலக்கம் 0112 368106 இனூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**நில அளவையாளர் நாயகம்,**
**இலங்கை நில அளவைத் திணைக்களம்,**
**இலக்கம் 150,**
**கிருள வீதி,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு 05.**
**2023.12.22**

# பெறுகை அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை, பொலன்னறுவை

பொலன்னறுவை போதனா வைத்தியசாலைக்கு மற்றும் பொலன்னறுவை சீன - இலங்கை நட்பு தேசிய ஊடுபகுப்பு விசேட வைத்தியசாலைக்கு கீழ்க்காணும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு மற்றும் உணவகத்தை நடத்திச் செல்வதற்காக ஒப்பந்தக்காரர்கள் / வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதுடன் சம்பந்தப்பட்ட 2024.01.11ம் திகதி பி.ப. 2.00 வரை கேள்விகள் கோரப்படுகின்றன.

1. உணவு கொண்டு செல்வதற்கான ட்ரொலி கொள்வனவு செய்தல் - போதனா வைத்தியசாலை, பொலன்னறுவை

| இலக்கம் | ஒப்பந்தம் / வேலையின் பெயர் | கோவை இலக்கம் | கேள்வி ஆவணக் கட்டணம் | கேள்விப் பிணைக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | Purchasing of 35 Nos of Food Trolley | THP/ACC/F8/39/2023 | 3500.00 | 150,000.00 |

2. உணவகத்தை நடத்திச் செல்லல் 2024 / 2025 - சீன - இலங்கை நட்பு தேசிய ஊடுபகுப்பு விசேட வைத்தியசாலை

| இலக்கம் | ஒப்பந்தம் / வேலையின் பெயர் | கோவை இலக்கம் | கேள்வி ஆவணக் கட்டணம் | கேள்விப் பிணைக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | உணவகத்தை நடத்திச் செல்லல் - 2024/2025 | NNSHP/ACC/PRO/ F2/28/2023 | 3500.00 | 20,000.00 |

3. 12V/120 Ah பற்றறி கொள்வனவு செய்தல் - சீன - இலங்கை நட்பு தேசிய ஊடுபகுப்பு விசேட வைத்தியசாலை

| இலக்கம் | ஒப்பந்தம் / வேலையின் பெயர் | கோவை இலக்கம் | கேள்வி ஆவணக் கட்டணம் | கேள்விப் பிணைக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | Purchasing of 128 No's of Battery (12V / 120 Ah) for DU Unit | NNSHP/ACC/PRO/ F2/28 | 3500.00 | 130,500.00 |

கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளும் போது, கேள்வி ஆவணக்கட்டணமாக இவ் வைத்தியசாலையின் கணக்காளருக்கு காசு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு அல்லது இலங்கை வங்கியின் கதுருவெல கிளை கணக்கு இல. 7040277, DIRECTOR - DISTRICT GENERAL HOSPITAL POLONNARUWA என்ற கணக்கிற்கு காசு வைப்புச் செய்து, பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன், குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்புடன் வேண்டுதல் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. கேள்விப் பத்திரங்களைக் கொள்வனவு செய்யும் போது, கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கும் உருப்படியுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பெறுமதி ரூபா 05 மில்லியனுக்கு மேற்படுவதாயின், கேள்விதாரருக்கு அல்லது அவர் சார்பாக நகல் பிரதிநிதி, உபமுகவர் அல்லது பிரதிநிதியொருவருக்கு அல்லது பெயர் குறிப்பிடுபவராக பதிவு செய்யும் சான்றிதழ், பொது ஒப்பந்த பதிவாளர், கொழும்பு இடம் பெற்றுக் கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இக் கேள்வி கோரலுடன் சம்பந்தப்பட்ட கேள்விக்கு முன்னரான கூட்டம் (Pre -Bid Meeting) 2024.01.03 மு.ப. 10.00 இற்கு பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் இரண்டாம் மாடியில் உள்ள மைத்திரிபால சிறிசேன கேட்போர் கூடத்தில் நடைபெறும். இதற்காக சமுகமளிப்பதற்கு எதிர்பார்க்கும் வழங்குநர்கள் நிறுவனத்தின் கடிதத் தலைப்புடன் 2024.01.01ம் திகதிக்கு முன் dghpolonnaruwapro@gmail.com இற்கு எழுத்துமூல வேண்டுதலை மேற்கொண்டு பதிவு செய்தல் வேண்டும்.

04. கேள்விகள் தனி உருப்படியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், தனி உருப்படியாக கேள்விகள் மதிப்பீட்டிற்கு உற்படுத்தப்படும் கேள்வி சமர்ப்பிக்கும் போது பதிலீடாக விலைமனுக்களை சமர்ப்பிக்கக் கூடாது அத்துடன், அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

05. மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும்.

06. ஆர்வம் காட்டுகின்ற மற்றும் தகைமையுள்ள கேள்விதாரர்கள/பிரதிநிதி அல்லது பெயர் குறிப்பிடப்படுபவரால் கீழ்க்காணும் விடயங்களைச் சமர்ப்பித்து கொள்வனவு செய்யப்படும் முழுமையான கேள்வித் தொகுதியொன்றின் மூலம் மாத்திரம் பொறியிடப்பட்ட கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

   i. பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, பொலன்னறுவைக்கு குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்புடன் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூல விண்ணப்பம்.

   ii. மேலே குறிப்பிட்டவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாக பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் கணக்காளருக்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு,

07. பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் கணக்காளர் தொ.பே.இல. 027 - 2225780 அல்லது 027 - 2222261 (நீடிப்பு - 362) இடமிருந்து கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், பெறுகை ஆவணங்களை 2024.01.10 வரை அலுவலக நாட்களில், மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மாத்திரம் பொலன்னறுவை போதனா வைத்தியசாலைக்கு குறித்த உருப்படிகளை அவ் வைத்தியசாலையின் "பெறுகை மற்றும் செலவுகள் முகாமைத்துவப் பிரிவு" இடமிருந்து பெற்றுக் கொள்ள முடிவதுடன், தேசிய ஊடுபகுப்பு விசேட வைத்தியசாலைக்கு குறித்த உருப்படிகளை வைத்தியசாலையில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

08. பெறுகை ஆவணங்களை உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் உருப்படியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படுவதுடன், இரு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்ட, பொறியிடப்பட்ட கேள்விகள் "தலைவர், பிரதேச பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, பொலன்னறுவை" என்ற முகவரிக்கு தபாலில் அனுப்புதல் அல்லது பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிட்டு 2024.01.11 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் (அன்றே பி.ப. 2.00 இற்கு) பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் இரண்டாம் மாடியில் உள்ள மைத்திரிபால சிறிசேன கேட்போர் கூடத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் அவை திறக்கப்படும்.

09. கேள்வி திறக்கப்படும் வேளையில் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதாயின், அது பற்றி உறுதி செய்யும் ஆவணமொன்றை குறித்த நிறவனத்தின் கடிதத் தலைப்புடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. இப் பெறுகை சம்பந்தமாக வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை, பொலன்னறுவை,**
**2023.12.19**




## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. பின்வரும் பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைக்கமைவாக இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| அடையாள இலக்கத்திற்கான தொடர்பு | பெறுகையின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் (இ.ரூபாவில்) | விலைமனு மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| **EW/04/ PT/2023/ MA/14-1** | **Tender for Dry Docking of Dredger Diyakowulla for Docking, Special and Screw Shaft Survey, Hull cleaning, painting , replacing of shaft seals** | **720,000.00** | **12,500.00** | 2024.01.18 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |
| **EW/04/ PT/2023/ MA/01-2** | **Tender for Dry Docking of Tug Nandimithra for Major overhaul of US 3001 Aquamaster propulsion units** | **600,000.00** | **12,500.00** | 2024.01.23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |
| **EW/04/ PT/2023/ MA/15-1** | **Tender for Dry Docking of M/T Gotaimbara for trouble shooting and rectifying controllable pitch mechanical feedback system of Port Side US 3001 CPP Aquamaster propulsion unit** | **483,500.00** | **3,500.00** | 2024.02.08 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |

2. 5.0 (ஐந்து) மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவத்தையும்) சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் கடல்சார் பொறியியல் தொழிலில் கப்பல்களின் கரையில் பழுதுபார்த்தல் மற்றும் கப்பல் பழுது பார்த்தல் ஆகியவற்றில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பிரதான பொறியியலாளர் (கடல்சார்) இடமிருந்து பெற்று விலைமனுவை மூடும் திகதிக்கு முன்தினம் வரையும் இலவசமாக வேலை நாட்களில் மு.ப. 10 மணிக்கும் பி.ப. 4 மணிக்குமிடையில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். .

5. 2023 டிசம்பர் 22 ஆம் திகதியிலிருந்து மேலேயுள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை (பெசேவ அடங்கலானது) வேலைநாட்களில் மு.ப. 10 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில், விலைமனுவை மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று மேலேயுள்ள முகவரியிலுள்ள கடல்சார் பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக் கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலேகுறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (கடல்சார்),**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கம்: 0094112482330.**
**தொலைநகல் இலக்கம்: 0094 11 23 42537**

## சம்மாந்துறை பிரதேச சபை

# 2024ம் ஆண்டிற்கு வழங்குநர்கள் மற்றும் தகைமை பெற்ற நிபுணர்கள் பதிவு செய்தல்

**சம்மாந்துறை பிரதேச சபைக்குத் தேவையான கீழ்க் காணும் பண்டங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்வதற்காக 2024 ஆம் ஆண்டிற்கு வழங்குநர்கள் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் இந்த அறிவித்தல் பிரசுரமான திகதி தொடக்கம் 2024.01.22 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.**

உரித்துடைய விடயங்களின் பிரகாரம் பதிவு செய்வதற்கு ஆர்வம் காட்டும் நிறுவனங்கள் மற்றும் நபர்கள் ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறாக தங்களாலே தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுக் கட்டணமாகிய ரூபா 500.00 உம், சேவைகளுக்கு ரூபா 750.00 தொகைக்கு காசுக் கட்டளையொன்று அல்லது காசோலையொன்றுடன் தலைவர்/ செயலாளர், சம்மாந்துறை பிரதேச சபை, சம்மாந்துறை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் இல்லாவிடில் கையில் கொண்டு வந்து ஒப்படைக்க முடியும். விண்ணப்பம் இடப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்கள் பதிவு செய்தல் - 2024" எனக் குறிப்பிடுதல் வேண்டும். மேலதிக விபரங்கள் 0672260043 தொலைபேசி ஊடாக விசாரித்து அறிந்து கொள்ள முடியும்.

**M.A.K.முஹம்மட்**
**தலைவர் பெறுகைக் குழு**
**சம்மாந்துறை பிரதேச சபை.**

**சம்மாந்துறை பிரதேச சபை**
**2023.12.15**

**வழங்கல் விபரம் - பதிவுக் கட்டணம் ரூ. 500.00**

01. கட்டிடப் பொருட்கள் (கருங்கல், மணல், சீமெந்து, செங்கல், கூரைத் தகடு, அஸ்பெஸ்டஸ் சீட்டு, ஏனைய நிர்மாணிப்புப் பொருட்கள்)
02. சுகாதார உபகரணங்கள், குப்பைக் கரத்தை, வீல்பரோ, சவல், மண்வெட்டி, முள்ளு, தாச்சி, கத்தி, தும்புத்தடி, விளக்குமாறு மற்றும் ஏனையவை.
03. கணனி மற்றும் பிரின்டர் உட்பட்டதாக அனைத்து கணனி துணைப்பாகங்கள் வழங்கல்.
04. மரப் பொருட்கள் மற்றும் உருக்கு உபகரணங்கள் வழங்கல் (வீட்டு/அலுவலக)
05. அலுவலக உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள்.
06. வீதி விளக்கு மற்றும் அனைத்து வகையான மின்சார உபகரணங்கள்.
07. நீர் உபகரணங்கள்.
08. எழுது பொருட்கள்.
09. அனைத்து வகையான அச்சு வேலைகள்.
10. புளொக், இறப்பர் முத்திரை ஆகியன.
11. பெயர்ப் பலகை, இலக்கத் தகடு, பெனர், ஞாபகார்த்தப் பலகை, பித்தளை/கருங்கல்)
12. சைக்கிள், கரத்தை, மதிப்பீட்டு இலக்கத் தகடு.
13. சீருடை, மற்றும் ஏனைய துணிவகைகள்.
14. டயர், டியுப், இறப்பர் பண்டங்கள், மழைக்கவசம், கையுறை.
15. கம்பூட்ஸ், சப்பாத்து மற்றும் தோல் பொருட்கள்.
16. இரும்பு, உருக்கு, சுருள் கம்பி போன்ற அனைத்து உலோகப் பொருட்கள்.
17. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்
18. கொங்கிரீட் உற்பத்திகள்.
19. மருந்துகள் வழங்கல்.
20. துண்டுக் கல் வழங்கல்.
21. கண்ணாடி கவர் மற்றும் கண்ணாடி வழங்குதல்.
22. பீங்கான் பொருட்கள் வழங்குதல்.
23. குப்பைகள் சேர்த்தலுக்கான கொம்போஸ்ட் பைகள் வழங்குதல்.

**சேவைகள் வழங்கல் விபரம் - பதிவுக் கட்டணம் ரூ.750.00**

24. வாகனம் புதுப்பித்தல் மற்றும் சேவை செய்தல் (நிறுவனம் மற்றும் நிபுணர்கள்)
25. ரோனியோ இயந்திரம் புதுப்பிக்கும் நிறுவனம் மற்றும் தகைமை பெற்ற தொழில் நிபுணர்கள்.
26. தட்டச்சுப் பொறி புதுப்பிக்கும் நிறுவனம் மற்றும் தகைமை பெற்ற தொழில் நிபுணர்கள்.
27. போட்டோப் பிரதி இயந்திரம் புதுப்பித்தல்.
28. தச்சுத் தொழில் நிறுவனம் மற்றும் மர ஆலை அனுபவமுள்ள தச்சு தொழிலாளர்கள்.
29. உலோக பண்டங்கள், இரும்பு மற்றும் உருக்கு பயன்படுத்தி பொறியியல் ரீதியான வேலைகள் செய்யக்கூடிய நிறுவனம் மற்றும் தகைமை பெற்ற தொழில் நிபுணர்கள்.
30. கட்டிட மின்சார அமைப்பு தயாரித்தல் தகைமை பெற்ற தொழில் நிபுணர்கள்.
31. வெல்டிங் தொழில் நிறுவனம் மற்றும் நிபுணர்கள்.
32. கணனி புதுப்பித்தல், மற்றும் சேவை செய்யும் நிறுவனம் அந்த அறிவுள்ள தகைமை பெற்ற நிபுணர்கள்.
33. டயர் மீள நிரப்பும் நிறுவனம்.
34. கனரக வாகனம் வழங்கல் (பெகோ இயந்திரம், புல்டோசர், மோட்டர் கிரேடர்)
35. தகனகூடம் தொடர்பாக வேலைகள் செய்யக்கூடிய நிறுவனம் மற்றும் அனுபவமுள்ள தகைமை பெற்ற நிபுணர்கள்.
36. காணிகள் அளத்தல் தொடர்பான தகைமை பெற்ற நிபுணர்கள்.
37. நீர் மோட்டார் புதுப்பித்தல் நிறுவனம் மற்றும் தகைமை பெற்ற நிபுணர்கள்.
38. மதிப்பீடு செய்யப்பட்ட நியமக் குறியீடுகளுக்கு அமைவாக நிர்மாணிப்பு மற்றும் சேவை வழங்கக்கூடிய தகைமை பெற்ற ஒப்பந்தக்காரர்கள்.
39. ஒலி பெருக்கி இயந்திரங்கள், மின் பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் தொடர்பாடல் உபகரணங்கள் வழங்கல்.
40. வாடகை அடிப்படையில் வாகனங்கள் (வேன் வாகனம், முச்சக்கர வண்டி, கெப் வாகனம், லொறிகள் ஆகியன)
41. தையல் கலைஞர் சேவை வழங்கல்.
42. புகைப்படங்கள் பிரேம் இடுதல்.
43. குப்பை போக்குவரத்து டிராக்டர், டிரெயிலர் மற்றும் கை வண்டிகள் பழுதுபார்த்தல்.
44. உணவு பானங்கள் போன்றன வழங்கல்.

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

WP-KJ-4886-TOYOTA-YARIS-MOTOR CAR-2008-DARK BLUE அதியுயர் விலைக்கு. CBC பினான்ஸ் எல்டிடீ, 187, கட்டுகஸ்தோ ட்ட வீதி , கண்டி. தொலைபேசி 0812081033 . 084186

### 111 ஹொண்டா கார்கள் விற்பனைக்கு

HZ-9541 - Honda city, 2000 Car கூடிய விலைக்கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொ ழும்பு 03. தொ .பே 071454295 8. 084059

### 117 வேன்கள் விற்பனைக்கு

253 - 6415 Toyota hiace, 1993, Van. கூடிய விலைக்கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொ ழும்பு 03. தொ .பே 071454295 8. 084060

## வேலைவாய்ப்பு

### 325 தொழில்துறை பொது

சாசரண பராமரிப்பு நிலையத்திற்கு நோயாளர்களைப் பராமரிப்பதற்கு பயிற்சி பெற்ற/ பெறாத ஆண்/ பெண் ஊழியர்க ள் சேர்த்துக் கொள்ளப்படுவர். தினமும் சம்பளம் ஒரு நாள் சம்பளம் ரூ. 2000/= தேவைப்படும் ஆவணங்கள் கிராம அதிகாரி சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையும். உடனடியாக அழையுங்கள் 011-7604526, 0776315983, 075230679 7, 0766542999. 083757

## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

### 1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55

கொழும்பு மாவட்டத்தின் இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில் வத்துமுல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 521009 துண்டு இல. 03 பத்திர இல. 01 துண்டு இல. 46ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல 523/3C எக்கமுத்து மாவத்தை, காலி வீதி, கல்கிசை (விலாசம்) எனும் விலாசத்தைக் கொண்ட ஜானகே ஜயசேன (முழுப்பெயர்) எனும் ஆள் மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 5/3,3ம் ஒழுங்கை இரத்மலானை என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.01.22 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

## மரணசானமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

### 1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55

கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவில் கபுராகல்ல எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 510633 துண்டு இல. 05 பத்திர இல. ...... துண்டு இல. 66 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல 331/3 கபுராகல்ல ருக்கஹவில யடவர (விலாசம்) என்னும் விலாசத்தைக் கொண்ட ஆரச்சிகே சோமசந்திர (முழுப்பெயர்) எனும் ஆள் மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் 49/1/B படதொலே வீதி நிட்டம்புவ என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.01.22 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**




## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

# திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

### ரூ. 77,500 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2023 டிசம்பர் 27ஆம் திகதி ஏலவிற்பனையினூடாக வழங்கப்படும்.

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124C292 | LKA18224F284 | LKA36424L278 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 27,500 | 25,000 | 25,000 | 77,500 |

ஏல விற்பனைத் திகதி : 2023 டிசம்பர் 27
தீர்ப்பனவுத் திகதி : 2023 டிசம்பா 29
வழங்கப்படும் திகதி : 2023 டிசம்பர் 29
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 டிசம்பர் 27 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்கள்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்கலாம்.

| முதனிலை வணிகர்களின் பட்டியல் | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்.எஸ்.பீ. பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

### நீர்ப்பாசன அமைச்சு

### இலங்கை மஹாவலி அதிகாரசபை ( இமஅ – MASL)

# ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் 2024 ஆம் ஆண்டிற்கானது

2024 ஆம் ஆண்டிற்காக அரசாங்க பெறுகை கைநூல் 2006 ஆம் ஆண்டின் 3.4 பிரிவின் ''சந்தைவிலை ஒப்பீட்டு நடைமுறையை'' பின்பற்றி செயற்படுத்துவதற்கு தேவைப்படின், கீழே பட்டியலிடப்பட்டுள்ளவாறு மஹாவலி முறைமைகள்/பிரதேசங்களில் நிர்மாண வேலைகளுக்காக தகுதியுள்ள ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கு இலங்கை மஹாவலி அதிகாரசபை உத்தேசித்துள்ளது.

1. முறைமை B
2. முறைமை C
3. முறைமை D
4. முறைமை G/மொரகஹகந்த
5. முறைமை H
6. முறைமை L
7. ஹுருளுவெவ
8. வளவ்வே
9. பாரிய அணைக்கட்டுகள் மற்றும் நீர்த்தேக்க செயற்பாடு
10. தலைமையலுவலகம்
11. ரம்பகென் ஓய
12. முறைமை E

இந்த நோக்கத்திற்காக 2024.01.22 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 500 ஆம் இலக்கத்திலுள்ள 9 ஆம் மாடியின் இமஅ பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

CIDA இல் பதிவு செய்யப்பட்டவர்கள் இது தொடர்பாக இமஅ இனால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தில் தேவைப்படுத்தப்பட்டவாறான தகவலை வழங்குவதில் பதிவு செய்வதற்காக விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர்.

ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள் **2023.12.22 ஆம் திகதியிலிருந்து 2024.01.19 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக 1000 ரூபாவை செலுத்திய பின்னர் வார நாட்களில் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 500 ஆம் இலக்கத்திலுள்ள 3 ஆம் மாடியின் இமஅ, இன் தொழில்நுட்ப சேவைகளுக்கான பிரதி பணிப்பாளர் நாயகத்திடமிருந்து, கொழும்பிற்கு அப்பால் எனின் பாரிய அணைக்கட்டுகள் மற்றும் நீர்த்தேக்க செயற்பாட்டு அலுவலகம், -டிஜின/ அனைத்து செயற்றிட்ட நிலையாக வதியும் முகாமையாளர்களின் அலுவலகங்கள் / அனைத்து செயற்றிட்ட பணிப்பாளர்களின் அலுவலகங்கள் அல்லது தனிநபராக / கம்பனியொன்றாக/ நிறுவன தலைப்புக் கடிதத்தில் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்ப தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட பதிவு செய்தல் விண்ணப்பமானது இரு பிரதிகளில் தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் ''Registration of Contractors for 2024 – Works'' என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவே மூடும் நேரத்திற்கு முன்னரான திட்டவட்டமாக மேலேயுள்ள இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியின் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே அதே முகவரியிலுள்ள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு, 011-2687475, 011-2689651 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக இலங்கை மஹாவலி அதிகாரசபையின் தொழில்நுட்ப சேவைகளுக்கான பிரதி பணிப்பாளர் நாயகத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை மஹாவலி அதிகாரசபை.**

## பெறுகை அறிவித்தல்

# சிறைச்சாலைகள் திணைக்களம்

### 2024 / 2025 வருடங்களில் சிறைக்கூடங்கள் மற்றும் நீதிமன்றங்களுக்கு முற்படுத்தப்படும் சிறைக் கைதிகள் / சந்தேக நபர்களுக்கு சமைத்த உணவு வழங்குதல்

01. 2024/2025 வருடங்களில் சிறைக்கூடங்கள் மற்றும் நீதிமன்றங்களிற்கு முற்படுத்தப்படும் சிறைக் கைதிகள்/ சந்தேக நபர்களுக்கு சமைத்த உணவுகளை பெற்றுக்கொள்வதற்கு கொழும்பு 09, பேஸ்லைன் வீதி, 150ஆம் இலக்க முகவரியிலமைந்துள்ள சிறைச்சாலைகள் திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவரினால் இலங்கை வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.
02. எந்த நிறுவனத்திற்காக விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன போன்ற உரித்துடைய விபரங்கள், விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனங்கள் மற்றும் ஒப்படைக்க வேண்டிய நிறுவனங்கள் என்பன பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. விலைமனு ஆவணங்களை சிறைச்சாலைகள் திணைக்கள தலைமை அலுவலகம் மற்றும் குறித்த நிறுவனங்களில் 2023-12-23ஆம் திகதி முதல் 2024-01-29ஆம் திகதி வரையான காலத்தில் பி.ப. 2.30 மணி வரை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
03. விலைமனுதாரர்களுக்கு சமைத்த உணவுகள் வழங்குதல் தொடர்பில் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட கால அனுபவம் இருப்பதாக கிராம சேவையாளரினால் விலைக்கோரல் ஆவணத்தின் 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்தினால் சான்றுபடுத்துதல் வேண்டும் என்பதுடன் அது பிரதேச செயலாளரின் மேலொப்பம் இடப்பட்டு உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.
04. அந்தந்த நிறுவனங்களின் கீழ் தரப்பட்டுள்ள பெறுமதிக்காக பெற்றுக்கொண்ட சொத்துச் சான்றிதழ் தொடர்பான இணைப்பு 01ஐ பூரணப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும். இதற்காக பிரதேச செயலகங்களில் கட்டணங்கள் அறவிடப்பட மாட்டாது என்பதுடன் இந்த மாதிரிப்படிவங்கள் கிராம உத்தியோகத்தர் மற்றும் குறித்த பிரதேச செயலாளரின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சொத்துச் சான்றிதழின் பெறுமதி தொடர்பான விபரங்கள் விலைக்கோரல் படிவத்தின் 04ஆம் இணைப்பில் தரப்பட்டுள்ளன.
05. விலைமனுதாரர்களினால் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது காலை, மதிய / இரவு உணவுகளைத் தயாரிப்பதற்கு சுகாதார பாதுகாப்புடன் கூடிய இடமொன்று உள்ளதெனவும், சுகாதாரப் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்தி உணவுகள் தயாரிக்கப்படுவதாகவும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் சிறைச்சாலை நிறுவனங்களுக்கு இயைபான நீதிமன்றம் மற்றும் சிறைக்கூடங்களுக்கு இயைபான துறைக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் சான்றுபடுத்திய சுகாதார அமைச்சின் H800 (திருத்தப்பட்ட) 2011 மாதிரியை விலைக்கோரல் ஆவணத்துடன் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. விலைமனுக்கள் 2023-12-22ஆம் திகதி மு.ப. 10.00 மணி முதல் 2024-01-29ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை சிறைச்சாலைகள் தலைமையகம் மற்றும் இயைபுடைய நிறுவனங்களினால் வழங்கப்படும் என்பதுடன் 2024-01-30ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை இயைபுடைய நிறுவனங்களினால் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். 2024-01-30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இயைபுடைய சிறைச்சாலை நிறுவனத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின் ஒப்படைக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் செல்லுபடியாகும் கடிதம் சகிதம் கலந்து கொள்ளலாம்..

**குறிப்பு**

1. அனைத்து நிறுவனங்களுக்குமான விபரங்கள் மற்றும் விலைமனுப் படிவங்களை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களிலிருந்தும் அதற்குப் புறம்பாக கொழும்பு 09, பேஸ்லைன் வீதி, இல. 150, என்ற முகவரியிலமைந்துள்ள சிறைச்சாலைத் தலைமையகத்தின் வழங்கற் பிரிவிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.
2. ஒரு நீதிமன்றம் அல்லது சிறைச்கூடம் ஒன்றிற்காக விலைமனுப் படிவங்களையும் மற்றும் விபரங்களையும் பெற்றுக்கொள்கையில், மீளளிக்கப்படாத 1,500/- ரூபாவிற்கான கட்டணம் மற்றும் ஒவ்வொரு நிறுவனங்கள் பொருட்டும் மீளளிக்கப்படும் பிணைத்தொகையொன்று ரொக்கப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும். குறித்த பிணைத்தொகை தொடர்பான விபரங்களை, விலைமனுப் படிவங்களை வழங்கும் நிறுவனங்களிலிருந்து அல்லது சிறைச்சாலைத் தலைமையகத்தின் வழங்கற் பிரிவிலிருந்து 2023-12-23ஆம் திகதி மு.ப. 10.00 மணி முதல் 2024-01-29ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
3. முழு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அல்லது விலைமனுவின் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழுவின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**எச்.எம்.டீ.என். உபுல்தெனிய,**
**சிறைச்சாலை ஆணையாளர் நாயகம்.**
**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு**
**சிறைச்சாலைத் தலைமையகம்**
**பேஸ்லைன் வீதி,**
**கொழும்பு-09.**
**2023-12-22.**

## அட்டவணை

விலைமனுப் படிவங்கள் வழங்கப்படும் / ஏற்றுக்கொள்ளப்படும் சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் சமைத்த உணவு தேவைப்படும் நிறுவனங்களின் அட்டவணை

1. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - மஹர**
   கம்பஹா சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
   பூகொட நீதிமன்றம்
   அத்தனகல்ல நீதிமன்றம்
2. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - போகம்பர (தும்பர)**
   ஹட்டன் சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
   கம்பளை சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
   நாவலப்பிட்டிய நீதிமன்றம்
   மாத்தளை சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
   தம்புள்ள நீதிமன்றம்
   தெல்தெனிய நீதிமன்றம்
   நாஉல சுற்றுலா நீதிமன்றம்
   கண்டி நீதிமன்றம்
   லக்கல நீதிமன்றம்
   பன்வில நீதிமன்றம்
   கலகெதர நீதிமன்றம்
3. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - கேகாலை**
   குருணாகல் சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
   மாவனல்லை நீதிமன்றம்
   பொல்கஹவெல நீதிமன்றம்
   வறக்காபொல நீதிமன்றம்
   ரம்படகல்ல நீதிமன்றம்
   பிளஸ்ஸ நீதிமன்றம்
4. **உதவி சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - மாத்தறை**
   மொரவக்க நீதிமன்றம்
5. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - நீர்கொழும்பு**
   புத்தளம் சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
   சிலாபம் சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
   மாரவில நீதிமன்றம்
   மினுவங்கொடை நீதிமன்றம்
   ஆனமடுவ நீதிமன்றம்
   கல்பிட்டிய நீதிமன்றம்
6. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - மெகசின்**
   கல்கிசை நீதிமன்றம்
   கங்கொடவில நீதிமன்றம்
   மொரட்டுவ நீதிமன்றம்
7. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - கொழும்பு ரிமாண்ட்**
   கடுவெல நீதிமன்றம்
   ஹோமாகம நீதிமன்றம்
   கெஸ்பாவ நீதிமன்றம்
8. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - களுத்துறை**
   ஹொரண நீதிமன்றம்
   மத்துகம நீதிமன்றம்
   பாணந்துறை நீதிமன்றம்
9. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - குருவிட்ட**
   அவிசாவளை சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
   இரத்தினபுரி நீதிமன்றம்
   பலாங்கொட சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
   ருவன்வெல்ல நீதிமன்றம்
   பெல்மடுல்ல நீதிமன்றம்
   இரக்குவானை நீதிமன்றம்
   கலவான நீதிமன்றம்
10. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - அநுராதபுரம்**
    நொச்சியாகம நீதிமன்றம்
    கெப்பிதிகொல்லாவ நீதிமன்றம்
    கெகிராவ நீதிமன்றம்
    கஹடகஸ்திகிலிய நீதிமன்றம்
    தம்புத்தேகம நீதிமன்றம்
    மதவாச்சி நீதிமன்றம்
    பதவிய நீதிமன்றம்
11. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - திருகோணமலை.**
    கந்தளாய் நீதிமன்றம்
    மூதூர் நீதிமன்றம்
    குச்சவெளி நீதிமன்றம்
    கிண்ணியா நீதிமன்றம்
12. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - மட்டக்களப்பு**
    கல்முனை சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
    அக்கரைப்பற்று நீதிமன்றம்
    பொத்துவில் நீதிமன்றம்
    வாழைச்சேனை நீதிமன்றம்
    வாகரை சுற்றுலா நீதிமன்றம்
    சம்மாந்துறை நீதிமன்றம்
    ஏராவூர் சுற்றுலா நீதிமன்றம்
    களுவாஞ்சிகுடி நீதிமன்றம்
13. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - பதுளை**
    பண்டாரவளை நீதிமன்றம்
    நுவரெலியா சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
    மஹியங்கனை நீதிமன்றம்
    பசறை நீதிமன்றம்
    வெலிமட நீதிமன்றம்
    வலப்பனை நீதிமன்றம்
14. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - காலி**
    பலப்பிட்டிய சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
    எல்பிட்டிய சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
    உடுகம நீதிமன்றம்
15. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - அங்குனுகொலபெலஸ்ஸ**
    வலஸ்முல்ல நீதிமன்றம்
    ஹம்பந்தொட்டை சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
    எம்பிலிபிட்டிய சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
    திஸ்ஸமஹாராம நீதிமன்றம்
    தங்காலை நீதிமன்றம்
16. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - யாழ்ப்பாணம்**
    பருத்தித்துறை நீதிமன்றம்
    மல்லாகம் நீதிமன்றம்
    ஊர்காவற்றுறை நீதிமன்றம்
    சாவகச்சேரி நீதிமன்றம்
    கிளிநொச்சி நீதிமன்றம்
17. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - மொனராகலை**
    வெல்லவாய நீதிமன்றம்
    அம்பாறை சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
    பிபில நீதிமன்றம்
    சியம்பலாண்டுவ நீதிமன்றம்
18. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - பொலன்னறுவை**
    ஹிங்குரக்கொட நீதிமன்றம்
    தெஹிஅத்தகண்டிய நீதிமன்றம்
    பக்கமூன நீதிமன்றம்
19. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - வாரியப்பொல**
    குளியாப்பிட்டிய சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
    நிகவரட்டிய நீதிமன்றம்
    நாரம்மல நீதிமன்றம்
    மாஹோ சிறைக்கூடம் மற்றும் நீதிமன்றம்
    ஹெட்டிபொல நீதிமன்றம்
    கல்கமுவ நீதிமன்றம்
20. **சிறைச்சாலைகள் அத்தியட்சகர் - வவுனியா**
    முல்லைத்தீவு நீதிமன்றம்
    மன்னார் சிறைச்கூடம் மற்றும் நீதிமன்றம்
    மாங்குளம் நீதிமன்றம்

Sunday Observer adz
தினகரன்

| Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words) | | |
|---|---|---|
| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# குருநாகல் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவிற்காக நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் பணியாட் தொகுதியினரை ஆட்சேர்த்தல்

குருநாகல் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவிற்காக நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் பின்வரும் பதவிகளுக்காக பணியாட் தொகுதியினரை ஆட்சேர்ப்பதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள குருநாகல் மாநகர சபை எல்லைக்குள் மற்றும் குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு அண்மையில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவங்களை 2024-01-15ஆம் திகதிக்கு முன் ''மாநகர ஆணையாளர், மாநகர சபை, குருநாகல்'' எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

03. தகைமைகள்

| தொ. இல. | பதவியின் பெயர் | வெற்றிட எண்ணிக்கை | கொடுப்பனவு | கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் | தொழில்ரீதியாக பெற்றுள்ள அனுபவம் |
|---|---|---|---|---|---|
| 01 | தாதி உத்தியோகத்தர் | 02 | 32,525.00 ரூபா அடிப்படை மாதாந்த கொடுப்பனவுடன் அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு தற்போது செலுத்தப்படும் வாழ்க்கைச் செலவுப் படி / இடைக்காலக் கொடுப்பனவு மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் | கல்வி<br>க.பொ.த. (உ. தரப்) பரீட்சையில் விஞ்ஞானப் பாடப்பரப்பிற்குரிய உயிரியல், கணிதம், விவசாயப் பாடப்பரப்பின் சகல பாடங்களிலும் ஒரே சித்தியடைந்திருத்தல் வேண்டும் மற்றும் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கில பாடங்களில் திறமைச் சித்தி சகிதம் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>தொழில்சார்<br>அரச தாதியர் பாடசாலைகளில் தாதியர் உத்தியோகத்தர் பயிற்சி அல்லது இராணுவ சேவையில் தாதியர் உத்தியோகத்தர் பயிற்சி அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் விஞ்ஞானமானி (தாதியர்) பட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல். | அரச தாதியர் பாடசாலைகளில் தாதி உத்தியோகத்தர் பயிற்சி அல்லது இராணுவ சேவையில் தாதியர் உத்தியோகத்தர் பயிற்சி இருந்தால் 10 வருடத்திற்கு மேற்பட்ட சேவை அனுபவம் இருத்தல் அவசியமாகும்.<br><br>விஞ்ஞானமானி (தாதியர்) பட்டத்தைப் பூர்த்தி செய்திருந்தால் 05 வருட கால சேவை அனுபவம் போதுமானதாகும். |
| 02 | உதவியாளர் (Attendant) (பெண் / ஆண்) | 02 | 25,250.00 ரூபா அடிப்படை மாதாந்த கொடுப்பனவுடன் அரச சேவையில் உள்ள ஊழியருக்கு தற்போது செலுத்தப்படும் வாழ்க்கைச் செலவுப் படி / இடைக்காலக் கொடுப்பனவு மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் | க.பொ.த (சா.தர) பரீட்சையில் ஆகக் குறைந்தது விருப்புப் பாடங்கள் தவிர்ந்த 02 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>இந்த பதவிக்கு இயைபான தொழில் தொடர்பில் NVQ level 2/3 மட்டத்தில் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். | உதவியாளர் துறையில் அரச நிறுவனம் / அரச கூட்டுத்தாபனம் / சபை / நியதிகள் நிறுவனம் அல்லது வேறு அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் 2 வருட கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல். |

04. ஆட்சேர்ப்பதற்கு இயைபான ஏனைய தகைமைகள்:
- I. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் 18 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் என்பதுடன் தாதி உத்தியோகத்தர் பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் முப்படை சேவையில் இருந்தவர்களானால் ஓய்வுபெற்றவர் அல்லது சட்டபூர்வமான சேவையில் இருந்து விலகியவர் என்பதற்காக முப்படை தளபதிகளினால் வழங்கப்பட்ட சான்றிதழ் அவசியமாகும்.
- II. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
- III. விண்ணப்பதாரர் சிறந்த நடத்தையுள்ளவராகவும் சிறந்த தேகாரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.
- IV. குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை பெறாதவராக இருத்தல் வேண்டும்.

05. மாதிரி விண்ணப்பப் படிவத்தை பிழையின்றி பூர்த்தி செய்து அத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் சான்றுபடுத்திய புகைப்படப் பிரதி சகிதம் 2024-01-15ஆம் திகதிக்கு முன் கிடைக்கச் செய்யவும்.
- I. பிறப்பத்தாட்சி சான்றிதழ்
- II. கல்விச் சான்றிதழ்
- III. வதிவை உறுதி செய்யும் கிராம சேவையாளரின் சான்றிதழ்
- IV. தொழில்சார் தேர்ச்சி மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்
- V. அண்மையில் பெற்றுக்கொண்ட நன்னடத்தைச் சான்றிதழ்

06. அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர் என்பதுடன் முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்று் 05ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**குருநாகல்.**

**திகதி: 2023-12-19**

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**மத்திய அதிவேக வீதியின் 11ஆம் கட்டத்தின் கீழ் குருநாகல் மாநகர சபை தீயணைப்புப் பிரிவை நிறுவுவதற்கு இயைபான செயற்றிட்டத்திற்காக நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் பணியாட்தொகுதியினரை ஆட்சேர்த்தல்**

..........................................................................
(பதவியின் பெயர்)

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :
..........................................................................

02. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :
..........................................................................

03. நிரந்தர முகவரி : ..........................................................

04. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..............................

05. பிறந்த திகதி :
வருடம்.................. மாதம்........................ திகதி.....................

06. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் வயது:
வருடங்கள் ............ மாதம்..................... நாள்.....................

07. விவாக நிலை :
..........................................................................

08. இனம்:
..........................................................................

09. தொலைபேசி இலக்கம்:
..........................................................................

10. நீங்கள் இலங்கைப் பிரஜையா?
..........................................................................
அவ்வாறானால் பரம்பரையினாலா? ☐
பதிவினாலா? ☐

11. கல்வித் தகைமைகள்:
* இறுதியாக சித்தியடைந்த வருடம்:
* க.பொ.த. (சா.தர) பரீட்சை:
சித்தியடைந்த வருடம்: ....................................
பரீட்சை சுட்டெண் : ............................

| தொ. இல. | பாடம் | சித்தி | தொ. இல. | பாடம் | சித்தி |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

* க.பொ.த. (உ.தர) பரீட்சை:
சித்தியடைந்த வருடம்: ..................................
பரீட்சை சுட்டெண்: ..................................

| தொ. இல. | பாடம் | சித்தி |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

* பட்டம் :
பட்டம் வழங்கிய திகதி:
பட்டம் வழங்கிய பல்கலைக்கழகம்:

12. நீங்கள் குற்றமொன்றுக்காக அல்லது குற்றச்சாட்டிற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
..........................................................

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நானறிந்த வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என இத்தால் சான்றளிக்கின்றேன். இங்கு உள்ளடக்கியுள்ள மேற்கூறப்பட்ட தகவல்கள் பொய்யென நிரூபனமானால் நான் சேவைக்கு ஆட்சேர்க்கப்படுவதற்கு முன் தகைமையற்றவனாவேன் என்பதுடன் நியமனம் பெற்றதன் பின் அவ்வாறான விடயம் நிரூபனமானால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதை நானறிவேன்.

திகதி: ................

...............................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்


Trusted Marketplace of Classified Advertisers




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361


# பெறுகை அறிவித்தல்

# அரச அச்சக கூட்டுத்தாபனம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல் - (NCB) இறக்குமதிகள்

கீழேயுள்ள பண்டங்களின் வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் உள்ளூர் முகவர்களிடமிருந்து அரச அச்சக கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| FILE REFERENCE | QTY (M/ Tons) | ITEM | BID BOND (Rs.) |
|---|---|---|---|
| SPC/SUP/F1/001/2023/33 | 450 (±5%) | Procurement of imported White Printing Paper in Reels 750mm/70 (±2.5% gsm) | 1,790,000.00 |
| SPC/SUP/F1/001/2023/34 | 125 (±5%) | P rocurement of Single side coated Board White Back in Packets/ 100shts/ 508x635mm/ 230 (±3.5% gsm) | 500,000.00 |

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
2. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக விலைமனுதாரர் பின்வரும் தகுதித்தன்மை தகவுத்திறனுடன் இணைந்தொழுகுதல் வேண்டும்.
   அ. முகவராண்மையின் நிலபரத்தை உறுதிசெய்வதற்கான உற்பத்தியாளரின் அதிகாரம்/அற்றோணித்தத்துவம்
   ஆ. செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வர்த்தக பதிவு
3. 2023.12.29 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அரச அச்சக கூட்டுத்தாபனத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
4. 2023.12.23 ஆம் திகதியிலிருந்து 2024.01.11 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு தொகுதிக்கும் 5,000 ரூபாவை செலுத்திய பின்னர், பாதுக்க, பாணலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன, வழங்கல் முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி குறிப்பீடு குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், 2024.01.12 ஆம் திகதியன்று பி.ப.2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பாதுக்க, பாணலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன, வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், அரச அச்சக கூட்டுத்தாபனம், பாணலுவ, பாதுக்க என்ற மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நிகழ்விற்கு சமுகமளிக்கலாம்.
6. விலைமனுவானது அதனை மூடும் திகதியலிருந்து 30 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கோரும்போது பெற்றுக் கொள்ளும் விலைமனு உத்தரவாத பணவைப்புக்கள் அல்லது நிபந்தனையற்றதும், தலைவர், அரச அச்சக கூட்டுத்தாபனம் என்ற முகவரிக்கு செலுத்தக்கூடிய வங்கி உத்தரவாதமானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை 011-2757500 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக / தொலைநகலூடாக வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அரச அச்சக கூட்டுத்தாபனம்,**
**பாணலுவ, பாதுக்க.**
**22.12.2023.**

SPC

# நீர்கொழும்பு மாநகர சபை

## 2024 வருடத்திற்கென வரிப்பணம் வரி அறவிடல்

நீர்கொழும்பு மாநகர அதிகார நிறைவேற்று கருமம் ஆற்றுகின்ற நீர்கொழும்பு மாநகர சபையின் நகராட்சி ஆணையாளர் டப்ள்யூ.ஏ.டி. பிரபாத் லக்ஷ்மன் ஆகிய நான் நீர்கொழும்பு மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 286(அ) உறுப்புரையோடு இணைத்து வாசிக்கப்படுகின்ற அக்கட்டளை சட்டத்தின் 230(1) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நீர்கொழும்பு மாநகர சபை அதிகார பிரதேசத்திற்காக 2024 ஆண்டிற்கு வரிபண வரி அறவீடு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் அறவிடப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதாவது,

நீர்கொழும்பு மாநகர சபை கட்டளை சட்டத்தின் 238 (1) கீழ் நீர்கொழும்பு மாநகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் நீர்கொழும்பு மாநகர சபை எல்லையினுள் காணப்படும் வீடுகள், கட்டிடங்கள், காணிகளின் வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் கடந்த வருட மதிப்பீட்டினை இவ்வருடத்திற்கான மதிப்பீட்டின் மீது நீர்கொழும்பு மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 286(அ) உறுப்புரையோடு இணைத்து வாசிக்கப்படுகின்ற அக்கட்டளை சட்டத்தின் 230(1) உபஉறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக என்னிடம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி நீர்கொழும்பு மாநகர சபை பிரதான அலுவலகத்திற்குட்பட்ட அதிகார பிரதேசத்திற்காக, மேலே கூறப்பட்டுள்ள ஆதனங்களின் மீது குறித்த மதிப்பீட்டின் அடிப்படையில் வருடாந்த பெறுமதியின் மீது கீழ் குறிப்பிடப்படும் வகையில் கட்டணங்கள் வரிபண வரி அறவீடு செய்யப்பட வேண்டும் என 2023.07.24 திகதிய தீர்மானம் 310ன் கீழும், கொச்சிக்கடை உபகாரியாலய எல்லையினுள் காணப்படும் வீடுகள், கட்டிடங்கள், காணிகளின் வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் கடந்த வருட மதிப்பீட்டினை 2024 ம் வருடத்திற்கான மதிப்பீட்டின் மீது மாநகரசபை கட்டளைச்சட்டத்தின் 286(அ) உறுப்புரையோடு இணைத்து வாசிக்கப்படுகின்ற அக்கட்டளை சட்டத்தின் 230(1) உபஉறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக என்னிடம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி கொச்சிக்கடை உபகாரியாலயத்திற்குட்பட்ட அதிகார பிரதேசத்திற்காக, மேலே கூறப்பட்டுள்ள ஆதனங்களின் மீது குறித்த மதிப்பீட்டின் அடிப்படையில் வருடாந்த பெறுமதியின் மீது கீழ் குறிப்பிடப்படும் வகையில் கட்டணங்கள் வரிபண வரி அறவீடு செய்யப்பட வேண்டும் என 2023.07.26 திகதிய தீர்மானம் 308 ன் கீழும்,

தலாஹேன உபகாரியாலய எல்லையினுள் காணப்படும் வீடுகள்,கட்டிடங்கள்,காணிகளின் வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் கடந்த வருட மதிப்பீட்டினை 2024 ம் வருடத்திற்கான மதிப்பீட்டின் மீது மாநகரசபை கட்டளைச்சட்டத்தின் 286(அ) உறுப்புரையோடு இணைத்து வாசிக்கப்படுகின்ற அக்கட்டளை சட்டத்தின் 230(1) உபஉறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக என்னிடம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி தலாஹேன உபகாரியாலயத்திற்குட்பட்ட அதிகார பிரதேசத்திற்காக, மேலே கூறப்பட்டுள்ள ஆதனங்களின் மீது குறித்த மதிப்பீட்டின் அடிப்படையில் வருடாந்த பெறுமதியின் மீது கீழ் குறிப்பிடப்படும் வகையில் கட்டணங்கள் வரிபண வரி அறவீடு செய்யப்பட வேண்டும் என 2023.07.11 திகதிய தீர்மானம் 269 ன் கீழும், தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

| அதிகார பிரதேசம் | நீர்க்கொழும்பு மாநகர சபை பிரதான அலுவலகத்திற்குட்பட்ட அதிகார பிரதேசத்திற்காக | கொச்சிக்கடை உப காரியாலயத்திற்குட்பட்ட அதிகார பிரதேசத்திற்காக | தலாஹேன உப காரியாலயத்திற்குட்பட்ட அதிகார பிரதேசத்திற்காக |
|---|---|---|---|
| வணிக ஆதணங்களின் வருடாந்த மதிப்பீட்டின் மீது | 14% | 10% | 11% |
| வீட்டு ஆதனங்களின் வருடாந்த மதிப்பீட்டின் மீது | 7% | 5% | 5% |

அத்தோடு 2024 ஆண்டின் கீழ் குறிப்பிடப்படும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு தவணைகளுக்காக குறித்த திகதிக்கு முன்னதாக வருடாந்த வரிபணம் நகர சபை கணக்கிற்கு செலுத்தப்பட வேண்டுவதோடு, அவ்விதம் வருடாந்த வரிபண அறவீட்டினை 2024 ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ம் திகதி அல்லது அதற்கு முன்னதாக செலுத்துவதாயின் வரியின் பெறுமதியிலிருந்து 10% கழிவும், அவ் உப அட்டவணையில் ஒவ்வொரு தவணைகளுக்கும் முன்னால் உள்ள மூன்றாவது நிரலில் காட்டப்பட்டுள்ள திகதிக்கு முன்னதாக குறித்த கட்டணத்தை மாநகர சபை கணக்கிற்கு செலுத்தும் போது ஒவ்வொரு தவணைக்குமான கட்டணத்தின் 5% கழிவும்,வரி செலுத்தும் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளமையையும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**உப அட்டவணை**

| தவணை | செலுத்தவேண்டிய திகதி | 5% கழிவை பெற செலுத்த வேண்டிய இறுதித் திகதி |
|---|---|---|
| முதல் தவணை | ஜனவரி 01 - மார்ச் 31 | ஜனவரி 31 |
| 2வது தவணை | ஏப்ரல் 01 - ஜூன் 30 | ஏப்ரல் 30 |
| 3வது தவணை | ஜூலை 01 - செப்டெம்பர் 30 | ஜூலை 31 |
| 4வது தவணை | ஒக்டோபர் 01 - டிசம்பர் 31 | ஒக்டோபர் 31 |

உங்களால் செலுத்தப்படுகின்ற வரிபணம், உங்களது பொது நன்மைக்காகவே பயன்படுத்தப்படுவதனால் வரிபணத்தை உரிய திகதியில் செலுத்தி உங்களது ஒத்துழைப்பினை வழங்கும் படி கேட்டுகொள்கிறேன்.

**நகராட்சி ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**